₹10

fmpb

அறைகூவல்

Volume 52 | Issue 5 | May 2022

அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.

(ரோமர் 8:28)

ஆரம்ப வரிகள்...

உன்னத திட்டத்தில் பொருந்துதல்!

நமது தேவன் முக்காலத்திற்கும் உரிய தெய்வமாக இருப்பதால், அவர் வருங்காலத்தில் நடக்க இருப்பதையறிந்து, அதற்கேற்றார்போல் திட்டமிட்டு, அவற்றை நம்மிடையே நடைமுறைப்படுத்துவதைப் பலவிதங்களில் காணலாம். வேதாகமத்திலிருந்து தேவனின் உன்னத திட்டத்தைப் பற்றி அநேக உதாரணங்களைக் குறிப்பிடலாம். குறிப்பாக, கிதியோனின் சேனை போரிட்டு வெற்றியடைவதற்கு தேவனிடம் ஓர் உன்னத திட்டமிருந்ததை அவர்கள் கண்டுபிடித்தனர். (நியா.7:1-23). இதிலிருந்து தேவனுடைய உன்னத திட்டத்தில் நமது திட்டம் பொருந்துவதற்கு மூன்று காரியங்கள் மிகவும் அவசியம் என்பதை நாம் கண்டு கொள்ளலாம்.

முதலாவதாக, தேவ திட்டத்திற்கு நமது ஒப்புக்கொடுத்தல் மிகவும் தேவை. கிதியோனிடம் 32,000 படைவீரர்கள் காணப்பட்டனர். ஆனால், அவன் தேவனுடைய திட்டத்தில் தன்னைப் பொருத்திக் கொள்வதற்காக, தனது இராணுவமும், பதவியும், செல்வாக்கும் குறைக்கப்படுவதற்கு அவன் தன்னை ஒப்புக்கொடுத்தான். ஏனெனில் யுத்தம் தன்னையோ, தனது இராணுவத்தையோ, தனது எதிரிகளைப் பற்றியதோ அல்ல; மாறாக, இந்த யுத்தம் கர்த்தருடையது என்பதை கிதியோன் அறிந்துணர்ந்து, தனது திட்டங்களை ஒதுக்கிவைத்துவிட்டு, தேவனுடைய உன்னத திட்டத்திற்கு முழுவதுமாகத் தன்னைக் கையளித்ததைப் பார்க்கிறோம்.

இரண்டாவதாக, தேவ திட்டத்திற்கு நமது கீழ்ப்படிதல் தேவை. கிதியோன் தேவ திட்டத்திற்குக் கீழ்ப்படிந்ததினால், தனது யுத்த வீரர்களின் ஆயுதங்களையும், தனது ஆணையையும் திரும்பப் பெற்றதோடு, படைவீரர்களில் முதலாவது 22,000 பேரையும், பின்னர் 9,700 பேரையும் போரிடாமல் திரும்பி அனுப்பினதைப் பார்க்கிறோம். கிதியோனும் எஞ்சியிருந்த 300 யுத்த ஜனங்களும், இந்த யுத்தத்தில் உயிர்ப் பிழைக்க தேவ திட்டத்திற்குத் தாங்கள் கீழ்ப்படிந்து நடந்தால்தான் முடியும் என்பதை அவர்கள் நன்கு உணர்ந்திருந்தனர்.

மூன்றாவதாக, தேவ திட்டத்திற்கு விசுவாசமும் அதில் உறுதிபாடும் மிகவும் தேவை. யுத்தத்தில் ஆயிரக்கணக்கான வீரர்களுக்கு எதிராகப் போரிட ஆயுதமற்ற, சொற்பமாகக் காணப்படும் 300 யுத்த வீரர்கள் போதும் என்கிற தேவ திட்டத்தில், விசுவாசமும் அதில் உறுதிபாடும் அவர்களுக்கு மிகவும் தேவையாக இருந்தது. யுத்தத்தில் அவர்கள் ஆயுதங்களுக்குப் பதிலாக எக்காளங்களை ஊதவும், பானைகளை உடைக்கவும், தீவட்டிகளைக் கொளுத்தவும் அவர்களுக்கு மிகவும் விசுவாசம் தேவையாக இருந்தது. அவர்களுடைய விசுவாசத்திற்குப் பலனாக, தேவன் அவர்களுக்கு ஒரு அற்புதமான வெற்றியை அந்த யுத்தத்தில் கொடுத்ததை அறிகிறோம்.

பேதுருவும் மற்றவர்களும் இராமுழுவதும் மீன்பிடிக்க முயற்சி செய்தும், மீன் ஒன்றும் கிடைக்காமல் வீட்டிற்குப் புறப்பட்ட போது, இயேசு அவர்களை ஆழத்தில்போய் மீன்பிடிக்க அறிவுறுத்தியதற்கு அவர்கள் கீழ்ப்படிந்ததின் விளைவாக, ஆண்டவரின் உன்னத திட்டத்தின்படி அவர்கள் 'மனிதர்களைப் பிடிக்கிறவர்களாக' மாற்றப்பட்டனர்.

இயேசு தாம் சிலுவையிலறையப்பட்டு மரிக்கப்போகிறேன் என்று தமது சீஷர்களிடம் கூறியபோது, பேதுரு ஆண்டவரின் உன்னத திட்டத்தை அறியாது, அவரைக் கடிந்துகொண்டார் (மத்.16:21-23). ஆனால், இயேசு தமது சிலுவை மரணத்தின் மூலம் உலக இரட்சகராக வெற்றியடைந்தபோது, பேதுரு ஆண்டவரின் உன்னத திட்டத்தின் சிறப்பைப் புரிந்து கொண்டார்.

எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட வேண்டும் (1தீமோ.2:4) என்பது தேவ ராஜ்யத்திற்கான பிரதான திட்டமாகும். இதைத்தான் கிறிஸ்து சீஷர்களுக்குத் தாம் கற்பித்த ஜெபத்தில், "உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக" (மத்.6:10) என்று குறிப்பிட்டுள்ளதில் தேவனின் உன்னத திட்டம் முழுவதுமாக அடங்கியுள்ளதைக் காணலாம். எனவே, தேவனுடைய "தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று" (ரோ.8:28) நாம் அறிந்துணர்ந்து, தேவனுடைய உன்னத திட்டத்தில் நல்வெற்றியடைவதற்காக நம்மை முழுவதுமாகப் பொருத்திக் கொள்ளலாமே!

- **J.J. ஹாரிஸ்** *(தகவல் தொடர்புத்துறை)*

"நமது வாழ்க்கைக்கான தேவனின் திட்டத்தைக் கண்டுபிடித்து, அதன்படி வாழ்வதே, நமது வாழ்க்கையின் உயர்ந்த இலட்சியமாகும்." - E. ஸ்டான்லி ஜோன்ஸ்

நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்குமுன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம்பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன் என்று சொன்னார். (எரேமியா 1:5)

பரிசுத்த ஆவியானவர் கூறுகிறார்: "நீங்கள்தான் தேவனின் அந்தத் திட்டம். தாகம் நிறைந்த உலகில், மக்கள் உங்களால் தாகம் தீர்ந்து புத்துணர்ச்சி பெற வேண்டும். இந்தப் பிளவுப்பட்ட உலகில், மக்கள் உங்களால் ஆரோக்கியமடைய வேண்டும்." - ஜான் ஆர்ட்பெர்க்

கர்த்தருடைய ஆலோசனை நித்தியகாலமாகவும், அவருடைய இருதயத்தின் நினைவுகள் தலைமுறை தலைமுறையாகவும் நிற்கும். (சங்கீதம் 33:11)

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

நமது தரிசனம்:

சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது.

நமது ஊழியம்:

தேசமக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறவும், சமுதாயத்தை மறுரூபப்படுத்த உதவி செய்யவும் இந்தியத் திருச்சபைகளை அதிக அளவில் ஈடுபட வைப்பதற்கான நோக்கத்தைப் பகிர்ந்து கொள்வது.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தனது சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச்சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள். இதில் நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

feedbackfmpb@fmpb.org
உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம்.

அறைகூவல்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்
மாதம் ஒருமுறை மலரும் சத்தியப்பூ

ஆசிரியர்: S. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்

தனிப்பிரதி ரூ.10/-	வெளிநாடு
ஆண்டு சந்தா ரூ.48/-	ஆண்டு சந்தா ரூ.480/-
ஆயுள் சந்தா ரூ.500/-	ஆயுள் சந்தா ரூ.5000/-

தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை - 53. தொலைபேசி: 044-26570404
பேக்ஸ்: 044-26573353 கைபேசி: 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*

பொதுச்செயலாளரிடமிருந்து...

கிறிஸ்துவின் பிரதான கட்டளையை நிறைவேற்றும் பணியில்

எனது அன்பு உடன்பங்குதாரர்களே,

உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2021-22-ம் நிதியாண்டிற்கான பணித்தளம் மற்றும் விரிவுப்பணி துறைகளிலிருந்து ஒருங்கிணைக்கப்பட்ட தரவுகள் (Data) இறுதி வடிவம் பெற்றுள்ளது. நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தில் இத்தகைய ஆசீர்வாதங்களை நல்கிய நமது தேவன் எவ்வளவு உண்மையுள்ளவர் என்பதை நாம் அறிந்துணரும்போது, நம் இதயங்கள் நன்றிப்பெருக்கால் நிரம்பி வழிகின்றன. கடந்த நிதியாண்டில், நமது மிஷனெரிகள் 8,500-க்கும் மேற்பட்ட புதிய கிராமங்களையும் 9.75 இலட்ச மக்களையும் சுவிசேஷத்தால் சந்திப்பதற்கு தேவன் பெரிதும் உதவினார். கொரோனா தொற்றுநோயினால் ஊரடங்கு மற்றும் பல கட்டுப்பாடுகள் இருந்த போதிலும், இச்சாதனையை தேவ ஒத்தாசையால்தான் நம்மால் அடைய முடிந்தது. விரிவுப்பணி துறையிலும் தேவன் ரூ.75 கோடியைத் தந்து, நமது ஊழியத்தேவைகளைப் பூர்த்தி செய்துள்ளார். இவ்வித ஆசீர்வாதங்களை நமது பணித்தளம் மற்றும் விரிவுப்பணி துறைகளில் அடைவதற்காக மிகுந்த தியாகம் மற்றும் அர்ப்பணிப்புடன் ஊழியங்களைச் செய்த நமது அனைத்து மிஷனெரிகள், கௌரவ விரிவுப்பணி செயலாளர்கள், ஜெபக்குழுத்தலைவர்கள் மற்றும் ஜெபவீரர்களுக்கு நான் மனதார நன்றி கூறுகிறேன்.

"ஆதலால், அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக்கொள்ளக்கடவோம். நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே." (எபி.12:28&29)

நாம் அசைக்க முடியாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாக இருப்பதால், நன்றியுள்ள இருதயத்தோடும் பயபக்தியோடும் தேவனை ஆராதிப்பது மட்டுமன்றி, அந்த அசைக்க முடியாத ராஜ்யத்தை விரிவுப்படுத்துவதற்கான உன்னத திட்டத்தையும் நாம் தொடர வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

1000 மணிநேர ஜெபம்:

கடந்த ஆண்டுகளைப்போலவே, இந்த ஆண்டும் 2022, மார்ச் 2-ம் தேதி முதல் ஏப்ரல் 13-ம் தேதி வரை ஜெபக்குழுக்களிலும், பணித்தளங்கள் மற்றும் தலைமைச்செயலகத்திலும் 1000 மணி நேர ஜெபங்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றன. இந்த ஜெபக்கூடுகைகளில் தேசத்தின் இரட்சிப்பிற்காக ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டன.

தூத்துக்குடி - மில்லர்புரம் கன்வென்ஷன்:

கடந்த 2022, ஏப்ரல் 1-3-ம் தேதிகளில் மில்லர்புரம்-சி.எஸ்.ஐ. தேவாலயத்தில் வைத்து நடைபெற்ற தவசு கால சிறப்புக்கூட்டங்களில் தேவார்த்தைகளைப் பகர்ந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. தேவன் அக்கூட்டங்களை மிகவும் ஆசீர்வதித்துத் தந்ததோடு, அக்கூடுகை மூலம் அநேகர் சுவிசேஷத்தை இதுவரை பெற்றிராத நமது தேச மக்களுக்காக ஜெபிக்கும் பாரத்தைப் பெறும்படி கிருபை செய்தார். இக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை அருட்திரு. சைமன் தர்மராஜ் அவர்கள் மிகச்சிறப்பாக ஒழுங்குச் செய்திருந்தார்கள்.

சி.எஸ்.ஐ - திருநெல்வேலி பேராயர் சந்திப்பு:

நான் நமது இயக்கத்தின் துணைத்தலைவர், விரிவுப்பணி செயலாளர்கள் மற்றும் ஜெபக் குழுத்தலைவர்களுடன் சேர்ந்து, சி.எஸ்.ஐ. திருநெல்வேலி பேராயர் மாமறைதிரு. ARGST. பர்னபாஸ் அவர்களைக் கடந்த ஏப்ரல் 4-ம் தேதி சந்தித்தேன். கனத்திற்குரிய பிஷப் அவர்கள் எங்களை மிகவும் உற்சாகத்தோடு வரவேற்று, நமது ஊழியங்களைத் தொடர்ந்து ஆதரிப்பதாக உறுதியளித்தார்கள்.

கெர்காம் விடுதியின் நிலப்பதிவு:

குஜராத் மாநிலம் - கெர்காமில் உள்ள நமது விடுதி நிலம் கடந்த சில ஆண்டுகளாக சர்ச்சையில் காணப்பட்டது. கடந்த ஏப்ரல் மாதம் 8-ம் தேதி தேவ ஒத்தாசையால் அந்நிலம் சார்ந்த அனைத்து பிரச்சனைகளும் நல்ல தீர்வுக்கு வந்து, சட்டப்படி அந்நிலம் நமது இயக்கத்திற்கு உரியது என்பது உறுதி செய்யப்பட்டது.

ஜான்சி விடுதியின் நில அங்கீகாரம்:

உத்தரப் பிரதேசம் - ஜான்சியிலுள்ள நமது சிறுவர் இல்லம் ஒரு வாடகைக்கட்டிடத்தில் செயல்பட்டு வந்தது. அந்த இல்லத்திலுள்ள குழந்தைகளுக்குச் சரியான தங்குமிடத்தை வழங்க நாம் பல முயற்சிகளை மேற் கொண்டோம்; ஆயினும், அதற்குண்டான அதிக செலவீனங்களின் நிமித்தம் நாம் அதைச் செய்ய முடியவில்லை. இப்போது தேவ கிருபையாலும் அநேகருடைய ஜெபத்தினாலும், இவ்விடுதியை மேம்படுத்துவதற்கான திட்டம் அங்கீகரிக்கப்பட்டு, அதன் கட்டுமானப்பணிகள் தொடங்கப்பட உள்ளது.

மும்பை கூட்டங்கள்:

கடந்த ஏப்ரல் 7-10-ம் தேதிகளில் மும்பை மற்றும் குஜராத்திற்குச் சென்று, 7-ம் தேதி திலக் நகர் மற்றும் தாராவியில் நடந்த ஜெபக்குழுத்தலைவர்கள் கூட்டங்களில் கலந்து கொண்டேன். மற்றும் 10-ம் தேதி, போரிவாலி தமிழ் மெதடிஸ்ட் தேவாலயத்தில் குருத்தோலை ஞாயிறு ஆராதனையில் நான் செய்தியளிப்பதற்கும், அதைத் தொடர்ந்து மும்பை மேற்குப் பகுதி ஜெபக்குழுத்தலைவர் களின் கூட்டத்தில் பங்கேற்பதற்கும் தேவன் எனக்கு உதவி செய்தார். அப்பகுதிகளில் ஜெபக்குழுக்களை உருவாக்கி, நமது ஊழியத்திற்கு நல்ஆதரவுகளைத் திரட்டி வருகிற மும்பை மத்திய மற்றும் மேற்குப் பகுதி களின் ஜெபக்குழுத்தலைவர்களுக்காக நான் தேவனைத் துதிக்கிறேன்.

சுகவீனத்திலுள்ள மிஷனெரிகளை வேலூரில் சந்தித்தல்:

கடந்த ஏப்ரல் 13-ம் தேதி நான் வேலூருக்குச் சென்று, அங்குள்ள சி.எம்.சி-யில் புற்று நோய்க்கான சிகிட்சைகளைப் பெற்றுக்கொண்டி ருக்கும் நமது மிஷனெரிகளான திருமதி. அருள் பாக்கியபாய் ஜோஷ்வா, சகோ. தீப்திலால் மல்லி ஆகியோரைச் சந்தித்தேன். சுகவீனத்தோடு காணப்படுகிற நமது மிஷனெரிகள் மற்றும் அவர்களது குடும்பங்களின் ஆரோக்கியத் திற்காக நாம் தவறாமல் ஜெபிக்க வேண்டும்.

நாசரேத் கூட்டங்கள்:

கடந்த ஏப்ரல் 16 & 17-ம் தேதிகளில், நாசரேத்தில் ஒரு ஜெபக்குழுவிலும், பின்னர் ஒரு தலைவர்கள் கூட்டத்திலும் பங்குப்பெறவும், ஈஸ்டர் ஞாயிறன்று இரண்டு ஆலயங்களில் தேவ வார்த்தைகளைப் பகர்ந்து கொள்ளவும் எனக்கு வாய்ப்புக் கிடைத்தது.

செயற்குழு கூடுகை:

நமது இயக்கத்தின் 210-வது செயற்குழு கூட்டம் வருகிற 2022, மே 7-9-ம் தேதிகளில் ஹிமாச்சலப் பி ரதேசத்திலுள்ள ராம்பூரில் வைத்து நடைபெறவிருக்கிறது. அனைத்து செயற்குழு அங்கத்தினர்களின் பிரயாணங்களுக்காகவும், அக்கூடுகையை தேவன் அபரிமிதமாக ஆசீர்வதித்துத் தரவும் ஜெபியுங்கள்.

நிர்வாகக்குழு கூட்டம்:

வரும் 2022, மே 14 & 15-ம் தேதிகளில் சென்னையில் வைத்து நமது இயக்கத்தின் நிர்வாகக்குழு கூட்டம் நடைபெறவுள்ளது. இக்கூடுகைகளின் ஆசீர்வாதங்களுக்காக தாங்கள் ஏறெடுக்கும் ஜெபம் மிகவும் பாராட்டப் படத்தக்கதாகும்.

தமிழ்நாடு மாநில முகாம்:

இம்முகாம் வருகிற 2022, ஜுன் 2-5-ம் தேதிகளில் சேலத்திலுள்ள பெத்தேல் - டேனிஷ் பேட்டையில் வைத்து நடைபெறவிருக்கிறது. மிகவும் கடினமான இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் குடும்பங்களாக நாம் ஒருவரையொருவர் சந்தித்து, தேவன் நமக்குப் பாராட்டின நன்மை களையும் கிருபைகளையும் ஒருவருக்கொருவர் பகிர்ந்துக்கொள்ள அதிக ஆவலுடன் இம்முகாமிற்காகக் காத்திருக்கிறோம். தமிழ் மிஷனெரிப்பணி வரலாற்றில் நடைபெறும் இம்முக்கிய நிகழ்வில் பங்கேற்க தங்களை இருகரம் கூப்பி, அன்புடன் வரவேற்கிறோம்.

தேவ ஊழியத்தில் தங்கள் சக ஊழியன்,

அருள்திரு. S. ஜாண் பெர்லின்

எரேமியாவின் எதிரொலி அன்றும், இன்றும்

மே மாதம் வந்தவுடன் நமது நினைவுக்கு வருவது, தமிழ்நாடு மாநில முகாம். கடந்த இரண்டு ஆண்டுகளாக கொரோனா நோய்த்தொற்றின் வீரியத்தின் காரணமாக அரசாங்கம் விதித்தக் கட்டுப்பாடுகளுக்கு இணங்கி, மாநில முகாமை நேரடியாக நடத்த இயலாத சூழ்நிலையிலிருந்தோம். ஆனாலும் கடந்த ஆண்டு இணையத்தின் வழியாக மாநில முகாமை நடத்துவதற்கு ஆண்டவர் கிருபை பாராட்டினார். இந்த ஆண்டின் மாநில முகாமைப் பெத்தேல் வளாகத்தில் வைத்து நடத்துவதற்கு முடிவெடுக்கக் கர்த்தர் உதவி செய்துள்ளார். இருப்பினும் நமது மாநில பள்ளித்தேர்வுகள் மே மாத இறுதியில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதால், இவ்வருட மாநில முகாமை ஜூன் மாதம் 2 முதல் 5-ம் தேதி வரை நடத்தத் தீர்மானித்துள்ளோம்.

இந்த வருட மாநில முகாமின் கருப்பொருள் “உன்னத திட்டத்தை நோக்கி” என்பது, இது எரேமியா 29:11-ஐ மையமாக்கிய கருப்பொருள். இவ்வருடத்தின் முதல் அறைகூவல் இதழின் செய்தியில் நமது பொதுச்செயலாளர் இதை அறிமுகம் செய்து எழுதியிருந்தார். பிப்ரவரி மாதம் நடைபெற்ற நமது தேசிய திட்டக் கூடுகையிலும் இந்தக் கருப்பொருளை மையமாக்கி ஊழியக்காரியங்களைத் திட்டமிடுவதற்குக் கர்த்தர் உதவினார். ஆகிலும் இதைக்குறித்து மீண்டும் சற்று விரிவாகச் சிந்திப்பது நமக்கு நலமாயிருக்கும்.

பின்னணி

எரேமியா பழைய ஏற்பாடு நாட்களில் கர்த்தரால் வல்லமையாகப் பயன் படுத்தப்பட்ட ஒரு தீர்க்கதரிசி. இவர் தனது இளம்பருவமாகிய 20 வயதிலேயே கர்த்தர் கொடுத்த நேரடி அழைப்பிற்குக் கீழ்ப்படிந்து கடினமான தீர்க்கதரிசனப்பணியை மிகக் கொடிய நாட்களில் நிறைவேற்றியவர். யோசியா, யோவாகாஸ், யோயாக்கீம், யோயாச்சின், சிதேக்கியா என்ற ஐந்து அரசர்கள் அரசாண்ட சுமார் 40 வருடங்கள் தேவ வார்த்தைகளைத் தெளிவாய்க் கூறியவர், இவர் (சில வேதப்பண்டிதர்கள் - எரேமியா 50 வருடங்கள் தீர்க்கதரிசனப் பணியைச் செய்திருக்கலாம் என்று கூறு கின்றனர்). யோசியாவைத் தவிர மற்ற நான்கு அரசர்களும் துன்மார்க்கர்கள்; துன்மார்க்கமாய் அரசாண்டவர்கள். அந்நாட்களில் வாழ்ந்த யூத மக்களும் தாங்கள் விரும்பியபடி வாழ்ந்தனர். கர்த்தருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப் படியாமல், விக்கிரக வணக்கத்திற்குத் திரும்பி, பொய் தீர்க்கதரிசிகளுக்குச் செவிகொடுத்து வாழ்ந்தனர்.

இந்த நாட்களில் மக்களின் பாவங்களைக் கண்டித்து உணர்த்தும் ஒரு தீர்க்கதரிசியாக

எரேமியா இருந்தார். அவருடைய வார்த்தைகள் தெளிவாகவும், கண்டிப்பான தாகவும் இருந்தது. அவர் மென்மையான வார்த்தைகளைப் பயன்படுத்தாமல், மக்களைப் பிரியப்படுத்தும் விதத்தில் பேசாமல், மிகவும் கடினமான, கண்டிப்பான வார்த்தைகளைப் பயன்படுத்தினார். கர்த்தரின் சித்தத்தை மறைமுகமாகக் கூற முயற்சிக்காமல், சுற்றி வளைத்துப் பேசாமல், வெளிப்படையாகவும், நேரிடையாகவும் அவர் பேசியதை எரேமியா புத்தகம் முழுமையிலும் படிக்கிறோம். இதன் விளைவாக எரேமியா - மக்களாலும் அதிகார வர்க்கத்தாலும் விரும்பப்படாதவராகவும், பிரபலமாகாத ஒரு ஊழியராகவும் வாழ்ந்ததை நாம் பார்க்க முடியும்.

நமது நாட்களிலும் பெரும்பான்மையான ஊழியர்கள் நேரடியாகவும் வெளிப்படையாகவும் பாவத்தில் வாழும் மக்களைக் கண்டிப்பதைத் தவிர்த்து, மறைமுகமாகவும் சுற்றி வளைத்துப் பேசுவதையும் வழக்கமாகக் கொண்டுள்ளனர். கண்டித்தும் கடினமாகவும் பேசாமல், மென்மையாக மக்கள் விரும்பும் விதத்தில் பேசுவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். மக்களைச் சந்தோஷப்படுத்தும் விதத்தில் பணிபுரிய வேண்டும் என்பதிலும், மக்கள் மத்தியில் பிரபலமான, புகழ் பெற்றவர்களாக ஊழியம் செய்யவேண்டும் என்பதிலும் குறியாயிருக்கும் ஊழியர்கள் பலரை இன்று நாம் காண முடிகிறது. இன்றைய ஊழியர்களுக்கு எரேமியா ஒரு சவாலான நல்ல மாதிரி.

சாதகமற்ற சூழ்நிலை

அன்று: கர்த்தர் விரும்பாத வாழ்வின் முறைகளை யூதர்கள் பின்பற்றியதால், அவர்கள் கர்த்தரின் கோபத்திற்குள்ளானார்கள். முற்காலங்களில் பலமுறை இம்மக்கள் பாவம் செய்திருந்தும், கர்த்தர் அவர்களைத் திரும்பத் திரும்ப மீட்டார். பின்பு அவருடைய பொறுமை முடிவுக்கு வந்துவிட்டது போல் தோன்றுகிறது. எரேமியாவின் தொடர்ச்சியான எச்சரிப்புக்களை உதாசீனம் செய்த யூதர்கள், பாபிலோனியர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகின்றனர். யூதாவைக் கைப்பற்றி அடிமைப்படுத்தவும், எருசலேம் நகரை அழிக்கவும் கர்த்தர் பாபிலோனிய அரசனான நேபுகாத்நேச்சாரைப் பயன்படுத்தினார்.

இன்று: நமது தேசத்தைப் பொறுத்த மட்டில், கிறிஸ்தவர்கள் கர்த்தர் விரும்புகிற விதத்தில் வாழ்ந்து, அவர் இட்ட ஆணையை நிறைவேற்றி இந்தியாவைச் சுவிசேஷமயமாக்கத் தவறியதினிமித்தம் மதவாத சக்திகள் மூலம் பல்வேறு அழுத்தங்களை ஆண்டவர் நமக்கு அனுமதித்துள்ளார். இந்நாட்களில் நற்செய்தி அறிவிக்க சாதகமான அரசியல் சூழல் கிடையாது. ஊழியங்களுக்குப் பலவிதமான எதிர்ப்புகளும், தடைகளும் காணப்படுகின்றன. ஊழியர்கள் அச்சுறுத்தப்படுவதும், சிறையில் அடைக்கப்படுவதும், ஊழியர்கள்மேல் பொய் வழக்குகள் சுமத்தப்படுவதும் சர்வ சாதாரண நிகழ்வுகள் ஆகிவிட்டன. ஆலயங்கள் இடிக்கப்படுகின்றன. ஆராதனைகள் தடுக்கப்படுகின்றன. ஜெபக்கூடங்கள் கட்டப்படுவதற்கு அனுமதிகள் மறுக்கப்படுகின்றன. கட்டாய மத மாற்ற தடைச்சட்டம் பல மாநிலங்களில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. தாங்கள் விரும்பும் தெய்வத்தை வணங்கும் உரிமை மக்களுக்கு மறுக்கப்படுகிறது. மத நல்லிணக்கத்துடன் மக்கள் வாழ வாய்ப்புகள் இல்லாத சூழ்நிலைகளை மதவாத இயக்கங்கள் ஏற்படுத்துவதைக் காண்கிறோம்.

சாதகமற்ற சூழ்நிலைகளைச் சாதகமாக்க கர்த்தரின் உன்னத திட்டம்

சிறைபிடிக்கப்பட்டு பாபிலோனுக்கு அடிமைகளாகக் கொண்டுச்செல்லப்பட்ட

யூதர்களும், எருசலேமில் தங்கிய யூதர்களும் மிகுந்த வேதனையை அனுபவித்தார்கள். பொய் தீர்க்கதரிசிகளின் தீர்க்கதரிசனங்களை ஏற்று, இரண்டு வருடங்களில் தங்கள் சிறையிருப்பைக் கர்த்தர் நீக்குவார் என்பதை நம்பினார்கள். சிறையிருப்பிலிருந்த யூதர்களுக்கு எரேமியா ஒரு கடிதம் எழுதுகிறார். அது தனிப்பட்ட நபர்களுக்கு எழுதப்படாமல், ஒரு கூட்ட மக்களுக்கு எழுதப்பட்ட ஒரு கடிதம். எரேமியா 29-ம் அதிகாரத்தில் நாம் படிக்கும் இக்கடிதம், அந்நிய தேசத்தில் அந்நியர்களாக தங்களது அனைத்தையும் - தேசத்தை, வீடுகளை, வாழ்வாதாரங்களை, தங்கள் சுதந்தரத்தை இழந்து வாழும் மக்களுக்கு எழுதப்பட்டது. இதில் சிறையிருப்பிலிருந்து தப்பிய மக்களுக்கு நேரிடுவது என்னவென்றும், சிறையிருப்பு நெடுங்காலமாக இருக்குமென்றும், சிறையிருப்பிலிருக்கும் மக்கள் எப்படி தங்கள் வாழ்வை அமைத்துக் கொள்ளவேண்டுமென்றும் எரேமியா எழுதுகிறார்.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளைச் சிட்சித்தாலும், அவர்களுக்கென்று ஒரு உன்னத திட்டம் வைத்திருப்பதாக எரேமியா 29:11-ல் கூறுகிறார். தமது மக்கள் மேல் அவர் வைத்திருக்கும் நினைவுகள் தீமைக்கல்ல, சமாதானத்துக் கேதுவானவைகளே என்று கர்த்தர் கூறுவதையும் எழுதுகிறார். இந்த வசனம் இன்றைய செழிப்பு உபதேசத்தில் ஊறிப்போன ஊழியர்களுக்கு மிகவும் பிடித்தமான வசனம். மேலோட்டமாக இந்த வசனத்தைப் படித்தால், ஆண்டவர் நமக்கென்று ஒரு பெரிய திட்டம் வைத்திருப்பது போலவும், நமக்கென அவருக்கு ஒரு பெரிய கனவு இருப்பதைப் போலவும், நமக்கு நிரந்தர பாதுகாப்பையும், செழிப்பையும் அவர் அருளுவது போலவும், நமது எதிர்காலப் பிரயாசங்களை அவர் வெற்றியாக ஆசீர்வதிப்பார் என்பது போலவும் தோன்றும். ஆனால், அதுவல்ல இந்த வசனத்தின் உண்மையான அர்த்தம். கர்த்தர் வைத்திருக்கும் திட்டங்களோ, அவரது நினைவுகளோ உடனடியாக நிறைவேறாது. கடைசி நேர அற்புதங்கள் நடப்பதற்கும் வாய்ப்புகள் இல்லை. இந்தச் சூழ்நிலையில் சில காரியங்களை நாம் செய்ய வேண்டும் என்று ஆண்டவர் அறிவுறுத்துகிறார். அவைகள் என்ன?

(அ) மனரம்மியமாக வாழச் சொல்கிறார்:

அன்று: எரேமியா 29:4-6 வசனங்களில் சாதகமற்ற சூழ்நிலையில் சந்தோஷமாக, சமாதானமாக மன நிறைவுடன், சாதாரணமாக வாழச் சொல்கிறார். வீடுகளைக் கட்டி குடியிருக்கச் சொல்கிறார். தோட்டங்களை உருவாக்கி, அவைகளின் பலனை அனுபவிக்கச் சொல்கிறார். தங்கள் பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து சந்ததியை அதிகரிக்கச் சொல்கிறார். அவர்கள் வாழும் இடத்தில் குறுகாமல் பெருகச் சொல்கிறார். கர்த்தர் தமது உன்னத திட்டங்களை ஏற்றகாலத்தில் நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையுடன் இவ்வாறு வாழ அறிவுறுத்துகிறார்.

இன்று: உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடாகிய இந்தியாவில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக வன்முறை அதிகரித்து வருகிறது. சிறுபான்மையினரான கிறிஸ்தவர்கள் மீது பெருமளவிலான வெறுப்பைக் காண்பித்து, அவர்களுக்குத் துன்புறுத்தல்களைக் கொடுப்பதோடு, மதமாற்ற தடைச்சட்டத்தையும் செயல்படுத்தி வருகின்றனர். இந்தக் கடினமான காலங்களில் வாழ்க்கையை நாம் நிறுத்த முடியாது. விரும்பத்தகாத அல்லது துன்பகரமான இச்சூழ்நிலையில், நாம் நம்மைச் சரிசெய்து, நகர்ந்து கொண்டே இருக்க வேண்டும். எனவே நமக்குக் கொடுக்கப்பட்ட பணிகளை, தொழில்களை, பொறுப்புகளை, ஊழியங்களை மனநிறைவுடன் செய்து நமது குடும்பக்

கடமைகளையும், சமுதாயக் கடமைகளையும், ஊழியப் பொறுப்புகளையும் செவ்வனே நிறைவேற்றிப் பெருக்கமான ஆசீர்வாதங்களை அனைத்து எல்லைகளிலும் அனுபவிக்க நாம் அழைக்கப்படுகிறோம். ஆண்டவர் நமது தேசத்தில், நமது குடும்பங்களில், நமது பணிகளில், நமது ஊழியப் பொறுப்புகளில் தமது உன்னத திட்டங்களை ஏற்றகாலத்தில் நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையுடன் நாம் இவ்வாறு வாழ வேண்டும்.

(ஆ) தேசத்திற்காக ஜெபிக்கச் சொல்கிறார்:

அன்று: எரேமியா 29:7-ல் "நான் உங்களைச் சிறைப்பட்டுப் போகப்பண்ணின பட்டணத்தின் சமாதானத்தைத் தேடி, அதற்காகக் கர்த்தரை விண்ணப்பம் பண்ணுங்கள். அதற்குச் சமாதான மிருக்கையில் உங்களுக்கும் சமாதானம் இருக்கும்" என்கிறார். பாபிலோனுக்கு சிறைப்பட்டுச் சென்ற யூதர்கள் பாபிலோனுக்காக ஜெபிக்க வேண்டும் என்று கர்த்தர் எரேமியா மூலம் அறிவுறுத்துகிறார். சிறைப்பட்டு அடிமைகளாக்கப்பட்டவர்கள் சமாதானமாக வாழ வேண்டுமானால், அவர்களைச் சிறைப்படுத்தின தேசத்தில் சமாதானம் நிலவ வேண்டும். எனவே, கர்த்தர் அத்தகைய சமாதானத்தைப் பாபிலோனுக்குத் தரவேண்டும் என்று கர்த்தரின் பிள்ளைகள் விண்ணப்பம் பண்ண வேண்டும் என்றார்.

இன்று: இந்நாட்களில் நமக்குத் தரப்படுகிற அறிவுரையும் இது தான். நமது தேசத்தின் சமாதானத்திற்காக, க்ஷேமத்திற்காக நாம் ஜெபிக்க வேண்டும். 1 தீமோ.2:1,2-ம் வசனங்களில் பவுல் கூறுகிற ஆலோசனையின்படி எல்லா மனுஷருக்காகவும், கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு ராஜாக்களுக்காகவும் அதிகாரமுள்ள யாவருக்காகவும் விண்ணப்பங்களையும், ஜெபங்களையும், வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும். நாம் நமது தலைவர்களுக்காக ஜெபிப்பதின் முக்கிய நோக்கம், நமது வாழ்க்கை கஷ்டமின்றி எளிதாக இருக்க வேண்டுமென்பதற்கல்ல, நாம் எல்லாப் பக்தியுடனும் நல்லொழுக்கத்துடனும் சமாதானமாக வாழ வேண்டும் என்பதற்காகவே.

(இ) தவறான தீர்க்கதரிசிகளுக்குச் செவிகொடாதிருக்கச் சொல்கிறார்:

அன்று: தவறான சத்தங்களுக்கு அல்லது தவறான தீர்க்கதரிசனங்களுக்குச் செவி கொடாதீர்கள் என்கிறார். எரேமியா 29:8,9 ஆகிய வசனங்களில் "மேலும் உங்கள் நடுவிலிருக்கிற உங்கள் தீர்க்கதரிசிகளும், உங்கள் குறிகாரரும் உங்களை மோசம் போக்கவொட்டாதிருங்கள்; சொப்பனம் காணப்பண்ணுகிற உங்கள் சொப்பனக் காரருக்குச் செவிகொடாமலும் இருங்கள் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் என் நாமத்தைச் சொல்லி உங்களுக்குப் பொய்யான தீர்க்கதரிசனம் உரைக்கிறார்கள்; நான் அவர்களை அனுப்பினதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்." கர்த்தரின் பெயரில் பொய்யான தீர்க்கதரிசனம் உரைக்கும் சில தீர்க்கதரிசிகள் அந்நாட்களில் வாழ்ந்தனர். கர்த்தர் சொல்லாதவைகளைத் தீர்க்கதரிசனமாக உரைத்து, மக்களை ஏமாற்றினர். மக்களும் அவர்கள் உரைத்த தீர்க்கதரிசனங்கள் கேட்பதற்கு இதமாக இருந்ததால், அவர்களை ஏற்றுக்கொண்டனர். கர்த்தர் எரேமியா மூலம் அப்படிப்பட்ட பொய் தீர்க்கதரிசிகளை அவர் அனுப்பியதில்லை என்றும், அவர்களை மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்றும் கூறுகிறார்.

இன்று: இன்றும் கிறிஸ்தவ சமுதாயத்தில் தவறான தீர்க்கதரிசனங்களைச்

சொல்பவர்களும் உண்டு. அவைகளை நம்புகிறவர்களும் உண்டு. இன்றைய தீர்க்கதரிசிகள் சொல்லும் ஒரு தீர்க்க தரிசனம் நிறைவேறவில்லையென்றால், அவர்களைக் 'கள்ளத்தீர்க்கதரிசிகள்' என்று ஒதுக்கித் தள்ளுவதில் என்ன தயக்கம்? அதைச் செய்யாததால் அவர்கள் திரும்பத் திரும்ப 'தீர்க்கதரிசனம்' என்ற பெயரில் தங்கள் மனதில் தோன்றியவைகளைச் சொல்லி, கிறிஸ்தவ சமூகத்தை ஏமாற்று கிறார்கள். நாம் தெரிந்திருக்க வேண்டிய அத்தனை தீர்க்கதரிசனங்களும் வேதத்தில் உண்டு. கவனமாக இருப்போம்.

(ஈ) தமது நினைவுகளை, தமது உன்னத திட்டங்களை நிறைவேற்றுவேன் எனச் சொல்கிறார்:

அன்று: எரேமியா 29:11-ம் வசனத்தில் "நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன்" என்கிறார். இந்த வாக்குத்தத்தம், பல தலைமுறைகளாகத் தவறாக வாழ்ந்தவர்களுக்கும் தவறான தீர்க்கதரிசனங்களை நம்பியவர்களுக்கும் கொடுக்கப்பட்டது. 70 வருடங்களில் அவர்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவு களை நிறைவேற்றுவதாகக் கர்த்தர் உறுதி கூறுகிறார். இறுதியாக கர்த்தர் கூறுவது, எரேமியா 29:12-14-ம் வசனங் களில், 'என்னை நோக்கி விண்ணப்பம் பண்ணும்போது, நான் செவிகொடுப்பேன்; முழு இருதயத்தோடு தேடினீர்களானால், கண்டுபிடிப்பீர்கள். நான் உங்கள் சிறை யிருப்பைத் திருப்புவேன்; உங்களை விலக்கியிருந்த ஸ்தலத்துக்கே உங்களைத் திரும்பிவரப் பண்ணுவேன்' என்கிறார்.

இன்று: நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவாக நாம் ஆண்டாண்டு காலமாகத் திட்டமிடு கிறவைகள் உடனடியாக நிறைவேறா விட்டாலும், நாம் கர்த்தரை நோக்கி விண்ணப்பம் செய்தால், முழு இருதயத் தோடு அவரைத் தேடினால், அவர் செவி கொடுப்பார். அவர் தந்த உன்னத திட்டங் களை ஏற்றகாலத்தில் நிறைவேற்றுவார்.

நமது இயக்கத்தின் துவக்க நாட்களிலிருந்தே நாம் தேவ சமுகத்தில் அமர்ந்து ஜெபித்துத் திட்டமிடுவதை நமது வழக்கமாகக் கொண்டுள்ளோம். அவர் தரும் உன்னத திட்டங்களை நோக்கி நமது பணிகளை வடிவமைப்பதையும் பழக்கமாகக் கொண்டிருக்கிறோம். தேவன் தரும் உன்னத திட்டங்களை நிறைவேற்றும் விதத்தில் நமது வெவ்வேறு பணி எல்கைகளிலும் இலக்குகள் அமைத்து முன்னேறுகிறோம். ஒவ்வொரு வருடமும் நாம் தீர்மானிக்கும் பொருளாதார இலக்குகளையோ, பணித்தள இலக்குகளையோ முழுமையாகச் சந்திக்க இயலாவிட்டாலும், முந்திய வருடங்களை விடக் கூடுதலாக அடைவதற்கு தேவ ஒத்தாசை இம்மட்டும் நம்முடன் இருந் திருக்கிறது.

2020-ம் ஆண்டில் "வீடுகள்தோறும்" என்ற நோக்க வார்த்தையை மைய மாக்கிப் பணிபுரிந்தோம். தொற்றுநோயின் தாக்கத்தினால் ஆலய ஆராதனைகள் நடத்த இயலாத சூழ்நிலையில், விசுவாசி களுடைய வீடுகள்தோறும் ஆராதனை களும், வேதாகம வகுப்புகளும் நடத்தக் கர்த்தர் உதவி செய்தார். 2021-ம் ஆண்டில் "கர்த்தர் மாறாதவர்" என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டி ருந்தோம். மிஷனெரிகள் விடுதலையோடு கிராமங்களுக்குள் சென்று பணிபுரிய முடியாத சூழ்நிலையில், நமது விசுவாசி களுடைய முயற்சிகளின் மூலம் அதற்கு முந்தைய ஆண்டை விடக் கூடுதலாக ஆத்துமாக்களைச் சுதந்தரிக்கக் கர்த்தர் கரங்கொடுத்து, 'கர்த்தர் தாம் மாறாதவர்' என்பதை நமக்கு நிரூபித்தார். இப்படி ஒவ்வொரு ஆண்டும் கர்த்தர் தமது உன்னத திட்டங்களை நோக்கி நாம் செயல்பட

நமக்கு உறுதுணையாக இருந்து வழிநடத்தி வருகிறார்.

அவரது உன்னத திட்டங்கள் நமது இயக்கத்தில், நமது வாழ்வில் ஏற்ற காலத்தில் நிறைவேற வேண்டுமானால் நாம் செய்ய வேண்டியவைகள்:

- ✔ எல்லாச் சூழ்நிலைகளிலும் மன நிறைவுடன் வாழ வேண்டும்;
- ✔ நமது தேசத்தின் சுபீட்சத்திற்காக ஜெபிக்க வேண்டும்;
- ✔ தவறான தீர்க்கதரிசிகளைத் தவிர்க்க வேண்டும்;
- ✔ ஏற்றகாலத்தில் கர்த்தர் தமது வாக்குத் தத்தத்தை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையுடன் முழு இருதயத்தோடு கர்த்தரைத் தேட வேண்டும்;
- ✔ கர்த்தரிடம் விண்ணப்பங்களை ஏறெடுக்க வேண்டும்.

நம் தலைமுறையில் நமது தேசத்தில் சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தால் நாம் சந்திக்க வேண்டும் என்ற நமது தரிசனத்தைக் கர்த்தர் நிச்சயம் நிறைவேற்றுவார்.

"திரள் கூட்டம் கிறிஸ்துவின்
அன்பை ருசித்திட

மருள் நீக்கும் இயேசுவின்
சீடராய் வாழ்ந்திட

அருள் பயக்கும் கிறிஸ்துவின்
கிருபையில் திழைத்திட

இருள் போக்கும் வேத
ஒளியில் பயணித்திட

தேவா, உமது
உன்னத திட்டங்களை நோக்கி
நாங்கள் உண்மையாய்
முன்செல்ல உதவுமே!"

என்பது நமது அனுதின ஜெப விண்ணப்ப மாகட்டும்!!

– **திரு. C. ரெஜினால்டு,** FMPB – தலைவர்.

நிதித்துறையில் தரவு உள்ளீடு செய்ய (Data Entry)

ஆட்கள் தேவை

அடிப்படை தகுதி:
இரட்சிப்பின் அனுபவம்
கல்வித் தகுதி:
12-ம் வகுப்பு அல்லது பட்டப்படிப்பு
▶ விண்ணப்பதாரர் சென்னை அல்லது அதற்கருகாமையில் இருத்தல் அவசியம்

தொடர்பு: 044-2657 0404

மற்றவர் உதவியோடு நடந்து வந்தவர், தாமாகவே நடந்து சென்றார்!

ஒடிசா, ராய்ரங்பூர் பணித்தளத்தில் பரியத் சோரேன் என்பவர் தனது கோபி நாத் கிராமத்திலிருந்து மற்றவர்கள் உதவியோடு நமது மிஷனெரிகள் நடத்திய ஒரு பெரிய கூடுகையில் மிகவும் வாஞ்சை யோடு கலந்து கொண்டார். தேவன் அவரது வாஞ்சையைக் கனப்படுத்தி, அவரது காலில் சுகம் நல்கியதால், அவர் அக்கூடுகை முடிந்ததும் வேறுயாருடைய உதவியுமின்றி தானாகவே நடந்து உற்சாகமாக வீடு திரும்பினார். அவர் தேவனை மகிமைப்படுத்திய விதம் அநேகரை விசுவாசத்திற்குள் வழிநடத்தி யுள்ளது. தேவனுக்கே மகிமை!

இந்தக் கல்வியாண்டு 2021-2022-ல் 10, 12-ம் வகுப்பு அரசாங்கப் பொதுத்தேர்வு எழுதவிருக்கும் நமது மிஷனெரிகளுடைய பிள்ளைகளின் பெயர்ப் பட்டியல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இப்பிள்ளைகளின் பெயர்களைச் சொல்லி ஜெபிக்கும்போது, நமது விடுதிகளில் 10, 12-ம் வகுப்புப் படிக்கின்ற மற்ற பிள்ளைகளையும், நமது அங்கத்தினர்களின் பிள்ளைகளையும் தங்கள் ஜெபங்களில் நினைவுகூரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

10 -ம் வகுப்பு

வ. எண்	பிள்ளையின் பெயர்	பெற்றோரின் பெயர்
1.	பிரின்ஸ் சார்லஸ்	- அருட்திரு. ஹரமோகன் பிரபுதாஸ் நாயக்
2.	ஆஷிஷ் ஜாண்	- அருட்திரு. ராம்சிங்பாய் வசாவா
3.	மகிமா	- அருட்திரு. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்
4.	ஐடா கிரேஸ்	- அருட்திரு. ஜாண் ஸ்டீபன் Y.
5.	பிரசன்ஜித் ஜோதி	- அருட்திரு. பென்ஜமீன் ஜோதி
6.	ஜோசியா ஆண்டர்சன் சாமுவேல்	- அருட்திரு. வெங்கடேசன் M.
7.	ரிச்சர்ட் L.	- திரு. அஜய் குமார் லிமா
8.	கரிஷ்மா L.	- அருட்திரு. ஹமுவேல் லிமா
9.	ரூஃப்ஸ் குமார் S.	- திரு. ஹேமந்த குமார் சபார்
10.	செலினா சிங்	- அருட்திரு. சமரேந்திர சிங்
11.	பிரகதி	- திரு. பிதுஷ் குமார் நாயக்
12.	ஜெபா ஷரோன் சிங்	- திரு. சுகாந்தோ குமார் சிங்
13.	நிகிடோலி பிளஸ்ஸி சோஃபி	- அருட்திரு. எக்டோ சோஃபி
14.	ஐடா துபிலா	- அருட்திரு. மேத்யூ K.
15.	சாமுவேல் ஜாய்சன்	- அருட்திரு. வினயராஜ் M.
16.	பிளஸ்ஸி இவாஞ்சலின் விஜய்	- அருட்திரு. விஜயகுமார் K.
17.	ஏஞ்சலின் பிளஸ்ஸி	- திரு. ஸ்ரீனிவாசன் J.
18.	ஸ்பெர்ஷிகா பால்	- அருட்திரு. பால் தயாசிங் A.Y.
19.	மௌமிதா	- அருட்திரு. முன்னா மொஹன்தியர்
20.	தீனா	- அருட்திரு. டேனியேல் விஜயராஜ்
21.	ஜாஸ்மின்	- திரு. கார்த்திகேயன் S.

22.	ஆஷர் டேவிஷ்	– திரு. செந்தில் முருகன் V.
23.	கேத்ரின் கிஃப்டி	– திரு. பிரத்யூஷ் நாயக்
24.	குளோரினா B.K.	– திரு. பசவராஜா K.
25.	அபிஷேக் போடார்	– திரு. போடார் அம்ருத்பாய் பச்சுபாய்
26.	தெரிஸ்சா G.	– திரு. கெடம் ஸ்ரீனிவாச ராவ்
27.	ஸ்டெஃபி R. மலிகர்	– திரு. ராஜா B.
28.	ஜஸ்டின் கிங் பால்	– திரு. கோன்கா கிரி பாபு
29.	ஜாண் வெஸ்லி	– திரு. மீனுகா அடப்பா (எ) மேத்யூ
30.	ஸ்துதி மேக்தலின்	– திரு. மாணிக்கம் P.
31.	பிரவீன் குமார்	– திருமதி. பத்மாவதி

12 -ம் வகுப்பு

வ. எண்	பிள்ளையின் பெயர்	பெற்றோரின் பெயர்
1.	ஜிம் எலியட்	– அருட்திரு. பால் சம்பத் T.
2.	ஆஷர் ராக்லாண்ட் J.	– அருட்திரு. ஜேக்கப் பிரதீப் குமார்
3.	அர்ப்பண் பர்தன்	– அருட்திரு. ஜுபராஜ் பர்தன்
4.	ஷைனி ஜரின்	– அருட்திரு. சஞ்ஜீப் குமார் ஆன்ட்ரப்
5.	ஸ்டேயின்ஸ் B. ரிங்கள்	– அருட்திரு. பென்ஹர் M.
6.	பெனிடிக்ஸன் மோஹபத்ரா	– அருட்திரு. ஜீவன் ரஞ்சன் மோஹபத்ரா
7.	ஆனி குட்டி மனோஜ்	– அருட்திரு. மனோஜ் P.J.
8.	ஜெயநிசி ஆஷா	– அருட்திரு. ஜாண்சன் சங்கர் I.
9.	லேகோஸ் குமார் S.	– திரு. ஹேமந்த குமார் சபார்
10.	பிளஸ்ஸிங் ராஜா	– அருட்திரு. எட்வர்ட் ராஜதுரை R.
11.	ஏஞ்சல் சுனில் குமார் வசாவா	– அருட்திரு. வசாவா சுனில் குமார்
12.	குளோரி ஜூலியா (எ) ஷீனு	– அருட்திரு. பிபாபா பானி
13.	நிலோலி சோஃபி	– அருட்திரு. எக்டோ சோஃபி
14.	கிங்ஸ்லி மோரிஸ் பாய்க்	– அருட்திரு. குணா சந்திர பாய்க்
15.	ஜாண்பால் ராக்லாண்ட்	– திரு. ஐசக் தனசிங் R.
16.	லிடியா ஒய்சிலின்	– திரு. டேனியல் அருள்மணி J.
17.	சுதீப்தா ராணி பீரோ	– அருட்திரு. சஞ்சய் குமார் பீரோ
18.	சாம் லியோ சகாயராஜ்	– திரு. ஐசக் ராஜா D.
19.	ஹத் நிங்கய் நெங் கோங்சய்	– அருட்திரு. லுன்கிம் தோங்கம் கோங்சய்
20.	அனுக்ரகா மிராக்ளின் ஹாரிஸ்	– திரு. ஜாண்பால் ஹாரிஸ் J.
21.	ஆபிரகாம் ராஜாசிங்	– திரு. பால்ராஜ் R.
22.	ஜெருஷா கரோலின்	– திரு. மோசஸ் (எ) முரளிதரன் S.
23.	கிளாடிஸ் கிருபை மலர்	– திருமதி. ஜேன் அமுத கிருபை இறைபிச்சை

மிராசி மக்களினம்
(அறிமுகம்)

மிராசி இனமக்கள் தங்களுக்குள்ளே பலதரப்பட்டவர்களாயினும், ஒரே ஜாதியினராக வடஇந்தியாவின் பகுதிகளில் இந்துக்களாக, சீக்கியர்களாக மற்றும் முஸ்லீம்களாக வாழ்ந்து வருகிறார்கள். 'பக்வாஜி' என்றும் அழைக்கப்படும் இவர்கள், டேம்பூரின் (ஜால்ரா) போன்ற இசைக் கருவியான 'டிம்ப்ரல்' என்ற இசைக்கருவியை மீட்டு, பாடல்களைப் பாடுவதில் பெயர் பெற்றவர்கள். எண்ணிக்கையில் இவர்கள் பஞ்சாபில் மட்டும் 1,12,000 மக்கள் வசிக்கிறார்கள். இவர்கள் மாகதி, உருது, ராஜஸ்தானி, பஞ்சாபி மற்றும் இந்தி மொழிகளில் பேசுகிறார்கள். 'மிராசி' என்ற சொல் 'பரம்பரை' என்று அர்த்தங்கொள்ளும் அரேபிய வார்த்தையிலிருந்து மருவி வந்துள்ளது.

இந்த மிராசி மக்களினம் பல துணைப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். ராய் – மிராசி என்போர் ஜாட் இனமக்களின் வம்சாவளியினர்; மிர் – மிராசி என்போர் 'ஆஷுரா' செயல்பாடுகளில் பங்கேற்பவர்கள்; தாதி, கலவந்த், கரியாலா, கமாச்சி என்போர் பிராமண பாரம்பரியத்தைத் தழுவியவர்கள்; முத்ரிப், நக்கல், கவ்வால் என்போர் சூஃபி என்ற கவிதைநடை பக்திப்பாடல்களைப் பாடும் பாடகர்களின் வம்சாவளியினர் மற்றும் ரபாபி என்போர் 'ரபாப்' என்ற இசைக்கருவியை மீட்டுவோரின் பாரம்பரியத்தினர் ஆவர். இந்த ரபாபி என்ற மிராசி இனமக்கள் மற்ற மிராசி சமூகங்களைப் போல் அல்லாது, இவர்கள் சீக்கிய மதத்தை நிறுவிய குரு நானக்கிற்கு முன் ரபாப் இசைக்கருவியை மீட்டும் பாய் மர்தானா மிராசியின் வம்சாவளியைப் பின்பற்றி வரும் சீக்கியர்கள் ஆவர்.

பொதுவாக, மிராசி பஞ்சாபி மக்கள் படிப்பறிவில்லாதவர்கள்; இவர்களிடையே படித்த பட்டதாரிகள் அதிகமில்லை. அடிப்படையில் இம்மக்கள் மிகவும் ஏழ்மையானவர்கள்; இவர்களுக்கென்று வீடோ, நிலமோ இல்லை. எனவே, இம்மக்கள் பொதுவாக பிறரால்

வீட்டின் அமைப்பு

ஆலய ஆராதனை

முதல் விசுவாசி–சீமா



சபை மூப்பர்– தீப் சிங்

ஊழியம் செய்யும் மிஷனெரிக்குடும்பம் அருட்திரு. ஜஸ்டின் Y.

மதிக்கப்படுவதில்லை. ஆனால், இவர்கள் தங்களைத் தாங்களே பெரியவர்கள் என்று நினைக்கிறார்கள். இவர்களது சமூகத்தில் இவர்களுக்கு அநேக பொறுப்புகள் உள்ளன. இவர்களில் பெண்களுக்குப் பொதுயிடங்களில் பேசுவதற்கு அதிகாரம் இல்லை. பெண்கள் கூடுதலாக அடிமைகளாகவே நடத்தப்படுகிறார்கள். இம்மக்கள் தங்களுக்குள்ளாகவே குழுத்தலைவர்களைத் தேர்ந்தெடுத்து, அத்தலைவர்களின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றுகிறார்கள்.

கலாச்சார அம்சங்கள்:

பொதுவாக மிராசி இனமக்கள் ஒன்றாக இணைந்து வாழ்பவர்கள். இவர்களை அவர்களுடைய ஆடை அலங்காரங்களைக் கொண்டு எளிதில் அடையாளம் காண இயலும். இவர்களது உணவுமுறை முற்றிலும் வேறுபட்டது. இவர்கள் ஒன்றாகச் சேர்ந்து சாப்பிடும் பழக்கமுடையவர்கள். இவ்வின மக்கள் தங்கள் இனத்திற்குள்ளாகவே திருமணம் செய்து கொள்கிறார்கள். இவர்களது பெற்றோர்தாமே அவர்களது பிள்ளைகளுடைய திருமணத்தை முடிவு செய்து நடத்தி வைக்கிறார்கள்.

இந்த மிராசி இனமக்களில் அநேகர் கூலித் தொழிலாளிகளாகவும், விவசாய குத்தகைதாரர்களாகவும் மற்றும் காய்கறி விற்பனையாளர்களாகவும் இருக்கின்றனர். இம்மக்கள் தங்கள் வாய்மொழியாகவே எளிய முறையில் நகைச்சுவைகள், நாட்டுப்புறக் கதைகள், பழமொழிகள் போன்றவற்றை உருவாக்குவதில் வல்லவர்கள். இது இவர்களது கலாச்சார வரலாற்றை நிரூபிக்கிறது. இம்மக்கள் சோம்பல் குணத்திற்கும் பெயர் போனவர்கள். வெப்பமான காலங்களிலும் இவர்கள் தங்களை ஒருவகை கம்பளி போன்ற போர்வைகளால் மூடிக்கொள்வர். இவ்வாறு இவர்களைக் காணும் பொழுது, எப்பொழுதெல்லாம் ஒருவரின் சோம்பேறித்தனம் குறித்த கேள்வி எழுகிறதோ அப்பொழுதெல்லாம், 'இது மிராசிகளுடைய ரசாயா' என்று மேற்கோள் காட்டி பெருமிதம் கொள்வார்கள். இவர்கள் நாட்டுப்புற இசையில் புலமைப் பெற்றவர்கள். இவ்வினமக்கள் திருவிழாக்களில் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் மூலம் பிறரை மகிழ்வித்தும், திருமண வைபவங்களில் பாடல்களைப் பாடியும் சிறப்பிப்பர். இவர்களில் நன்குப் படித்தவர்கள் அரசாங்கப்பணியிலும், இராணுவத்திலும் மற்றும் வம்சாவளிகளை ஆராய்ச்சி செய்வதிலும் ஈடுபடுகின்றனர். இவர்களுக்கு வரும் பிரச்சனைகளுக்குத் தகுந்த தீர்ப்பளிக்கவும், இவர்கள் எப்படிப்பட்ட வாழ்வுநெறிகளைப் பின்பற்றி வாழ வேண்டும் என்பதை எடுத்துரைக்கவும் இவர்களுக்கு ஒரு ஜாதி ஆலோசனைக்குழு உள்ளது. இம்மக்கள், இவர்கள் இனத்தைச் சாராதவர்களைத் திருமணம் செய்து கொள்வதில்லை.

நம்பிக்கை முறைகள்:

மிராசி மக்கள் முஸ்லீமாகவோ, இந்துவாகவோ அல்லது சீக்கியராகவோ இருக்கலாம். இவர்களில் உள்ள இந்துக்கள் பலவிதமான நம்பிக்கைகளைக் கொண்டிருக்கலாம். ஏனெனில், இவர்களுடைய இந்து மதத்திற்கான அடிப்படைக் கொள்கைகள் மிகக் குறைவாகவே உள்ளன. இவர்கள் கடவுளே இல்லை என்ற நிலையையோ அல்லது ஆயிரக்கணக்கான தெய்வங்கள் உண்டு என்ற நிலையையோ நம்பி வணங்குபவர்கள்.

உதாரணத்திற்கு,

- ✔ எல்லாக் கடவுள்களும் ஒன்றே என்பதை இவர்கள் ஏற்பார்கள். ஆனால், கடவுள் ஒருவரே என்பதை ஏற்க மறுப்பார்கள்.
- ✔ முஸ்லீம் பாரம்பரிய மிராசி மக்கள் முஸ்லீம் மத நம்பிக்கை முறைகளை நம்பிப் பின்பற்றுவார்கள்.
- ✔ இந்து பாரம்பரிய மிராசி மக்கள் அநேக தேவர்களையும் தேவதைகளையும் வணங்கும் பழக்கம் கொண்டவர்கள்.

✔ சீக்கிய பாரம்பரிய மிராசி மக்கள் சீக்கிய குருவாகிய குருநானக்கை வணங்கும் முறையைக் கையாளுவார்கள்.

இவ்வாறு இவர்கள் மூன்று பெரும் மதங்களின் நம்பிக்கைகளைப் பின்பற்றுபவர்களாய் இருப்பதால், இவர்கள் மத்தியில் ஆன்மீக குழப்பங்கள் மிகுந்து காணப்படுகின்றன.

மிராசி மக்கள் மத்தியில் நமது ஊழியம்:

இம்மக்கள் மத்தியில் ஊழியம் செய்ய கடந்த 2008 ஜுலை மாதத்தில் நமது ஊழியர் அருட்திரு. சஞ்ஜய் குமாரின் குடும்பத்தை நமது இயக்கம் அனுப்பி வைத்தது. பின்பு அருட்திரு.Y.ஜஸ்டினின் குடும்பம் 2017-ம் ஆண்டு முதல் அங்கே ஊழியம் செய்து வருகின்றனர். பிசாசின் பிடியிலிருந்தும், 6 வருடங்களாக இருந்து வந்த தீராத வயிற்று வலியிலிருந்தும் சீமா என்பவருக்கு தேவன் விடுதலை கொடுத்ததினால், இவர் இம்மக்களிடையே முதல் விசுவாசியானார். இந்த அற்புதத்தை ருசித்த சீமா, தனது சொந்த ஜனங்களுக்கு சுவிசேஷம் அறிவித்து அநேகரைக் கிறிஸ்துவண்டை கொண்டுவந்தார். கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு இவர் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். இவரைத்தொடுத்து, தீப்சிங் என்பவர் இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்டு, தற்போது நமது ஆலய ஆராதனையை நடத்தி வருகிறார். இம்மக்கள் மத்தியில் தரம்காப் எனுமிடத்தில் ஓர் ஆலயம் எழுப்பப்பட்டு, அதில் ஏறத்தாழ 45 குடும்பங்களிலிருந்து 750 நபர்கள் கூடி தேவனை ஆராதித்து வருகின்றனர்.

பொதுவாக, இந்த மிராசி இனமக்கள் சுவிசேஷ நற்செய்தியை ஏற்றுக்கொள்பவர்களல்ல. ஆயினும் சத்சங் நிகழ்ச்சி, தனித்தாள் ஊழியம் மற்றும் வீடு சந்திப்பு போன்றவைகளின் மூலம் இவர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது. இவர்கள் சுவிசேஷத்தை ஏற்பதற்கு இவர்களது சமூகத்தலைவர்களே தடையாக அமைகின்றனர். எனினும், கர்த்தரின் பெரிதான கிருபையால் நமது ஊழியத்தின் மூலம் 45 குடும்பங்கள் கிறிஸ்துவண்டை வந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலும் பெண்களே சுவிசேஷத்திற்குச் செவிசாய்க்கின்றனர். இந்த மிராசி இன விசுவாசிகளின் பிள்ளைகள் கிரமமாக வேதாகமத்தை வாசித்து வருகின்றனர்.

ஜெபக்குறிப்புகள்:

✔ இவ்வின மக்கள் மத்தியில் சுவிசேஷத்திற்குத் திறந்தவாசல் கிடைக்க;

✔ குடி மற்றும் போதைப்பொருள் பழக்கங்களுக்கு அடிமையாகியுள்ள குடும்பங்கள் அதிலிருந்து மீட்கப்பட;

✔ இவர்களது குழந்தைகளுக்குத் தகுந்த கல்வியறிவு புகட்டப்பட;

✔ இவர்களது சமூகம் வளர்ச்சியடைவதற்கென நடத்தப்படும் நிகழ்ச்சிகளுக்கான தேவைகள் சந்திக்கப்பட;

✔ இவர்களது குடும்பப் பிரச்சனைகள் அகன்று, மெய்யான தேவ சமாதானம் இவர்களது உள்ளங்களையும் இல்லங்களையும் ஆட்கொள்ள;

✔ இவர்களுக்குத் தகுந்த வேலை வாய்ப்புகள் கிடைக்க;

✔ ஞாயிறு ஆலய ஆராதனையில் கிரமமாகப் பங்குப்பெறாத விசுவாசிகள் தவறாமல் வந்து அதில் கலந்துக்கொள்ளவும், விசுவாசத்தில் பின்தங்கியிருக்கும் விசுவாசிகள் மீண்டும் விசுவாச வாழ்விற்குள் அடியெடுத்து வைக்கவும்;

✔ இவ்வின வாலிப விசுவாசிகளுக்கு ஏற்ற வாழ்க்கைத்துணைகளமைய ஜெபிப்போம்.

கர்த்தர்தாமே இந்த மிராசி இனமக்களை மென்மேலும் ஆசீர்வதித்து வழிநடத்துவாராக!

தகவல்: **அருட்திரு.Y. ஜஸ்டின்,**
FMPB - மிஷனெரி, பஞ்சாப்.

இளைஞர்களின் பணித்தள விஜயம்!

ஏழு பேர் கொண்ட குழுவாக சென்னை - குளத்தூர் பகுதியைச் சார்ந்த இளைஞர்களாகிய எங்களுக்குக் கடந்த மார்ச் மாதம் 18 முதல் 21-ம் தேதி வரை மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள எட்டப்பள்ளி பணித்தளத்தைப் பார்வையிட கிடைத்த வாய்ப்பிற்காக தேவனைத் துதிக்கிறோம். நாங்கள் அங்குள்ள கட்டப்பள்ளி என்கிற கிராமத்திலுள்ள நமது திருச்சபை இளம் விசுவாசிகளோடு தேவனை ஆராதித்தபோது, அவ்வாராதனையில் ஆவியானவரின் அசைவாடுதலை எங்களால் உணர முடிந்தது. பின்னர் உதரா என்கிற இடத்திலுள்ள நமது விசுவாசிகளோடு தேவனை ஆராதித்து, எங்களது சாட்சிகளை அவர்களிடம் பகர்ந்து கொண்டோம். அதன்பின், எட்டப்பள்ளியிலுள்ள நமது சிறுவர் விடுதியை அடைந்து, அங்குள்ள நமது விசுவாசிகளின் பிள்ளைகளோடு அளவளாவி, தேவ அன்பைப் பகிர்ந்து கொண்டோம்.

இப்பணித்தள விஜயத்தின் மூலம் கீழ்க்காணும் காரியங்களைக் கற்றுக்கொண்டோம் -

1. நமது ஊழியத்தின் பத்திரிக்கையை மாதந்தோறும் கிரமமாக வாசித்து, அதில் கொடுக்கப்பட்டுள்ள ஜெபக்குறிப்புகளுக்காகத் தவறாது ஜெபிக்க வேண்டும்.
2. எங்களது பெற்றோர்கள் மிஷனெரிப்பணியின் தேவைக்கு அதிமுக்கியத்துவம் கொடுப்பதின் ரகசியத்தைப் புரிந்து கொண்டோம்.
3. பணித்தளங்களைப் பார்த்தப் பின் ஜெபிக்க, ஆராதிக்க எங்களிடம் காணப்பட்ட அச்சம் அகன்று போனதைக் கண்டோம்.
4. இளம் விசுவாசிகளிடமிருந்து எளிய வாழ்க்கையையும், குழந்தை போன்ற விசுவாசத்தையும் கற்றுக்கொண்டோம்.
5. தேவனை முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும் ஆராதிக்கக் கற்றுக்கொண்டோம்.
6. இளம் விசுவாசிகள் தொலைதூரப் பகுதிகளிலிருந்து எவ்விதப் போக்குவரத்து வசதியுமின்றி ஆராதனையில் வந்து தவறாது கலந்துக்கொள்வது எங்களுக்கு ஒரு பெரிய படிப்பினையாக அமைந்தது.

தேவனுக்கே மகிமை!

– சகோதரர்கள்: மரியதாஸ், மனோஜ் குமார், கிங்ஸ் பெனோ, சாம் பென்னி, சாமுவேல் ஜாஷ்வா, ஜெரால்டு & சாமுவேல் ரிச்சர்ட்

குறிப்பு: *இவ்வாறாக பணித்தள விஜயம் செய்ய அநேக வாலிபர் குழுக்கள் எழும்பி வர பட்சமுடன் அழைக்கிறோம்!*

நிலத்திலே விழுந்த கோதுமை மணி!

அருட்திரு. மேத்யூ ஜெபராஜ்

(03.01.1954 - 26.03.2022)

சகோ. மேத்யூ ஜெபராஜ், 1954-ம் ஆண்டு ஜனவரி மாதம் 3-ம் தேதி களக்காடு அருகேயுள்ள ஆதிச்சப்பேரியில் உள்ள ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்தார். இவருடைய பெற்றோர் திரு. கோயில் பிச்சை & திருமதி. ஜெயமணி இருவரும் ஆசிரியர்கள். இவருக்கு கோயில்ராணி என்ற தங்கையும் உண்டு. பிள்ளைகள் சிறு வயதிலிருந்தே கர்த்தரைப் பற்றும் பயபக்தியோடு, ஆலயத்திற்கு ஒழுங்காகச் செல்பவர்களாக வளர்க்கப்பட்டனர். வேத வாசிப்பு, ஜெபத்திலும் பயிற்றுவிக்கப் பட்டனர். பிள்ளைகள் சிறுவயதாக இருக்கும்போதே பெற்றோர் மரித்து விட்டதினால், குடும்ப பாரத்தை சகோ. மேத்யூ ஏற்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இவர் தனது எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பை முடித்து மேற்படிப்பைத் தொடர முடியாமல் வேலைக்காகக் காத்திருந்தார்.

அச்சமயம் இவருடைய ஆலய உபதேசியார் திரு. ஹென்றி ஜேக்கப் ஆவிக்குரிய வாழ்வில் இவர் வளர உதவி செய்ததோடு, நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவையும் இவருக்கு அறிமுகம் செய்து வைத்தார். குற்றாலத்தில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு நடத்திய மிஷனெரித் தரிசன முகாமில் பங்குப்பெறும் வாய்ப்பை இவர் பெற்றார். அந்தக் கூடுகையில் மிஷனெரியாகச் செல்ல இவர் தன்னை அர்ப்பணம் செய்தார். அந்நாட்களில் பள்ளிப்படிப்பை முடித்திருந்த தனது தங்கையின் திருமணத்தையும் நடத்தி வைத்தார். பின்பு களக்காடு ஜெபக்குழுத்தலைவியாக இருந்த திருமதி. ஜீவலட்சுமி அவர்கள், இவரை மிஷனெரியாகச் செல்ல உற்சாகப் படுத்தியதால், 1982-ம் ஆண்டு ஜுலை 3-ம் தேதி இவர் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் இணைந்தார்; ஓராண்டு மிஷனெரிப்பயிற்சியை டேனிஷ்பேட்டை யிலுள்ள பெத்தேல் வேதாகமக் கல்லூரி யில் முடித்தப்பின்னர், 1983-ல் வட இந்தியாவிலுள்ள கோண்டாவிற்கு ஹிந்தி மொழிப்பயிற்சிக்காக அனுப்பப்பட்டார். அதன்பின் இவர் பீகாருக்கு மிஷனெரி யாகச் சென்று, தனது உடன் ஊழியர் களுடன் இணைந்து மதுபனி, சீத்தாமரி, மைர்வா, சிவான் போன்ற இடங்களில் தங்கிச் சுவிசேஷப்பணி செய்து வந்தார்.

1986-ம் ஆண்டு ஜனவரி மாதம் 13-ம் தேதி, சகோ. மேத்யூ ஜெபராஜின் திருமணம் இடையன்குடியைச் சார்ந்த திரு. தேவபிச்சை & திருமதி. ஜெபமணி அவர்களின் மகளான சகோதரி. நகோமி யுடன் தூத்துக்குடி இம்மானுவேல் ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. திருமணத்திற்குப்பின் இவர்கள் குடும்ப மாகத் தமிழ்நாட்டிலுள்ள பணித்தளமாகிய அஞ்செட்டிக்கு அனுப்பப்பட்டு, பின்பு பென்னகரம், கிருஷ்ணகிரி சிறுவர் விடுதி, தேன்கனிக்கோட்டை போன்ற இடங்களில் தேவப்பணி ஆற்றினார்கள். இவர்கள் குடும்ப வாழ்வை தேவன் ஆசீர்வதித்து, சாம் ஜாஷ்வா மற்றும் ஷீபா கிரேஸ்லின்

என்ற 2 பிள்ளைகளைக் கொடுத்தார். தற்போது பிள்ளைகள் இருவரும் வளர்ந்து திருமணமாகி, தங்களது குடும்பங்களுடன் வாழ்ந்து வருகிறார்கள்.

அருட்திரு. மேத்யூ ஜெபராஜ் தம்பதியினர் 2019-ல் தங்களது பணி ஓய்விற்குப் பின்பும், ஓசூரில் இருந்து ஊழியம் செய்து வந்தனர். பின்பு பற்பல பெலவீனங்களினால் சகோ. மேத்யூ பாதிக்கப்பட்டு, சிகிட்சை பெற்று வந்தார். சென்ற 2 மாதங்களாக மிகவும் சுகவீனத்திற்குள்ளாகி கஷ்டப்பட்டு வந்த நிலையில், இவர் கடந்த 2022 மார்ச் மாதம் 26-ம் தேதி அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அவருடைய சரீரம் 27-ம் தேதியன்று உயிர்த்தெழுதலின் நம்பிக்கையோடே ஓசூரில் அடக்கம் செய்யப்பட்டது. அவர் விட்டுச்சென்றுள்ள அவருடைய குடும்பத்தினரை நமது ஜெபங்களில் தாங்கிக்கொள்வோம்.

– அருள்திரு. அறிவர். E. ராஜன்

பணித்தள விஜயமும் ஆலயப் பிரதிஷ்டையும்

திருநெல்வேலியிலிருந்து ஜார்க்கண்ட் மாநிலத்தின் மால்தோ, சந்தால், மால்பஹாடியா மக்கள் வாழ்கின்ற பணித்தள கிராமங்களில் நடைபெற்று வருகின்ற ஊழியங்களைக் காண, 9 பேர் கொண்ட குழுவாக நாங்கள் கடந்த 2022, மார்ச் 17 முதல் 25-ம் தேதி வரை ஜார்க்கண்டிற்குச் சென்று வர தேவன் எங்களுக்கு உதவி செய்தார். 18.03.2022 அன்று காலை டோனிபிச்சைகனி பணித்தளத்தில் நடைபெறுகின்ற விடுதிப்பணி, முதியோர் கல்விப்பணியைப் பார்த்தோம். அன்று முற்பகல் திருநெல்வேலி ஸ்கேன் குடும்பத்தின் சார்பில், பந்தேனி சிறுமியர் விடுதி முதல்தளத்தில் மிக அழகாகக் கட்டப்பட்டுள்ள விடுதியை நமது திருநெல்வேலி பிராந்தியத்தின் மூத்த தலைவரான திரு. தாமஸ் பாக்கிய சிங் அண்ணன் அவர்கள் தேவநாம மகிமைக்கென்று பிரதிஷ்டை செய்து வைத்தார்கள். விடுதிச் சிறார்கள் மிகச் சிறப்பாக எங்களை வரவேற்று, கலாச்சார நிகழ்ச்சிகளை நடத்தி சிறப்பித்தார்கள். அன்று மாலை அம்பாகுண்டா கிராமத்தில் நடைபெற்ற மேளாவில் கலந்து கொண்டோம். அந்நேரத்தில் மால்தோ பேராயத்தின் பேராயர் மாமறைதிரு. பத்ராஸ் மால்தோ அவர்கள் அதில் கலந்துக் கொண்டு மேளாவைச் சிறப்பித்தார். 19.03.2022 அன்று காலை டும்காவிலுள்ள திலியா சவ்க் தலைமைத்துவப்பயிற்சி மையத்தில் சந்தால் மிஷனெரிகளோடு சேர்ந்து ஜெபித்தோம். பின்பு துர்காபூர் கிராமத்தில் ஒழுங்குச் செய்திருந்த விசுவாசிகள் கூடுகையில் கலந்துக் கொண்டு, அவர்கள் கொடுத்த வரவேற்பை ஏற்றுக்கொண்டோம். பின்பு கைராபானி பணித்தளம் சென்று அங்குள்ள விடுதிச் சிறுவர்களுடன் கலந்துரையாடி அவர்களுக்காக ஜெபித்தோம் மற்றும் அதே இடத்தில் நடந்துவருகிற சுதேச ஊழியப்பயிற்சி மையத்தைக் காணவும், பயிற்சிப்பெறுகின்றவர்களுடன் ஐக்கியம் கொள்ளவும் தேவன் எங்களுக்கு உதவி செய்தார். 20.03.2022 அன்று காலை மத்திய திருநெல்வேலி முன்னேற்றப்பணி மாவட்டம் சார்பில், ஜார்க்கண்ட் மாநிலம் – தால்டியில் கட்டப்பட்டுள்ள ஆலயத்தை தேவநாம மகிமைக்கென்று நமது இயக்கத்தின் செயற்குழு உறுப்பினர் மற்றும் மத்திய திருநெல்வேலி கௌரவ முன்னேற்றப்பணி செயலருமான அருட்திரு. செல்வராஜ் அண்ணன் அவர்கள் பிரதிஷ்டை செய்து வைத்தார்கள். அந்த மனமகிழ்ச்சியின் நாளில்தானே 350 விசுவாசிகள் கலந்து கொண்டு, தங்களுடைய சாட்சிகளைப் பகர்ந்தளித்து தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தினர். ஆம், “பணித்தளத்திற்கு ஓர் மிஷனெரி அனுப்பப்படும்போது, அம்மக்கள் மத்தியில் மனமாற்றம் ஏற்படுகிறது; கிராமத்தில் ஓர் ஆலயம் பிரதிஷ்டை செய்யப்படும்போது, அங்கே அற்புதங்கள் நிகழ்கிறது; பணித்தளத்தில் ஓர் பள்ளி மற்றும் விடுதிகள் திறக்கப்படும்போது, அம்மக்கள் சமுதாயத்தில் பெரும் மறுமலர்ச்சி உண்டாகிறது.” தேவனுக்கே மகிமை!

மே 1 ஞாயிறு

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. பாபு பெஞ்சமின்
திருமதி. சிப்போரா பீரோ
திருமதி. புரோசன்சிதா மாலி, திரு. மனோஜ் P.J.
திருமதி. கோகனி சுமித்ராபேன் கிறிஸ்டியன்
திரு. ஜாண் பெனின் J.
திருமதி. ரூபா ஏலவாகி சன்னமல்லப்பா
திரு. கிங்ஸ்லி லிவிங்ஸ்டன் R.

ஜம்மு

நரோத்: ஜீவர் ஜோஸ்வா & ஷேத்ரிமயூம் பிரியா தேவி

துதிக்க: நாகிரி மற்றும் ஃபிலார் கிராமங்களில் நடந்த எதிர்ப்புகளுக்கு பின் தற்போது மீண்டும் ஞாயிறு ஆராதனைகள் தொடங்கப்பட்டுள்ளன. இருதயக்கோளாறினிமித்தம் நெஞ்சு வலியினாலும் மூச்சுத்திணறலினாலும் கஷ்டப்பட்டு வந்த முகேஷ், தேவத் தொடுதலினால் நன்கு சுகம் பெற்றுள்ளார். கடந்த 3 வருடங்களாக இருந்து வந்த வயிற்று வலியிலிருந்து சுனிதா தேவி சுகமடைந்துள்ளார். தீய ஆவியின் பிடியிலிருந்து சகாலுவும், குடற்புண் காய்ச்சலிலிருந்து நந்தா லாலுவும் பூரண விடுதலை பெற்றுள்ளனர். அதிக காய்ச்சலினால் சுயநினைவற்ற நிலைக்குச் சென்ற தாசு ஜெபத்தின் மூலம் முழுமையான சுகம் பெற்றுள்ளார். நனான் கிராம கணேஷ் 7 மாதங்களாக பெற இயலாமலிருந்த சம்பளத்தொகையை, ஜெபித்தபோது இரண்டே நாட்களில் கிடைக்கப்பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: கொஞ்ச ஜனமாக கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டுள்ள மாஷா சமூகத்தினர் எதிர்ப்புகளினிமித்தம் உண்டாகும் பயத்தின் ஆவியை மேற்கொள்ள; மக்களைத் தவறான போதனைகளினால் திசைத் திருப்பும் சுயாதீனப் போதகர்கள் மற்றும் பிரசங்கிமார்கள் மனம் மாற; நாகிரி கிராமத்தில் ஓர் ஆலயம் கட்டப்பட, அவ்விசுவாசிகள் மத்தியிலிருந்தே அதற்கான நிலமொன்று நன்கொடையாகக் கொடுக்கப்பட; ஜெனியல் கிராம மனிஷாவிற்கு நல்ல வாழ்க்கைத் துணையமைய; சம்வா கிராம சோல்டி மற்றும் மிண்டுவின் குடும்பங்கள் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள; தர்சமின் தலையிலுள்ள கட்டி மறைய; நாகிரி கிராம அனுவிற்கு குழந்தை பாக்கியம் கிடைக்கவும், நிகாவிற்கு கல்லீரல் பிரச்சனையிலிருந்து சுகம் கிடைக்கவும் ஜெபிப்போம்.

ஆத்தும ஆதாய முகாமில் ஆசீர்வாதம்!

டெல்லி, பட்பர்கன்ஜ் பணித்தளத்தில் வைத்து நடந்த ஆத்தும ஆதாயப்பயிற்சி முகாமில் 30 பேர் கலந்து கொண்டனர். அவர்களுக்கு 'சுதேச ஊழியம்' எவ்வாறு செய்வது என்பதைக் கற்றுக்கொடுத்தோம். அந்த முகாமில் சில விசுவாசிகள் தங்கள் சாட்சிகளையும், தாங்கள் எங்ஙனம் சுவிசேஷ ஊழியம் செய்கின்றனர் என்கிற அனுபவங்களையும் பகர்ந்து கொண்டனர். அதன் விளைவாக 8 ஜெபக்குழுக்கள் அங்கேயே புதிதாக உருவாக்கப்பட்டன. மேலும் மற்றவர்களும் இந்நற்செய்தியை பெற்றுக்கொள்ள ஜெபக்குழுவிற்கு அழைத்து வருவதாக வாக்களித்தனர். அதோடு, ஒவ்வொரு வாரமும் இரண்டு புதிய நபர்களை ஆராதனைக்கு அழைத்து வருவதாகவும் தீர்மானித்தனர். தேவனுக்கே மகிமை!

மே 2 திங்கள்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. லிசா பீட்டர் அருளானந்தம்

திரு. காட்வின் கிருபாகரன், திரு. சுனில் குமார்

ஹிமாச்சலப் பிரதேசம்

ஹிமாச்சல் பிராந்திய அலுவலகம் :

த்சாங்சே சங்தம் & சுச்சானோ

துதிக்க: இயேசுவை ஏற்றுக்கொள்வதினால் தங்களது சொந்த கிராமத்தினரால் புறக்கணிக்கப்படுதல், தேவர் & தேவதைகளுக்கு நன்கொடை அளிக்காவிடில் கிராமத்தை விட்டு ஒதுக்கி வைக்கப்படுதல், மிகத் தாழ்ந்த நிலையானவர்களாகக் கருதப்படுதல் போன்ற மிகுந்த வேதனைக்குரிய காரியங்களின் மத்தியிலும் நமது விசுவாசிகள் தங்களது விசுவாசத்தில் வழுவிப்போகாமல் உள்ளனர். நமது சுதேச ஊழியரொருவர் காவல் துறை கண்காணிப்பில் ஒரு வாரம் வைக்கப்பட்டும், மற்றுமொரு உள்ளூர் போதகர் வினோத் கிறிஸ்தவ எதிர்ப்பாளர்களால் மிரட்டப்பட்டும், இருவரும் அப்பணித்தளத்தை விட்டுத் துரத்தப்பட்டும், அவர்கள் நடத்திவந்த தியுனி சபையை வலுக்கட்டாயமாக அடைத்துத் துன்பப்படுத்தியும் நமது சுதேச ஊழியர் அவைகளையெல்லாம் சற்றேனும் பொருட்படுத்தாமல், மற்றொரு கிராமமாகிய கும்மாவிற்கு கடந்துச்சென்று, அங்கே வேறொரு திருச்சபையை உருவாக்கியுள்ளார். வெளிப்புற சந்திப்பு ஊழியத்தின்போது, நமது சுதேச ஊழியர்களான சுமித் மற்றும் சந்தீப் கிறிஸ்தவ எதிர்ப்பாளர்களின் கொடூர அடிகளுக்கு விலக்கி காக்கப்பட்டுள்ளனர். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதினிமித்தம் குடும்பத்தினரால் தனிமைபடுத்தப்பட்டிருந்த தீபா, 1 கொரி.13-ம் அத்தியாயத்தின்படி தனது குடும்ப மக்களிடம் கிறிஸ்துவின் அன்பைப் பிரதிபலித்ததினால், அவரது குடும்பத்தார் தங்களது அக்கிரமச் செய்கைகளுக்காக வருந்தி, தீபாவை மீண்டும் ஏற்றுக்கொண்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதினால், தங்களின் கிராம மக்களினால் பல்வேறு எதிர்ப்புகளுக்குள்ளாகும் சிவாலா கிராம மனோஜ், சோனுரி கிராம ரோஷன்லால் & பகத்ராம் ஆகியோர் அஞ்சாமல் விசுவாச வாழ்வில் முன்னேற; ஒரு சிறுபையன் ஆகாஷ் தனது நண்பனான கைலாஷிடம் ஓர் சுவிசேஷ கைப்பிரதியைக் கொடுத்து, அவனைச் சபைக்கு வர அழைப்பு விடுத்து, நமது மிஷனெரிகளைக் கொண்டு அவனுக்காக ஜெபித்துள்ளான். அந்த கைலாஷின் முழு குடும்பமும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; புதிய ஆராதனை மையம் திறக்கப்பட்டுள்ள பரானு கிராமத்தில் பிற மக்களுக்கும் கர்த்தரை ஏற்றுக்கொள்ளுமாறு அங்குள்ள நமது விசுவாசிகள் நற்சாட்சியுள்ள வாழ்வு வாழ; கர்த்தருக்குள் தங்களது விசுவாசத்தை அறிக்கையிடக் காத்திருப்போர் இன்னும் கர்த்தரில் வளர ஜெபிப்போம்.

மே 3 செவ்வாய்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. விக்டர் ஜெயசீலன் C.
திருமதி. ஷீலா சண்முகம்
திரு. ஜெபராஜ் சாமுவேல் V.P.
திருமதி. சாராள் ஜான்சி ராணி ஜஸ்டின்
திரு. வினு M., திருமதி. ஆனந்தி சங்கர்

ஆனி: ஹின் சாவ்ம் & சிங் கோயி கிம்; சங்கர் A. & ரூத் மேரி

துதிக்க: நீதார் சபைக்கென புதிய தொடர் பாளர்கள் இருவர் கிடைத்துள்ளனர். கர்த்தருடைய கிருபையால் சாலை விபத்தி னின்று நமது ஊழியரின் ஜீவன் அற்புத மாகக் காக்கப்பட்டுள்ளது. கிக்கர் என்ற இடத்தில் நமது ஆராதனைகளை நடத்த நல்லதொரு அறை கிடைத்துள்ளது. ஜோதிக்கு அவரது கல்விக்கான உதவித்தொகை கிடைக்கப்பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: நமது புதிய தொடர்பாளரான பண்டிட் என்பவரின் குடும்பம் இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள; இடுப்புப்பகுதி யில் புற்றுநோய் வந்து அவதிப்படும் நமது மற்றொரு புதிய தொடர்பாளர் பகத்ராம் கர்த்தரின் கரத்திலிருந்து அற்புத சுகம் பெற; தீய ஆவிகளின் கட்டுகளிலிருந்து சய்மு தேவி, காஞ்சி தேவி, சாந்தா தேவி மற்றும் ஜுவலா விடுவிக்கப்பட; பருல் மற்றும் ராஜ்குமாரின் குடும்பத்தில் தேவ சமாதானம் உண்டாக ஜெபிப்போம்.

ராம்பூர்:
தௌஜபாவ் குயிட்டே & ஃப்ளாரன்ஸ்

துதிக்க: புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. இங்கே நடந்து முடிந்துள்ள சிறியளவிலான தலைவர்கள் கூடுகை மிக ஆசீர்வாதமாக அமைந்ததோடு, அதில் பங்கேற்ற விசுவாசிகள் 23 பேர் நமது ஊழியங்களில் உதவி செய்வோம் என தங்களை அர்ப்பணித்துள்ளனர். கைபந்து விளையாடும்போது ஏற்பட்ட தாடை எலும்பு முறிவிலிருந்து இஷாந்தும், பல்வேறு உடல் உபாதைகளிலிருந்து ருமா தேவியும், கண் வலியிலிருந்து அஜய் குமார் மற்றும் விபனும் சுகம் பெற்றுள்ளதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

ஜெபிக்க: தீய நட்பிலிருந்து ஜெயராமின் மகன் கரண் பிரிக்கப்பட; தவறான உபதேசங்களுக்கு தலைசாய்க்க, அத்தகைய பிற சபைகளை நாடிச் செல்லும் நமது விசுவாசி சாத்ராம் மனந்திரும்பி சத்தியத்திற்கு இடமளிக்க; பக்கான் விசுவாசிகள் மத்தியில் தேவ சமாதானம் பிறக்க; நந்தலால் மற்றும் ஜெய்ராமின் குடும்பங்கள் தவறாமல் ஆலய ஆராதனைகளில் பங்கெடுக்க ஜெபிப்போம்.

ரோஹ்ரு:
ஜாண்சன் சங்கர் & ஜெபராணி

துதிக்க: புதிதாக 3 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக 3 குடும் பங்கள் நமது ஆராதனைகளில் வந்து பங்கேற்கின்றனர். சிறுநீரகக்கல் பிரச்சனை யினால் மிகவும் அவதிப்பட்டு வந்த நமது தன்னார்வ ஊழியரான ஷெர்சிங்கின் உடல்நிலை முன்னேற்றமடைந்துள்ளது. இங்குள்ள 7 திருச்சபைகளிலும் ஆராதனை களைத் தொடர்ச்சியாக நடத்துவதற்கான சீரான முயற்சிகள் ஜெபத்துடன் கையாளப் பட்டு வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: நமது எல்லா விசுவாசிகளும் ஆராதனைகளில் தவறாமல் கலந்துக் கொள்ள; ரனோல் மற்றும் லிம்ரா கிராமங்களில் ஆலயங்கள் கட்டுவதற்கான நிலங்கள் கிடைக்கப்பெற; லிம்ரா மற்றும் சவ்ரா பகுதிகளில் நடக்கவிருக்கும் சபை மூப்பர்களுக்கான பயிற்சிக்கூடுகைகள் ஆசீர்வாதமாக நடைபெற; மொரியா பகுதியில் நல்லதொரு சுதேச ஊழியர் பணியமர்த்தப்பட ஜெபிப்போம்.

மே

4

புதன்

உபவாச ஜெபநாள்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஹெப்சிபாய் சைரஸ், திரு. அனில் குமார்
திருமதி. லீகர்ள் மேரி கோல்டன்
திருமதி. சீதா ஐசக், திரு. ஜெபக்குமார் P.
திருமதி. ரௌட் ஜசோதாபேன் பிரமோத்குமார்
திருமதி. ஜெபசீலி டேனியல் மார்வெல்ராஜ்
திருமதி. ஏஞ்சலின் விக்னேஷ்வரன்

தானேதார்:

உம் பியாக் லால் & நியாங் கான் மான்

துதிக்க: புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. தடைகள், எதிர்ப்புகள் மற்றும் சரீர பெலவீனங்கள் மத்தியிலும் நமது ஊழியர்கள் வெற்றிகரமாக முன்னோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றனர். நெஞ்சு வலியிலிருந்தும், தூக்கமின்மையிலிருந்தும் ஜெபத்தின் மூலம் இஷாந்த் பூரண சுகம் பெற்றுள்ளார். எல்லாச் சபை செயல்பாடுகளிலும் நமது வாலிப ஆராதனைக்குழுவினர் ஊக்கமாக ஈடுபடுகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: கச்சின் ஹட்டி பகுதியில் சுவிசேஷத்திற்கு வாசல் திறக்கப்படவும், வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகள் மூலம் சுவிசேஷத்தின்மீது ஆர்வம் காட்டும் 3 குடும்பங்களுக்கென அப்பகுதியில் ஒரு ஆராதனைக்குழு தொடங்கப்படவும்; நமது சபை பெண் தலைவிகளும், மூப்பர்களும், சிறிய ஜெபக்குழுத் தலைவர்களும் ஊழியங்களில் மிகுந்த ஆத்தும பாரம் கொண்டுச் செயல்பட; இங்கு ஊழியத்தைச் சிறப்பாக நடத்திச்செல்ல தகுந்த இடங்களும் சுதேச ஊழியர்களும் கிடைக்க ஜெபிப்போம்.

பஞ்சாப்

மோகா:

ஜஸ்டின் Y. & சாராள் ஜான்சி ராணி

துதிக்க: புதிதாக 12 நபர்கள் கிறிஸ்துவின் மந்தைக்குள் இணைந்துள்ளனர். புதிதாக 2 கிராமங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழியக் குழுவினர் மூலம் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஃப்ராஸ் மற்றும் கரண் சிங் கண் நோய்த்தொற்றிலிருந்தும், பிரவீன் கௌர் மூலப்பிரச்சனையிலிருந்தும், கிரண் தீராத காய்ச்சலிலிருந்தும், அம்ஜிந்தர் கௌர் வயிற்றுக்கல் பிரச்சனையிலிருந்தும் சுகமாகியுள்ளனர். மன்தீப் சிங்கிற்கு வெளிநாட்டில் நல்ல வேலை கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ஞாயிறு ஆராதனைக்குக் கிரமமாக வராமலிருக்கும் விசுவாசிகளுக்காகவும், பின்மாற்றமடைந்திருக்கும் விசுவாசிகளுக்காகவும்; அஜித்வால், சட்சாக், ராய்கோட், கோட்லி, தரம்கோட், போபரா, பிந்தர்காலன், கிஷான்புரா, ஜக்ரோன், சிடக் மற்றும் டுடிக்கி ஆகிய கிராமங்களில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட; குடி மற்றும் புகையிலை பழக்கத்திற்கு அடிமையாகியிருப்போர் விடுதலை பெற; இரத்தக் கோளாறிலிருந்து ஹர்விந்தர் சிங்கும், கண்பார்வைக் கோளாறிலிருந்து பரஜும் சுகம் பெற; தரம்கோட் திருச்சபையைச் சார்ந்த நித்துகௌருக்கு வீடு கட்டுவதற்கு ஏற்றதோர் நிலம் கிடைக்கவும், நல்ல வாழ்க்கைத்துணை அமையவும்; அஜித்வால் திருச்சபையைச் சார்ந்த நித்துகௌருக்கு தோல் ஒவ்வாமை நோயிலிருந்து சுகம் கிடைக்க; நமது விசுவாசிகளான ரஜினி கௌர், ஜோதி, காஞ்ஜல் மற்றும் ஆமானிற்கு நல்ல வாழ்க்கைத்துணைகள் அமைய; பக்கவாதத்திலிருந்து திஜிந்தர் சிங் மற்றும் ஜஸ்பிந்தருக்கும், நெஞ்சு வலியிலிருந்து பிந்தர் கௌருக்கும், புற்றுநோயிலிருந்து ரமேஷிற்கும், கல்லீரல் கல் பிரச்சனையிலிருந்து ராஜி மற்றும் நமது சுதேச ஊழியர் மது பீட்டருக்கும், 15 வருடங்களாக சிறுநீரகப் பிரச்சனையிலிருக்கும் கோபிக்கும் பூரண சுகம் கிடைக்க; சுக்கி கௌர், லோப்பிரீத் கௌர் மற்றும் ஹர்பிரீத் கௌருக்கு குழந்தை பாக்கியங்கள் கிடைக்க ஜெபிப்போம்.

மே 5
வியாழன்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஸ்டீபன் ஜெயசீலன் B.
திருமதி. ஜெஸி ஜீவபிரபா டேவிட்
திருமதி. மேபல் வசந்தகுமாரி பாபுராஜ்
திரு. புஷ்பராஜ் R., திரு. பரணிதரன் S.

ஜைத்தோ:

சித்தரஞ்சன் தான்டி & தேஜேஸ்விதா

துதிக்க: புதிதாக 7 நபர்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவிற்குள் வந்துள்ளனர். புதிதாக 3 கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்ததின் மூலம் 610 பேர் முதல் முறையாக கிறிஸ்துவைக் குறித்து கேள்விப்பட்டுள்ளனர். தீய ஆவியின் பிடியிலிருந்து பூஜா கௌர், நிஷா கௌர், குல்விந்தர் கௌர், குர்பிரீத் கௌர் மற்றும் தேக்சாந்த் சிங் விடுவிக்கப்பட்டுள்ளனர். போதைப்பொருளுக்கு அடிமையாகியிருந்த ஜஸ்பால் சிங் அற்புதமாக அப்பழக்கத்திலிருந்து மீண்டு வந்துள்ளார். ராம் சிங்கின் குடும்பப்பிரச்சனை ஜெபத்தின் மூலம் தீர்ந்துள்ளதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

ஜெபிக்க: சத்சங் மற்றும் வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகள் மூலம் முதல்முறையாக கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ள மக்களுக்காக; ஜைத்தோ பகுதியில் சுவிசேஷத்திற்கு செவிகொடுக்கத் துவங்கியிருக்கும் காமிக்கர் இன மக்களுக்காக; ஜைத்தோ ஆலயக்கட்டுமானப் பணி முடிவடையவும், பஜாகன்னா ஆலயச்சுற்றுச்சுவர் பணிக்கான நிதித்தேவைகள் சந்திக்கப்படவும்; போதை மற்றும் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகியிருக்கும் ரிங்கு, சத்னாம் சிங், பினோத் சிங், பரம்ஜீத் சிங், சுரேஷ் ஆகியோர் விடுவிக்கப்பட; சரீரக் கட்டிகளினால் கஷ்டப்படும் சோனியா ராணி, சானு, பரம்ஜீத் கௌர், ஷீலா கௌர் மற்றும் சுரேந்தர்பால் சிங் சுகமடைய; கொடிய மஞ்சள் காமாலை மற்றும் காச நோய்களினால் அவதிப்படும் நமது புதிய தொடர்பாளரான தர்ஷன் சிங் சுகம் பெற; 3 வருடங்களாக பக்கவாதத்தினால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்ற ஹாரினோ கிராமத்தைச் சார்ந்த நமது புதிய தொடர்பாளரான கெய்வல் சிங்கிற்கு தேவன் அற்புத சுகமளிக்க ஜெபிப்போம்.

பட்டாலா:

வால்வி நேதாஜி டாடு & கல்பனா

துதிக்க: வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகள் 9 கிராமங்களில் பெருமளவில் நடத்தப்பட்டுள்ளன. புதிதாக 5 நபர்கள் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். ஜஹால்சிங் கிராமத்தில் சுவிசேஷத்திற்குத் திறந்தவாசல் கிடைத்துள்ளது. ஆஷாவிற்கு கர்ப்பப்பை அறுவை சிகிட்சையும், பூஜாவிற்கு கையில் அறுவை சிகிட்சையும் மற்றும் ராமனுக்கு கட்டியை அகற்றும் அறுவை சிகிட்சையும் நல்ல பாதுகாப்பான முறைகளில் செய்யப்பட்டுள்ளன. கோமலுக்கு நல்ல வாழ்க்கைத்துணை அமைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: பொல்லாத ஆவிகளின் பிடிகளிலிருந்து பீட்டரும், இந்திரஜித்தும் விடுதலை பெற; திருமணமாகி 10 வருடங்களாகியும் குழந்தையில்லாமல் இருக்கும் மம்தாவும், 6 வருடங்களான பிரியாவும் குழந்தை செல்வங்களைப் பெற; இருதயக் கோளாறிலிருந்து ஸ்டீபன் சுகம் பெற ஜெபிப்போம்.

மே
6
வெள்ளி

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ராஜன் E., திரு. ராஜேந்திரன் S.
திருமதி. விமலா டெய்சி ஜாண்பால் ஹாரிஸ்
திருமதி. கீதாஞ்சலி பெஹரா கருணாகர்
திரு. சந்தியா நாயக், திரு. சாம்ராஜ் D.

ஹரியானா

ஜீவன் நகர்:

அலியாக்கீம் ஜெனா & தீபிகா

துதிக்க: புதிதாக 12 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசத்துடன் ஏற்றுக்கொண்டுள்ளனர். புதிதாக 502 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. பால்மீகி இனமக்கள் சுவிசேஷத்திற்குச் செவிமடுப்பதினால் ஆபோர், பஞ்சாபிலுள்ள சண்டிகார் மற்றும் ஹரியானாவிலுள்ள பாஞ்குலா ஆகிய இடங்களுக்கு அம்மக்கள் மூல மாகவே சுவிசேஷம் பரவி வருகின்றது. சுச்சான் பகுதி சமார் இனமக்கள் சுவிசேஷத் திற்கு இணக்கம் காட்டி வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: நமது விசுவாசிகளின் மூலம் அவர்களது சொந்த மக்களுக்குச் சுவிசேஷம் கடந்துச் செல்வதற்கான பயிற்சிகள் விசுவாசிகளுக்குக் கொடுக்கப்பட; உயர் ஜாதியினர் என கருதப்படும் சிர்சாவிலுள்ள குருஸ் என்ற சமூகத்தினரும், பால்மீகி சமூகத்தினரும் கிறிஸ்துவைக் குறித்து மேலும் அறிந்துக்கொள்ள; விசுவாசிகளின் ஆவிக்குரிய வாழ்வை ஸ்திரப்படுத்த எல்லா ஆராதனைக் குழுக்களிலும் வேதாகம வகுப்புகள் நடத்தப்பட; சமார் இனத்தைச் சார்ந்த சிர்சா பகுதியிலுள்ள சுச்சான் கிராம சுனிதாவை விவாகரத்து செய்வதற்காக அவரது கணவர் சுனிதாவின் மீது மந்திரவாதியின் மூலம் தீய ஆவியை ஏவி விட்டுள்ளதினால், ஜெபஉதவி கேட்டு நமது ஆராதனைக்கு வருகின்ற அவருக்கு அத்தீய ஆவிகளின் போராட்டங்களில் இருந்து விடுதலை கிடைக்கவும், அவர் தனது கணவருடன் மீண்டும் சேர்ந்து வாழவும்; பின்மாற்றமடைந்திருக்கும் லம்பி கிராம நமது விசுவாசிகள் மீண்டும் கிறிஸ்துவண்டை வரவும், அக்கிராமத்தில் ஆராதனைக்குழுவொன்று ஆரம் பிக்கப்படவும்; குலாபின் மகன் தீபக்கும் அவரது முழு குடும்பமும் கிறிஸ்துவண்டை வரவும், தீய ஆவிகளின் கட்டுகளிலிருந்து அவர்களுக்கு விடுதலை கிடைக்கவும் ஜெபிப்போம்.

உத்தராகண்ட்

நானக்மட்டா:

சிவகுமார் & சுசிலா மராக்

துதிக்க: புதிதாக 8 கிராமங்கள் சுவிசேஷத் தினால் சந்திக்கப்பட்டுள்ளன. 115 பேர் முதல் முறையாக சுவிசேஷத்தைக் கேட்டுள்ளனர். சம்காரி கிராம மித் கௌர் சுவிசேஷத்திற்கு ஆர்வத்துடன் செவி சாய்க்கின்றார். தயாரி கிராமத்திலிருந்து 3 குடும்பங்கள் கிறிஸ்துவை அறிக்கை செய்துள்ளனர். ஜெபத்தின் பலனைப் பார்க்கும்விதமாக ரத்னா ஃபாரம் கிராம சுனிதா கௌர் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுதலை பெற்றுள்ளார். தீராத வயிற்று வலியிலிருந்து கஷ்மிஸும் அவரது மனைவியும் அற்புத சுகம் பெற்றுள்ளதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

ஜெபிக்க: பஸ்கார் கிராம ஜஷ்விந்தர் சிங்கிற்கு தகுந்த வேலைவாய்ப்பு கிடைக்க; சுக்விந்தர் கௌருக்கு சுகப்பிரசவம் நேரிட; இஸ்லாம் நகரைச் சார்ந்த ஆத்ரா கௌர் மஞ்சள் காமாலை நோயிலிருந்தும், மன்தி சிங் கைகளில் வந்திருக்கும் ஒருவித நோய்த்தொற்றிலிருந்தும், தயாரி கிராம குர்விந்தர் சிங் தோல் ஒவ்வாமை நோயிலிருந்தும் சுகமடைய ஜெபிப்போம்.

மே 7 சனி

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ரமேஷ்பாய் கிறிஸ்டியன்
திருமதி. ஃப்ளாரன்ஸ் சுதாகரன்
திரு. சமரேந்திர சிங், திரு. டேனியல் அருள்மணி J.
திருமதி. நகோமி ராஜம் சாவ் புன்யா
திருமதி. மேனகா கோபிகிருஷ்ணன்
திரு. குமாரவேல் S.

டெல்லி

பட்பர்கன்ஜ்:

P.G. கிறிஸ்டோபர் & மேபல்

துதிக்க: புதிதாக 8 நபர்கள் கிறிஸ்துவிற்குள் தங்களது விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளனர். நாய்க்கடியிலிருந்து தங்கம்மா சுகம் பெற்றுள்ளார். கட்டிலிலிருந்து கீழே விழுந்த சோனியாவின் 6 மாதக்குழந்தை காயங்களின்றி காப்பாற்றப்பட்டுள்ளது. இரண்டு மாதங்களுக்கு முன்பு திருடுப்போன சாமிளா தேவியின் அலைபேசி திரும்ப கிடைக்கப் பெற்றுள்ளது. தீய ஆவியின் பிடியிலிருந்து 8 பேர் மீட்கப்பட்டுள்ளனர். 6 பெண் குழந்தைகளுக்குப் பின் ஓர் ஆண் மகவை தேவன் முகேஷ் மார்கஸிற்கு தந்துள்ளதற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: சுவிசேஷத்தின் மீது அக்கறை காட்டும் 43 நபர்கள் தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் அறிக்கையிட; கௌரி, லதா, சுஷிலா, மஞ்சு, ஆஷா, சர்வேஷ், ஜெயலக்ஷ்மி மற்றும் ருக்மணிக்கு குழந்தை செல்வங்கள் கிடைக்க; கவிதா, ஆஷா மற்றும் விமல் கல்லீரல் கல் பிரச்சனையிலிருந்தும், ரவி முதுகுத்தண்டுவட காசநோயிலிருந்தும், ராம்கிஷோர், மகேந்தர், தேவேந்தர் மற்றும் தவமணி பக்கவாதத்திலிருந்தும் சுகமடைய; முகேஷ், கிஷான், கணேஷ், சாமுவேல், ஜாஷ்வா, ஜோனத்தான் மற்றும் ஜெயராஜ் குடிப்பழக்கத்திலிருந்து மீள; ஆதித்யா, நேகா, பரத், பிரேம்சந்த், ராஜா, இமான் ஆகியோருக்கு தகுந்த வாழ்க்கைத்துணைகள் அமைய; பிரேம்சந்திற்குரிய ஓய்வூதியம் விரைவில் அரசாங்கத்திடமிருந்து கிடைக்க ஜெபிப்போம்.

ராஜஸ்தான்

உதய்பூர்:

ஆஷிஷ் குமார் & சவிதா தேவி

துதிக்க: ஐந்து இரவுக்கூட்டங்கள் மற்றும் ஒரு ஆத்தும ஆதாயக்கூட்டம் மூலம் 5 கிராமங்களில் புதிதாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. பொல்லாத ஆவிகளின் பிடிகளிலிருந்து மகிமா மற்றும் ஹேனா விடுவிக்கப்பட்டுள்ளனர். ஓப்ரா கிராமத்தில் சுவிசேஷத்திற்கான வாசல் திறக்கப்பட்டு, ஒரு குடும்பம் கிறிஸ்துவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: கிரியா மற்றும் திடி தாலுகா பகுதிகளில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட; இம்மாதம் திட்டமிடப்பட்டுள்ளபடி வெளிப்புற சந்திப்பு ஊழியம் 45 கிராமங்களில் நடைபெற; தங்களது 22 வயது மகனை இழந்து தவிக்கும் நமது சுதேச ஊழியர் மோகன்பாயின் குடும்பம் தேவ ஆறுதல் பெற; கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவுடன் தங்களது ஆடு மரித்துப்போனதினிமித்தம் ஜெகதீஷ் மற்றும் ரூப்லால் தங்களது விசுவாசத்தில் நிலைதடுமாறாமல் இருக்க; பிஜாலி கிராமத்தலைவர் பகராம் மூளைப்பிரச்சனையிலிருந்து முழு சுகம் பெற ஜெபிப்போம்.

மே

8

ஞாயிறு

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஜஸ்டின் Y.

திருமதி. நிருபோமா கோஸ்லா நாத்தான்

கைர்த்தல்:

செல்வராஜ் & செல்வம்மாள்

துதிக்க: புதிதாக நான்கு பேர் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். ராய்சீக்கியர்கள் வசிக்கும் பகுதியிலுள்ள ஒரு கிராமத்தில் புதிதாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. உர்மதா கிராமத்தில் நடைபெற்ற சிறியளவிலான சத்சங் நிகழ்ச்சி நட் சமூகத்தைச் சார்ந்த 50 நபர்களுக்கு மிகவும் ஆசீர்வாதமாக அமைந்துள்ளது. நட், ராய்சீக், ஷாஷி இனமக்கள் மத்தியில் தொடர்ச்சியாக ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன. மொர்காபாசி கிராம அனு மற்றும் சுமன் பல்வேறு பெலவீனங்களிலிருந்தும், தீய ஆவிகளின் பிடிகளிலிருந்தும் மீட்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: வேத வசனத்தில் நமது விசுவாசிகள் வளரவும், அவர்கள் தங்களது சொந்த சமூகத்திலிருந்து அநேகரைக் கிறிஸ்துவண்டை வழிநடத்தித் தங்கள் திருச்சபைகளை மேம்புறச் செய்யவும்; இன்னும் 5 கிராமங்களுக்கு நமது ஊழியப் பணிகள் விரிவாக்கப்பட ஜெபிப்போம்.

சாங்ரியா: பவுலோஸ் பர்ஜோ & பினிட்டா டொப்போ

துதிக்க: புதிதாக 4 நபர்கள் கிறிஸ்துவின்பால் சேர்ந்துள்ளனர். நாக்ரானா கிராம கௌர் & சுக்பிரீத் கௌர் தம்பதியர் குழந்தை பாக்கியம் பெற்றுள்ளனர். சத்சங் நிகழ்ச்சி, இரவுநேர ஜெபக்கூட்டங்கள், உபவாச ஜெபக்கூடுகைகள் அனைத்தும் அநேகருக்கு ஆசீர்வாதமாக அமைந்துள்ளன. ரணிவாலா கிராமத்தில் வாழும் லக்விந்தர் சிங்கின் மகன் இந்துராஜ் சிங்கின் திருமணம் கிறிஸ்தவ முறையில் சிறப்பாக நடைபெற்றுள்ளது. ஜெபத்தின் மூலம் நமது விசுவாசி தேஷா சிங் தனது விவசாயப்பணிக்கென ஒரு டிராக்டரை வாங்கும் வசதிப் பெற்றமைக்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: நாக்ரானா கிராம நமது விசுவாசிகளின் பிள்ளைகளான அஜய்வீர், ஜோதி ஆகியோருக்கு நல்ல வாழ்க்கைத் துணைகள் அமைய; அலிபுரா கிராம சுக்பால் சிங் மற்றும் நாக்ரானா கிராம லுகத் சிங் குடிப்பழக்கத்திலிருந்து வெளிவர; காசநோயிலிருந்து குல்தீப் மற்றும் குர்மீத் கௌர் குணமடைய; அலிபுரா கிராம ரோஷினி கெட்ட ஆவியின் பிடியிலிருந்து மீள ஜெபிப்போம்.

தொண்டை திறந்தது!

மகாராஷ்டிரா, நேர் பணித்தளம், மால்பூர் கிராமத்திலுள்ள மோனா மால்ச்சே என்பவருடைய தொண்டையில் ஒரு பெரிய கட்டி உருவாகி, அவரை எவ்வித உணவும் உண்ணமுடியாமல் தடுத்துக்கொண்டிருந்தது. அவர் அநேக மருத்துவர்களையும், மந்திரவாதிகளையும் தேடிச் சென்று சுகத்திற்காக பல முயற்சிகளைச் செய்தும், அவருக்கு சுகமே கிடைக்கவில்லை. கடைசியில், தொண்டையில் அறுவை சிகிட்சை செய்தால்தான் அவர் இனி உணவு உண்டு உயிர்ப்பிழைக்க முடியும் என்கிற தருவாயில், அவர் நமது ஆராதனையில் கலந்துக்கொண்டு ஜெபிக்கவே, தேவன் அற்புத சுகம் அருளினார். அதன் விளைவாக, அவருடைய முழு குடும்பமும் தேவனை ஏற்றுக்கொண்டது. தேவனுக்கே மகிமை!

மே
9
திங்கள்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. முத்துச்செல்வி செந்தில்குமார்

திரு. வகேரா பிரமோத்குமார் தர்மபாய்

உத்தரப் பிரதேசம்

ஜின்ஜக்:

சமரேந்திர சிங் & சுஸ்மித்தா

துதிக்க: புதிதாக 12 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதின் மூலம் 600 நபர்கள் முதல்முறையாக கிறிஸ்துவை அறிந்துள்ளனர். போலா நகர் ஆலயத்தில் வைத்து நடைபெற்ற சுதேச ஊழியர் குடும்பங்களுக்கான ஒருநாள் பயிற்சிக்கூடுகையில் 8 குடும்பங்களும், 24 நபர்களும் கலந்துக்கொண்டு மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர். 26 கிராமங்களில் ஊழியப் பின்தொடர்பணிகள் செய்யப்பட்டுள்ளன. 500 சுவிசேஷ கைப்பிரதிகளும், 700 புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன. நமது விசுவாசிகளுடைய ஜெபத்தின் மூலம் ரசுலாபாத் கிராம நமது விசுவாசி சலோமிக்கு அரசாங்க வேலை கிடைத்துள்ளது. முதேரா கிராமத்தில் வைத்து நடைபெற்ற சத்சங் நிகழ்ச்சியில் 40 நபர்கள் கலந்துக்கொண்டு பயன்பெற்றுள்ளனர். ரசுலாபாத் கிராம ஜப்தூரின் மகன் சீமா தீவிர சிகிட்சைக்கென அவசர சிகிட்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது, நமது விசுவாசிகள் கூடி ஜெபித்த ஜெபத்தைக் கேட்டு, தேவன் அவருக்கு ஈந்துள்ள அற்புத சுகத்திற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: ராஜ்பூர் மற்றும் ஜிம்மாமூ கிராம மக்கள் யாவரும் கிறிஸ்துவை அறிகிற அறிவிற்குள் வர; பூரா கிராம நரேஷ் புற்றுநோயிலிருந்தும், சோனு வலிப்பு நோயிலிருந்தும் பூரண குணமடைய; பங்கஜ் குமாரின் மகள் அருஷி மற்றும் நமது சபை மூப்பரான சன்னிலால் நாய்க்கடியினால் உண்டாகும் தீதான பக்கவிளைவுகளிலிருந்து பாதுகாக்கப்பட; கண் அறுவை சிகிட்சை மேற்கொண்டிருக்கும் நமது ரூரா சபை மூப்பரான அனில் குமார் விரைவில் சுகம் பெற்று, ஆலய ஆராதனையில் பங்குப்பெற ஜெபிப்போம்.

ரணியா:

மாங்வெய் ஃபோம் & நிஷா

துதிக்க: புதிதாக 9 நபர்கள் கிறிஸ்துவின் அன்பைக்கண்டு, அவரை இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷம் பறைசாற்றப்பட்டுள்ளது. நடந்து முடிந்துள்ள விசுவாசிகளின் குடும்பக்கூடுகையில் பங்குப் பெற்றவர்களில் 5 குடும்பங்கள் நமது வெளிப்புற சந்திப்பு ஊழியங்களில் உதவி செய்வோம் என உறுதியளித்துள்ளனர். சபையில் நடைபெற்ற பெண்கள் தின கொண்டாட்டத்தின்போது கொடுக்கப்பட்ட தேவச்செய்திகளின் மூலம் பலவிதங்களில் நமது பெண் விசுவாசிகள் உற்சாகமூட்டப்பட்டுள்ளனர். குடும்பப்பிரச்சனையினால் வீட்டிலிருந்து 4 மாதங்களுக்கு முன்பே வெளியேறிய அங்கித் குமார் ஜெபத்தின் மூலம் பத்திரமாக வீடு திரும்பியுள்ளார். எக்ரா கிராம குட்டு சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்து பூரண சுகம் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: தீய ஆவிகளின் கட்டுகளிலிருந்து திலீப் பால், சந்திர பிரபா, கிருஷ்ணா தேவி மற்றும் பிங்கி விடுவிக்கப்பட; ஜியான்சிங், சட்டேந்தர், சவ்ராவ், ஹரி ஓம், மது, பிரதீப் மற்றும் சுனில் இரட்சிப்படைய; ஃபிரோஜ், ஹக்கிம், மனோஜ், சந்தீப் மற்றும் குல்தீப் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலையடைய ஜெபிப்போம்.

மே 10 செவ்வாய்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. கென்னத் கரியப்பா
திருமதி. ரத்னம்மா சந்தியா நாயக்
திருமதி. ஜெயா கௌரி செல்வின் சாம்
திருமதி. சாந்தம்மாள் ஜாண்சன்
திரு. உம்பியாக் லால், திருமதி. சரணி டிகே
திருமதி. ஷீபா புஷ்பராணி ஜாண் பெனின்
திரு. ஹென்றி சாலமோன் G.
திரு. பங்காரு நாயுடு கர்ரி
திருமதி. மன்ஜுஷா கௌதம், திருமதி. ரஷ்மி பிரவா
திருமதி. சங்கீதா ஜெசிந்தா இம்மானுவேல்
திரு. டேனியல் தனசிங் S.

ஹசேரன்:

ராஜன் & ஜெபமலர்

துதிக்க: புதிதாக 5 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. புதிதாக 8 நபர்கள் கிறிஸ்துவண்டை சேர்ந்துள்ளனர். ஜெபத்தின் வாயிலாக சுக்தேவி பிரிந்த தனது கணவருடன் மீண்டும் இணைந்ததோடு, பாம்புக் கடியினின்றும் காப்பாற்றப்பட்டுள்ளார். பர்காசி கிராம சஞ்சு கல்லீரல்கட்டி பிரச்சனையிலிருந்து பூரண சுகம் பெற்றுள்ளதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

ஜெபிக்க: பின்மாற்றமடைந்திருக்கும் நமது விசுவாசிகளின் குடும்பங்கள் மீண்டும் விசுவாச வாழ்விற்குள் வர; மனநோயிலிருந்து ஆகாஷ் சுகமடைய; ஆராதனைக்கு வர தடை விதிக்கும் ஆர்த்தியின் கணவர் மனம் மாற; ராகினியின் குடும்பத்திற்கு ஆசீர்வாத மான மழலை செல்வம் கிடைக்க ஜெபிப்போம்.

மத்தியப் பிரதேசம்

முரைனா:

ஜெபக்குமார் & ஜெயந்தி கிரேஸ்

துதிக்க: நிவாலி மற்றும் அய்னோ கிராமங்களில் புதிதாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. கெட்ட ஆவியின் பிடியிலிருந்து மனிஷா விடுவிக்கப்பட்டுள்ளார். சிவம் என்பவருக்கு L.I.C-ல் நிரந்தர பணியொன்று கிடைத்துள்ளது. ஆத்தும ஆதாயக்கூட்டங்கள் 5 இடங்களில் சிறப்பாக நடைபெற்றதற்காகவும், புதிய விசுவாசிகள் அநேகர் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கை செய்ய ஆயத்தமாய் இருப்பதற்காகவும் கர்த்தரைத் துதிப்போம்.

ஜெபிக்க: குஷ்கம்மா, தத்தேரா, நிவாலி, சின்டா, விசாங்பூர், டுஹாரி கிராம மக்கள் யாவரும் கிரமமாக வந்து நமது ஞாயிறு ஆராதனையில் பங்கேற்க ஆராதனைக்குழுவொன்று இங்கு துவங்கப்பட; பாப்பு குடிப் பழக்கம் மற்றும் தன்னைத்தானே காயப்படுத்திக்கொள்ளும் கொடூர குணத்திலிருந்தும், அவரது மனைவி மனச்சோர்பினின்றும் விடுவிக்கப்பட; விஜய் சிங், கணேஷ் ராம், ஜெய்தேவி மற்றும் சுனிலின் குடும்பங்களில் மழலைசெல்வங்கள் பிறக்க; சுனிலிற்கு நல்ல வேலை கிடைக்கவும், தைராய்டு பிரச்சனையினால் கஷ்டப்படும் அவரது மனைவிக்கு சுகம் கிடைக்கவும், அவரது தாயாருக்கும் மனைவிக்கும் இடையே சமாதான உறவு ஏற்படவும்; சமீபத்தில் திருமணமான நமது விசுவாசியின் மகள்கள் கர்த்தருக்குள் சாட்சியுள்ள வாழ்வு வாழவும், தங்களது கணவன் மார்களின் குடும்பத்தினரைக் கர்த்த ரண்டை வழிநடத்தவும் ஜெபிப்போம்.

மே 11 புதன்

உபவாச ஜெபநாள்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. அகஸ்டஸ் புஷ்பராஜ்
திருமதி. ஜோன்ஸ் ஸ்வீட்லின் பால் டேனியல்
திரு. ஆனந்த குமார் செல்வராஜ் V., திருமதி. ஜின்சி

கர்கோன்: ஐசக் & சீதா

துதிக்க: தெஷ்காவ் கிராமத்தில் புதிதாக ஒரு ஆராதனைக்குழு துவங்கப்பட்டுள்ளது. ஜெபத்தின் மூலம் செவந்தி மஞ்சள் காமாலை நோயிலிருந்து சுகம் பெற்றுள்ளார். நவால் சிங், செரு, குலாப் சிங், ரேகா, ஜின்லி, ரோஷ்னி மற்றும் மாகி தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

ஜெபிக்க: நீல்காந்த் மற்றும் அவரது மனைவி கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவும், அவர்கள் மூலம் அவர்களது கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்படவும்; குடிபோதையில் தனது பெற்றோரையும் மனைவியையும் அடித்துத் துன்புறுத்தும் பிக்கோரா குடிப்பழக்கத்திலிருந்து வெளிவர; சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ள காவ்லா, காதி, நாகல்வாடி, தேவனாலி, மோகன்புரா ஆகிய கிராமங்களில் ஆராதனைக்குழுக்கள் துவங்கப்பட; கொக்காவா கிராம காலு தோல் ஒவ்வாமை நோயிலிருந்து சுகமடையவும், ரமேஷ் & யசோதா தம்பதியருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கவும்; கடந்த 7 வருடங்களாக முழுநேர ஊழியரில்லாதிருக்கும் இப்பணித்தளத்திற்கு தேவன் நல்லதொரு ஊழியரை அனுப்பித் தர ஜெபிப்போம்.

உதய்நகர் (பாக்லி):
D. வில்சன் & ரஷ்மித்தா பரிடா

துதிக்க: சுமன்பேன் பக்கவாதத்திலிருந்து சுகம் பெற்றுள்ளார். அதிக ஜெபங்களின் மூலம் கர்த்தர் நமது ஊழியர்களைக் கிருபையாக எதிர்ப்பாளர்களின் கைகளுக்குத் தப்புவித்து வருகின்றார். அநேக மாதங்களுக்குப் பிறகு துவங்கப்பட்டுள்ள போட்லா திருச்சபை ஆராதனையை அச்சபை மூப்பர் அமர்சிங் சிறப்பான ஆவிக்குரிய ஒழுங்குடன் நடத்தி வருகின்றார். கர்த்தருடைய வல்லமையினால் தெம்பரணியா திருச்சபை ஆவிக்குரிய விதத்திலும், ஆள் எண்ணிக்கையிலும் வளர்ந்து வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: தன்சாத்புரா திருச்சபை கிறிஸ்துவில் நன்கு வளர; குஜராத்திற்குப் புலம்பெயர்ந்து செல்லும் நமது விசுவாசிகள் அங்கே நற்சாட்சியுள்ள கிறிஸ்தவ வாழ்வு வாழ; தொடர்ந்து கிறிஸ்தவ எதிர்ப்பாளர்களின் கரங்களுக்கு தேவன் நமது ஊழியர்களைத் தப்புவிக்கவும், எதிர்ப்பாளர்கள் யாவரும் கிறிஸ்துவின் அன்பை உணரவும்; ராம்புரா கிராம தேவ்சிங் பக்கவாதத்திலிருந்தும், சய்தாபேன், ருக்மாபேன், சுக்மாபேன், மஞ்சுபேன், பல்கிபேன், ராஜுபாய் ஆகியோர் தீய ஆவிகளின் பிடிகளிலிருந்தும் விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

கால்வா: பினித் பிரசாத் பர்தன் & அமோஜிதா பர்தன்

துதிக்க: குடிப்பழக்கத்திலிருந்தும், மனைவியை அடிக்கும் தீய குணத்திலிருந்தும் ரோஷ்னி கிராம சோமாபாய் மனம் மாறியுள்ளார். தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து சாரதாவும், ஆகாஷும் விடுதலை பெற்றுள்ளனர். கர்வேடி கிராம பியாரிமாய் கோவிட்-19 நோய் அறிகுறி பெலவீனங்களிலிருந்து ஜெபத்தின் மூலம் பூரண சுகமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: அருகாமையிலுள்ள மாநிலங்களுக்கு தொழிலினிமித்தமாக இடம்பெயர்ந்து சென்றுள்ள நமது விசுவாசிகளின் ஆவி, ஆத்தும, சரீரப் பாதுகாப்பிற்காக; மஜ்வாலி கிராம படியாமாய் காசநோயிலிருந்தும், சங்கீதா நாக்குக் கட்டியிலிருந்தும் சுகம் பெற; பாவுசிங்கின் குடும்பத்தில் காணப்படும் பிரச்சனைகள் யாவும் நீங்கி, தெய்வீக சமாதானம் யாவரின் உள்ளங்களிலும் பெருக்கெடுக்க; தீய ஆவியின் பிடியிலிருந்து ஜமுனாய் காப்பாற்றப்பட ஜெபிப்போம்.

மே
12
வியாழன்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. குமார் பால் K.
திரு. மித்லேஷ் தீப்ரத்னா

பீஹார்

கிழக்கு கங்கை பிராந்தியம்:

பாபு புஷ்பராஜ் & ரேச்சல் ஜாய்ஸ்

துதிக்க: நமது விசுவாசிகள் இயேசுவைக் குறித்த நற்செய்தியை வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள் மூலம் தங்களுக்கு அருகாமையில் இருக்கும் கிராமங்களுக்குச் சென்று அறிவிப்போம் என அர்ப்பணித்துள்ளனர். ரங்கஹா, பெஜ்னாத்பூர், டூஹா, பெக்பார் ஆகிய கிராமங்களில் ஊழியப் பின்தொடர் பணிகள் ஆசீர்வாதமாக நடந்து முடிந்துள்ளன. மால்தா பணித்தள தன்னார்வ ஊழியர் ஸ்டீபன் மால்தோவிற்கு கொடிய சளி மற்றும் காய்ச்சலிலிருந்து ஜெபத்தின் வாயிலாக கிடைத்துள்ள நற்சுகத்திற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: திருமணமாகி 15 வருடங்களாகியும் குழந்தை பாக்கியம் இல்லாதிருக்கும் லால்பூர் கிராம நமது சபை மூப்பர் பூலேஷ்வர் சதாவிற்கு ஆசீர்வாதமான குழந்தை செல்வம் கிடைக்க; முசாஹர் பணித்தள பிள்ளைகளின் படிப்பிற்காக; பிற மாநிலங்களுக்கு தொழிலினிமித்தமாக சென்றுள்ள 12 வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகளின் வாழ்வாதார தேவைகள் சந்திக்கப்படவும், அவர்களுடைய நல்வாழ்வுக்கென நல்ல திட்டங்களை அரசாங்கம் அமைத்துக்கொடுக்கவும்; தன் தந்தையை சமீபத்தில் இழந்திருக்கும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஒரே குடும்பத்தினாரான பலுக்கா கிராம மித்லேஷின் குடும்ப அங்கத்தினர்களுக்கும், தனது மூத்த மகனை இழந்து தவிக்கும் நமது ஊழியர் அருட்திரு. உதிப்தகுமார் பாகின் குடும்பத்தினருக்கும் தேவன் மனஆறுதலைக் கொடுக்க; பிப்ரா, திருவேணிகன்ஜ் மற்றும் ஜெய் நகர் பகுதிகளில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்படவும், புதிய தொடர்பாளகள் கிடைக்கவும்; பிச்சல்பாடா மற்றும் ஜடகுந்தி கிராமங்களில் நடைபெற்று வரும் ஆலயக்கட்டுமானப்பணிகள் சிறப்பாக நிறைவுற ஜெபிப்போம்.

ஜார்க்கண்ட்

அமரபாடா:

பென்ஹர் M. & மேரி ஜான்சி ராணி

துதிக்க: புதிதாக 4 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். நடக்க இயலாமலிருந்த ஃபத்தேபூர் சபையைச் சார்ந்த ராஜேஷ் சோரேனின் மகன் நிக்கில் சோரேன் 4 வருடங்களுக்குப் பிறகு ஜெபத்தின் பலனாக இப்போது நடக்க ஆரம்பித்துள்ளார். திலியா கிராம சுனில் மராண்டி, தான் பயணம் செய்த படகு கவிழ்ந்தபோதிலும் அவர் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

ஜெபிக்க: பத்தர்தங்கா கிராம சுதிர் பெசரா, நர்ஜி கிராம அபினியஸ் சோரேன், ஜித்துகண்டி கிராம பான்சிரி முர்மு ஆகியோர் தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து மீட்புப்பெற; தொபூர்னா கிராம பிடிலால் சோரேன் காசநோயிலிருந்தும், துரியா கிராம பரோல் பஸ்கி பக்கவாத நோயிலிருந்தும் ஆரோக்கியம் பெற ஜெபிப்போம்.

மே 13 வெள்ளி

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ராபர்ட் வில்லியம் L., திரு. ஆல்பின் T.
திரு. மித்ரன் E., திரு. ரமேஷ் வேல்ராஜ் A.
திரு. முத்தையா U. சாமுவேல்
திருமதி. பங்கஜம் ஹரிபாபு குந்த்ரா
திருமதி. ஹேனா மேரி ஸ்லெஸர் ராஜேந்திரன்
திரு. நெகேமியா

தெலோ:
பால்ராஜ் P. & ஜெபஜோதி

துதிக்க: புதிதாக 13 நபர்கள் கிறிஸ்துவின் அன்பிற்குள் வந்துள்ளனர். திர்பான் பாரமசியாவில் 170 விசுவாசிகளும் ரங்கா திருச்சபையில் 250 விசுவாசிகளும் என லெந்து கால உபவாச ஜெபக்கூடுகையில் பலர் பங்குபெற்று ஆசீர்வாதமடைந்துள்ளனர். பாரமசியா கிராம மனுவேல் ஹெம்ரோமிற்கு நமது விசுவாசிகளின் ஜெபத்தின் மூலம் மனவளர்ச்சியின்மையில் இருந்து அற்புத சுகம் கிடைத்துள்ளது. அதுபோல் டுடுவா சபையைச் சார்ந்த தெரசா ஹன்ஸ்தக்கிற்கும் விஷப்பாம்புக்கடியின் ஆபத்திலிருந்து நல்ல பாதுகாப்பு கிடைத்துள்ளது. சபாயா கிராம தினேஷ் ஹன்ஸ்தக் 4 சக்கர வாகன விபத்திலிருந்து தேவ கிருபையால் காப்பாற்றப்பட்டு, புதுவாழ்வு பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: புதிய விசுவாசிகள் ஆவிக்குரிய ஜீவியத்தில் நன்கு வளரவும்; தாராபூர், பொங்குவா, பக்முண்டி, பஸ்னியா மற்றும் பாரமசியா பகுதிகளில் சுவிசேஷத்தைக் கேட்டுள்ளோர் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; பட்லோஹாரா கிராம 7 வயது குழந்தை ரோஸ்மிலா முர்மு நரம்புப் பிரச்சனையிலிருந்தும், இந்துவா கிராம 6 வயது குழந்தை ஏபேல் முர்மு படுத்தப்படுக்கையாகிக் கிடக்கும் பக்கவாதத்திலிருந்தும் சுகமடைய; பிசான்பூரில் நடந்துக் கொண்டிருக்கும் ஆலயக்கட்டுமானப்பணியில் மேற்கூரை மற்றும் தரை அமைக்கும் பணி விரைவில் முடிவடைய; பாலிதிஹ் மற்றும் மட்டியோ சிறுவர் பராமரிப்பு மையங்களில் கல்விப்பயிலும் 150 பிள்ளைகளின் பாதுகாப்பு, ஆவிக்குரிய ஜீவியம் மற்றும் படிப்பிற்காக ஜெபிப்போம்.

ராம்கார்: செந்தில் குமார்
தீமோத்தேயு & முத்துச்செல்வி

துதிக்க: புதிதாக 49 நபர்கள் கிறிஸ்துவின் மந்தைக்குள் அடியெடுத்து வைத்துள்ளனர். சாஜன் முர்மு விபத்தின் மூலம் தலையில் அடிப்பட்டுக் கிடந்தப் போதிலும், அவரது ஜீவன் அற்புதமாகப் பாதுகாக்கப்பட்டுள்ளது. நமது சபை மூப்பர்களாலும், விசுவாசிகளாலும் விடியற்கால ஜெபம் உற்சாகமாக ஏறெடுக்கப்பட்டு வருகின்றது. நமது விசுவாசிகள் வயிற்று வலியினால் துன்பப்பட்ட போது, தாங்களாகவே ஜெபித்து, எண்ணெய்ப்பூசி சுகமடைய தேவன் கற்பித்துக் கொடுத்த விசுவாச நன்மைக்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிட ஆயத்தமாகும் சபய்தாமா மற்றும் லோத்பகாடி கிராம விசுவாசிகள் கிறிஸ்துவில் மேலும் வளர; ஒருவித இரவுநேர பயத்தினின்று சுமிர் மொகாலி மற்றும் சுனில் டுடு விடுதலை பெற; கோடைக்கால அதிகப்பட்ச வெப்பத்தினால் அதிக சரீரப் பாதிப்பிற்குள்ளாகும் நமது மிஷனெரிகள் நல்ல சுகம் பெறவும், பாதுகாக்கப்படவும் ஜெபிப்போம்.

மே 14 சனி

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஞானபுஷ்பம் அருள்ராஜ்
திரு. வினோத் குமார் சிங், திரு. ரவி K.
திருமதி. மமதா J.V. திம்மண்ணா, செல்வி. ரூத் மால்தோ

பத்னா:

கென்னடி சிங் & ஹயோஜம் லின்தோய்பி

துதிக்க: புதிதாக 10 நபர்கள் கிறிஸ்துவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆலயங்கள் கட்டப்படு வதற்கென 5 நிலப்பகுதிகள் விசுவாசிகளால் நன்கொடையாக அளிக்கப்பட்டுள்ளன. கெஷாரோ திருச்சபையில் பிரச்சனைகள் நீங்கி தேவ சமாதானம் பிறந்துள்ளது. பக்கவாத நோயிலிருந்து சிரில் சோரேன் சுகமடைந் துள்ளார். ஜுமர்பந்த் மற்றும் கெஷாரோ பகுதி களில் நிலவும் தவறான போதனைகளின் மத்தியிலும் நமது விசுவாசிகள் கர்த்தருக்குள் தெளிந்த புத்தியுடன் திடமாய் நிற்க கிருபையளித்து வருகின்ற தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: போனிதங்கல், சிரம்பூர், கயாபானி ஆகிய இடங்களில் புதிய திருச்சபைகள் எழுப்பப்பட; சாம்சன் மராண்டி மற்றும் கிறிஸ்து டுடுவின் குடும்பங்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; சைமன் கிஸ்கு & சுனிதா முர்மு தம்பதியருக்குக் குழந்தை பாக்கியம் அருளப்பட; நடக்க இயலாமல் இருக்கும் தஷீலா டுடு, பக்கவாதத்தினால் பாடுபடும் பண்டுக் முர்மு மற்றும் சஞ்சலி முர்மு, சிறுநீரகப் பாதிப்பினால் அல்லல்படும் நமது சபை மூப்பரான இம்மானுவேல் அம்தன்தா யாவரும் அற்புத சுகம் பெற்றிட ஜெபிப்போம்.

புனித தாமஸ் ஆங்கிலப்பள்ளி, பந்தேனி : விக்டர் ஜெயசீலன் & பிரின்சஸ் நகோமி; கிப்ஜென் & மாவி; சாந்தினி, மெர்ஸி & சுரஜ்னா

துதிக்க: நமது 10-ம் வகுப்பு மாணவர்கள் தங்களது நடைமுறைத் தேர்வை நல்ல முறையில் முடித்துவிட்டு, மீதியுள்ள பிறப்பகுதி தேர்விற்கென தங்களைச் சிறப்பாக ஆயத்த மாக்கி வருகின்றனர். இயற்பியல் பாட ஆசிரியர் பிள்ளைகளுக்கு எளிதில் புரியும்படியாக நன்கு விளக்கத்துடன் பாடங்களை நடத்துவதால், பிள்ளைகள் இயற்பியல் பாடங்களை மிகுந்த ஆர்வமுடன் கற்று வருகின்றனர். நமது விடுதியில் புதிதாக 25 சிறுவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். நமது பள்ளியில் கல்விப் பயின்ற லூக்கா மால்தோ மற்றும் தினேஷ்பர் மால்தோ நமது பள்ளியிலேயே ஆசிரியர்களாக வந்து இணைந்துள்ளனர். ஆசிரியர் பற்றாக்குறைகளின் மத்தியிலும் வகுப்புகள் சீராக நடைபெற்று வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ஜார்க்கண்டின் அரசாங்கத் தேர்விற்கென ஆயத்தமாகி வரும் 8-ம் & 9-ம் வகுப்பு மாணவர்களுக்கு தேவன் நல்ல ஞானம் அருள; முந்தைய நாட்களில் ஹிந்தி மற்றும் ஆங்கில மொழிகளில் அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டு வந்த வினாத் தாள்கள், தற்போது ஹிந்தி மொழியில் மட்டுமே வெளியிடப்படுவதால் வினாக்களைத் தெளிவாகப் புரிந்து கொள்வதில் சிரமம் மேற்கொள்ளும் ஆங்கில மொழி வழி மாணவர்களுக்காக; நிமோனியாவினால் கஷ்டப்படும் 1-ம் வகுப்பு மாணவன் கால்வின் லாசரஸ் அற்புத சுகமடைய; தொற்றுநோய் காலத்திற்குப்பின் மீண்டும் விடுதிக்கு வராம லிருக்கும் பிள்ளைகள் விரைவாக வந்து தங்களது கல்வியைத் தொடர; விடுதியில் புதிய சூழ்நிலைகளை ஏற்க முடியாமல் கஷ்டப்படும் புதிய சிறுபிள்ளைகளுக்காக; சாராயம் காய்ச்ச பயன்படுத்தப்படும் 'மாவா' என்ற மலர்களைச் சேகரிப்பதற்கென பெற்றோர்களே தங்களது சொந்த பிள்ளைகளைத் தினந்தோறும் அனுப்பி வைப்பதினால், நமது பகல் பராமரிப்பு சிறுவர் மையத்தில் பிள்ளைகளின் வருகை வெகுவாக குறைந்து வருகின்ற இந்த அவல நிலை மாற; பள்ளியில் இரண்டு மாடி கட்டிடம் கட்ட தேவையான நிதியுதவிகள் கிடைக்க; மிகவும் பெலவீனமாக உள்ள L.K.G. வகுப்புப் பயிலும் குழந்தை பய்தாவிற்காக; CBSE அங்கீகாரம் இப்பள்ளிக்குக் கிடைக்க ஜெபிப்போம்.

மே 15 ஞாயிறு

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஜான்சி ராஜேந்திரன்
திரு. தாமஸ் மேத்யூ, திரு. பாபு புஷ்பராஜ் D.
திருமதி. சாந்தி ஞானப்பண்டிதன்
திருமதி. டாக்டர். வில்சட் கிறிஸ் L.
திருமதி. ஜெயா வயோலா மாணிக்கம்
திருமதி. செல்வராணி பரணிதரன்
திருமதி. லட்சுமி வேடியப்பன்
திரு. பிஜு லால், திரு. பாகிரதி பிசோயி
திரு. கிம்பல் திலீப்பாய் ரகுபாய்
திருமதி. சுரிதிகா தினேஷ், திரு. சுரேஷ் மால்தோ S.
திரு. அஜய் பார்டே

லால்மட்டியா:

அமரேந்திரன் & சுவேதா

துதிக்க: முதல்முறையாக 11 நபர்கள் கிறிஸ்துவின் அன்பை ருசிக்க ஆரம்பித்துள்ளனர். ஆரம்பக்கால கட்டத்தில் தோரோம் சபாவிற்கு எதிர்ப்பைத் தெரிவித்து வந்த கிராமத்தினர் தற்போது எதிர்ப்பை கைவிட்டுள்ளனர். இப்பணித்தளத்தில் நடந்த மேளாவில் 4 புதிய குடும்பங்கள் கலந்து கொண்டுள்ளனர். தோரோம் சபாவின்போது திருடுப்போன ஒரு மிதி வண்டிக்கான செலவை நமது விசுவாசிகள் ஈடுகட்ட முன்வந்தபோது, சைக்கிளைத் திருடியவனே அதைத் திரும்பக் கொண்டு வந்து கொடுத்துள்ளான். விசுவாசிகள் மற்றும் சபைக்குழு அங்கத்தினர்கள் இணைந்து மேற்கொண்ட வீடு சந்திப்பின் மூலம் தற்போது ராம்கோல் திருச்சபையில் விசுவாசிகளின் வருகை அதிகரித்துள்ளது. ஒடிசாவிலிருந்து ஜார்க்கண்ட்டிற்கு பயணம் செய்வதற்கான அவசர நிதியுதவியை தீமோத்தேயு டூடு ஜெபத்தின் மூலம் பெற்றுள்ளார். நமது விசுவாசிகளை அடித்துத் துன்புறுத்தத் திட்டமிட்டிருந்த பான்ஜ்பூர் கிராம மக்களின் திட்டத்தை தேவன் அவமாக்கியதோடு, அக்கிராமத்திலிருந்தே மேலும் இரண்டு குடும்பத்தினரை சுவிசேஷத்திற்குச் செவிசாய்க்கவும் கிருபை செய்துள்ளதற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: வெளிப்புறப் பகுதிகளைச் சுவிசேஷத்தினால் சந்திக்க ஏற்ற தன்னார்வ ஊழியர்கள் கிடைக்க; ஹர்கட்டா, பியோராம், பால்கமி மற்றும் தில்லாபாத் திருச்சபைகளுக்கான அர்ப்பணிக்கப்பட்ட சபை மூப்பர்கள் கிடைக்கப்பெற; ஹர்கட்டா, சவ்வா, மொஹபத்தன் மற்றும் பான்ஜ்பூர் பகுதிகளைச் சார்ந்த புதிய விசுவாசிகளின் குடும்பங்கள் மற்றும் புதிய தொடர்பாளர்கள் யாவரும் ஆவிக்குரிய வாழ்வில் நன்கு வளர; பக்கவாதத்தினால் கை, கால்களின் செயல்பாடுகளை இழந்து, வலிப்பு நோயின் தாக்கத்துடன் காணப்படும் 2 வயது சிறுவன் அபிலால் சோரேன் சுகம்பெற்று சீராய் நடக்க; எல்லா வாரங்களிலும் அதிக இரத்தபலி செலுத்தப்படும் ஜுக்னிதான் என்ற புனித ஸ்தலத்தில் ஏறெடுக்கப்படும் மந்திரவித்தைகள் அதமாகிப்போக; பான்ஜ்பூர், பர்ராபந்த், பிராதர், சிலிக்காரா ஆகிய இடங்களிலுள்ள எதிர்ப்புகள் மறைய; ஹர்கட்டா கிராமத்தில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட; வாய்ப்பேச மற்றும் காது கேட்க முடியாமல் தவிக்கும் சவ்வா கிராம 4 வயது சிறுவன் நேகா சோரேன் அற்புத சுகம் பெற; மொஹபத்தன் கிராமத்தில் சுவிசேஷத்திற்கு விருப்பம் காட்டும் ஒரு புதிய குடும்பத்தினர் மூலம் அக்கிராமத்தில் ஆவிக்குரிய நன்மைகள் ஏராளம் நிகழ ஜெபிப்போம்.

மே 16 திங்கள்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. வில்சன் D., திரு. எபனேசர் G. சாம்
திருமதி. சினிக்தா மோகினிதேவி ஜீவன் ரஞ்சன்
திருமதி. கிறிஸ்டி ஜெயந்தி சதீஷ் குமார்

தம்னி:

ஜாண்பால் ஹாரிஸ் & விமலா டெய்சி

துதிக்க: போத்தன் மற்றும் பொடுவா பகுதிகளில் 3 நாட்கள் நடைபெற்ற மேளாவை நமது அனைத்து விசுவாசிகளும் ஊக்கமுடன் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளனர். மரத்திலிருந்து எதிர்பாராமல் கீழே விழுந்ததில் எந்தவொரு காயமுமின்றி பகேலாகுடியா கிராம தேவுத் மால்தோ காப்பாற்றப்பட்டுள்ளார். திருச்சபையினரின் ஜெபத்தின் மூலம் லெங்க்தபோடா கிராம லீலா மால்தோ தனது சுகவீனத்திலிருந்து முற்றிலும் தேறியுள்ளார். விசுவாசிகளின் மேளாவிற்குப் புறப்பட்டுவரும் வழியில் குந்தியோடா கிராம விசுவாசிகள் பெரும் சாலை விபத்தினின்று பாதுகாக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: எதிர்ப்புகளின் மத்தியில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருக்கும் பகேலாகுடியா கிராம புதிய விசுவாசிகள் தங்களது ஆவிக்குரிய வாழ்வில் மேலும் நன்கு வளர; பிடுபூரா கிராம விசுவாசிகள் வேதத்திற்குப் புறம்பான வழிபாட்டுச் சடங்காச்சாரங்களை முற்றிலுமாய் விட்டுவிட; அதரகோடா கிராமத்தில் ஞாயிறு ஆலய ஆராதனை நடத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட; குடியோடா கிராம மரியம் மால்தோவும், லீலாதோனி கிராம மரியமும் மனநோயிலிருந்து சுகம் பெற; தனது சொந்த கிராம மக்களாலேயே தனது விசுவாசத்திற்குக் கேடுவிளையும் வண்ணமாக எதிர்ப்புகளைச் சந்தித்துக் கொண்டிருக்கும் லீலாதோனி கிராம சாமுவேல் மால்தோ தனது விசுவாசத்தில் உறுதியாய் நின்று வெற்றி பெற; லீலாதோனி கிராம சாம்ரா மால்தோவும், தும்ரிகாக்ரி கிராம சுரேஷ் மால்தோவும் விசுவாசிகளைத் தொல்லை பண்ணும் செயல்களை விட்டுவிட; எல்லா விசுவாசிகளும் ஒழுங்கும் கிரமமுமாக ஆராதனைகளில் வந்து பங்குப்பெற ஜெபிப்போம்.

மேற்கு வங்காளம்

ராணிகன்ஜ்:

துருபராஜ் பெபர்த்தா & புஷ்பாஞ்சலி

துதிக்க: புதிதாக 10 நபர்கள் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவருடைய விசுவாச மந்தைக்குள் இணைந்துள்ளனர். லவதங்கா மற்றும் கண்டூர் ஆலயக்கட்டுமானப் பணிகளில் அவ்வாலயங்களின் உள்ளும் புறமும் சுவரமைக்கும் பணி வரை சிறப்பாக நிறைவேறியுள்ளது. 2 வருடங்களுக்குப் பிறகு பிராந்திய தோரோம் சபா கூட்டங்கள் கோலாகலமாக நடந்தேறியுள்ளன. சாகர்திஹி கிராமத்தில் சுவிசேஷத்திற்கான புதிய வாசல் திறக்கப்பட்டுள்ளது. சாத்பூர் கிராம நமது விசுவாசியொருவரின் அடக்க ஆராதனை எவ்வித எதிர்ப்புமின்றி கிறிஸ்தவ முறையில் நடைபெற்றுள்ளது. கொட்டாலி கிராம ஆரத்தி பெஸ்ரா ஜெபத்தின் மூலம் மனவளர்ச்சியின்மையிலிருந்து சுகம் பெற்றுள்ளார். சில வருடங்களுக்கு முன்பு ரூ.30,000/-ஐ ஒருவரிடத்தில் கொடுத்து அதைத் திரும்ப வாங்க இயலாமல் கஷ்டப்பட்டு வந்த நமது விசுவாசி கோபால் முர்மு, அதிக ஜெப முயற்சிக்குப் பின் தற்போது அப்பணத்தைத் திரும்ப கிடைக்கப் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: நமது அனைத்து விசுவாசிகளும் வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள் மூலம் ஆத்தும ஆதாயப்பணியில் ஈடுபட; இயேசுவை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருப்போரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; குஜுபித்தா பகுதியில் சுவிசேஷத்திற்கான திறந்தவாசல் உருவாக; பின்மாற்றமடைந்திருப்போர் மீண்டும் விசுவாசத்திற்குள் வரவும், ஆலய ஆராதனைகளில் பங்குப்பெறவும்; பொல்லாத ஆவியின் பிடியில் சிக்கித்தவிக்கும் சோனாலி சோரேன் விடுதலை பெற; ஆஸ்துமா வியாதியினால் அவதிப்படும் லக்ஷ்மி சோரேன் சுகமடைய; கன்ஜா முர்முவின் குடும்பம் ஞாயிறு ஆராதனையில் தவறாமல் பங்குப்பெற ஜெபிப்போம்.

மே 17 செவ்வாய்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஆசீர் T. Y. P.
திருமதி. உல்தாள் மேகி எஸ்தர் தாமஸ்
திருமதி. வசந்தி ஜெபக்குமார்
திருமதி. ஞான ஜெபஷீலா டேனியல் அருள்மணி
திரு. முதாவத்து ராஜு நாயக்

பாலுர்காட்: ஹரமோகன் & சுசம்மா

துதிக்க: பல்வேறு ஆவிக்குரிய நிகழ்ச்சிகளின் மூலம் சுவிசேஷத்தைக் கேட்டறியும் ஜனங்கள் சுவிசேஷத்திற்கு ஆவலுடன் செவிசாய்க்கின்றனர். தசுல் கிராம ஸ்ரீமதியை கையெலும்பு முறிவிலிருந்தும், பெல்பாடா கிராம சர்காரை கல்லீரல் பிரச்சனையிலிருந்தும், ராஜாபூர் கிராம மிதுனை வலிப்பு நோயிலிருந்தும் மற்றும் கல்பனாவை பெண்ணிய பிரச்சனையிலிருந்தும் தேவன் சுகம் பெறச் செய்துள்ளதற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: தொழிலினிமித்தமாக பக்கத்து மாநிலங்களுக்குப் புலம்பெயர்ந்து சென்றுள்ள நமது விசுவாசிகளின் பாதுகாப்பிற்காக; முன்சிபூர், பஸ்னாய், அத்குரி, லெட்டோதங்கா, அரக்தராங், பெல்தா, டான்கி, தெகி டோலா, கோக்ராம், பிள்பாடா, காசிபூர், துரல்தப்கா, தண்டஹிரா, மெக்குவா, ஜாரை மற்றும் மேனகர் கிராமங்களில் சுவிசேஷம் பகரப்பட; சுவிசேஷத்திற்கு செவிமடுக்கும் போன் ஹாட் கிராமத்தலைவர் பூடான் ஹெம்ரோமும், தராஜ்பூர் கிராமத்தலைவர் போண்டு ஹஸ்தாவும் இரட்சிப்படைய; பிமல் டுடு காலெலும்பு முறிவிலிருந்தும், சுவாமலி அடிக்கடி வரும் தலைசுற்றல் பிரச்சனையிலிருந்தும், பப்லு அதிக இரத்தஅழுத்தக் கோளாறிலிருந்தும் சுகமடைய; புதிய விசுவாசிகள் விசுவாசத்தில் உறுதியாக நிற்கவும், ஊழியத்தில் சுறுசுறுப்பாக ஈடுபடவும் ஜெபிப்போம்.

சம்சி: தீப் ரத்னா & மித்லேஷ்

துதிக்க: புதிதாக 6 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். இங்கே நடத்தப்பட்ட ஓர் கூடுகையில் சுமார் 1000 மக்கள் முதல்முறையாக இயேசுவைக் குறித்து கேள்விப்பட்டுள்ளனர். கோரா டோலா கிராம ஜிசு மர்தி மனநோயிலிருந்து அற்புதமாக சுகம்பெற்றுள்ளதால், அதைக் கண்டு அநேகர் சுவிசேஷத்திற்கு செவிகொடுக்க ஆரம்பித்துள்ளனர். 4 கிராமங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழியம் நடைபெற்றுள்ளது. 10 வருடங்களுக்குப் பின் வாரிசோனா கிராம முனியின் குடும்பம் ஆவிக்குரிய பின்மாற்ற நிலையிலிருந்து மீண்டு, ஆலயத்திற்கு மீண்டும் வருகின்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

ஜெபிக்க: ஓதாம்பூர் கிராம திபு சோரேன் குடும்பம் மற்றும் லக்ஷ்மி மர்தி கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; ஆத்தும பாரத்தோடுகூட வெளிப்புற சந்திப்பு ஊழியங்களில் நமது சுதேச ஊழியர்கள் ஈடுபட; சம்சி மற்றும் வாரி பகுதிகளில் ஊழியங்கள் மிகுந்த பயனளிக்கும் விதங்களில் நடைபெற ஜெபிப்போம்.

தூக்கத்தில் கழுத்தில் பாம்பு!

மகாராஷ்டிரா, முக்காடா பணித்தளத்தில் நமது ரய்தாலே திருச்சபையின் மூப்பர் இரவில் தனது சிறிய மகளோடு தூங்கிக்கொண்டிருந்தபோது, தனது கழுத்தில் ஏதோ ஊருவதைக் கண்ட அவர், அதைப் பாம்பு எனக் கண்டு, ஜெபத்துடன் பதற்றமடையாதபடி வெளியே சென்று, அந்தப் பாம்பைத் தனது கழுத்திலிருந்து இழுத்துத் தள்ளவே, அது அவரையும் அவரது மகளையும் ஒன்றுமே செய்யாமல் ஓடிவிட்டது. தேவனுக்கே மகிமை!

மே 18 புதன்

உபவாச ஜெபநாள்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஜெயந்தி பொன்னுராஜ்
திருமதி. ராஜம்மாள் ஜாண்சன்
திருமதி. எலிசபெத் சாலமோன்
செல்வி. கோன்கனி சந்திரிகாபேன் சாஹன்பாய்
திரு. ஸ்டீபன் R., திரு. முத்துக்குமார் M.
திருமதி. பொற்செல்வி ஃபெலிக்ஸ் கமாலியேல்
திருமதி. ரீட்டாஞ்சலி கரடா ஹமுவேல் லிம்மா
திருமதி. ஷீபா வெங்கடேஷ் வடார்
திருமதி. ஜான்சி ராணி யுவனேஷ்
திருமதி. சிங் கான் மாவி தங்வன்சங்
திரு. கவித் ராகேஷ் ரத்திலால்

இட்டாஹார்: அஸ்தபான் ஆதித்ய குமார் லிம்மா & மனினி பெபர்த்தா

துதிக்க: புதிதாக 29 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்க ஆரம்பித்துள்ளனர். 2 கிராமங்களில் முதல்முறையாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. பெலுஹார். சியூரிகுட்டு மற்றும் அமதி கிராமங்களிலிருந்து 5 குடும்பங்கள் புதிதாக இயேசுகிறிஸ்துவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். 700 பேர் கலந்துக்கொண்டு, தேவாசீர்வாதம் பெறும்படியாக பெலுஹார் கிராமத்தில் பிராந்திய தோரோம் சபா கூட்டம் சிறப்பாக நடந்தேறி உள்ளது. இக்கூட்டத்தில் பங்குப் பெற்ற நமது சபை மூப்பரொருவர் அவரது சரீரப்புண்களிலிருந்து அற்புத சுகம் பெறும்படியாக தேவன் கிருபை பாராட்டியுள்ளதற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: பவேதார் கிராம கிஸ்னு டுடு, பிரதீப் டுடு, மினு ஹெம்ரோம், பிங்கி டுடு, சாஜன் டுடு மற்றும் சுகி முர்மு ஆகியோர் இரட்சிப்படைய; அனைத்து புதிய விசுவாசிகளும் தங்களது விசுவாசத்தில் உறுதியாக நிற்க; சபைகளைச் சீராக நடத்திச் செல்வதற்கான கிருபைகளை தேவன் நமது சபை மூப்பர்களுக்குத் தர; சிறியளவிலான ஜெபக்குழுக்கள் தொடர்ச்சியாக நன்முறையில் இயங்க; அமதி கிராம பஹா சோரேன், பிஸோத் மர்தி பக்கவாதத்திலிருந்தும், சாட்னிகுட்டு கிராம துலி முர்மு வயிற்று பெலவீனத்திலிருந்தும், கௌல்பாடா கிராம கணேஷ் மராண்டி கால் காயங்களிலிருந்தும் பூரண சுகமடைய ஜெபிப்போம்.

அஸோம்

தேமாஜி:

நாத்தான் குமார் பெபர்த்தா & நிருபோமா

துதிக்க: அதிகப்பட்சமாக 300 நபர்களுக்கு முதல்முறையாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. பாசிமாரா, சிமலுகுரி மற்றும் பாஞ்சாலி கிராமங்களில் நடைபெற்ற கூட்டங்கள் அநேகருக்கு ஆசீர்வாதமாக அமைந்துள்ளன. புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

ஜெபிக்க: நமது முக்கிய தொடர்பாளர்களின் இரட்சிப்பிற்காக; மிரி, ஜாமுகுரி, பாசிமாரா, சிமலிகுரி, பாஞ்சாலி மற்றும் முரிதால் கிராம மக்களுக்குச் சுவிசேஷம் சென்றடைவதற்கான வாசல்கள் நன்கு திறக்கப்பட ஜெபிப்போம்.

வடகிழக்குப் பிராந்தியம்:

C.H. ஜாண் & வேணி

துதிக்க: நமது விசுவாசிகளிடையே சமிதி மற்றும் உள்ளூர் தலைமைத்துவம் அமைப்பதற்கென எடுத்த முயற்சிகள் யாவும் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளன. நமது ஊழியர்கள் தேவு & நய்னாபேன் தங்களது திருமணத்திற்குப் பின் மீண்டும் ஊழியப்பணிகளைச் சிறப்புடன் தொடங்கியுள்ளனர். ஜெனரேட்டர், ஒலிப்பெருக்கி மற்றும் L.C.D. ஆகியவற்றிக்கு ஆகும் செலவுகளை நமது விசுவாசிகளே தியாகத்துடன் நன்கொடையாக ஈந்தளித்துள்ளனர். கொடிய பெலவீனங்களிலிருந்து பரகந்தோ டோலி மற்றும் ஜோஷிரி தாகு பெற்றுள்ள சுகத்திற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: நமது ஊழியத்தை எதிர்க்கும் லக்கீம்பூர் பணித்தள பொடுமானி இன மக்கள் மனந்திரும்ப; பொமிதா, மூமி, அபிஜித் ஆகியோர் இரட்சிப்பின் வழியைக் கண்டுக்கொள்ள; பாடி, பாலூர்ஜோன், சில்லி மற்றும் ரிக்பி கிராமங்களில் சுவிசேஷத்திற்கான வாசல்கள் திறக்கப்பட; பின்மாற்றமடைந்துள்ள நமது விசுவாசிகள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர ஜெபிப்போம்.

மே
19
வியாழன்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஜான்சி பாலாஜி G.
திரு. ஹேமந்த குமார் சபார்

சத்தீஸ்கட்

பாண்டே:

பாபுஜி முர்மு & வயலட் ஹன்ஸ்தா; ரோஷன் மட்டாமி & சியா மட்டாமி

துதிக்க: கொரினார் பகுதியில் பெரியளவில் 2 நாட்களாக வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள் எவ்விதத் தடையுமின்றி நடந்து முடிந்துள்ளன. புதிதாக 3 நபர்கள் கிறிஸ்துவின் கல்வாரி நிழலுக்குள் தஞ்சம் புகுந்துள்ளனர். ராஜு தீய ஆவியின் கட்டிலிருந்து விடுதலை அடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: கிராமத்தலைவர், பஞ்சாயத்துத் தலைவர், சமாஜ் தலைவர்கள் மற்றும் காவல்துறையினரால் வரும் எதிர்ப்புகளின் அழுத்தங்கள் மத்தியிலும் நமது விசுவாசிகளும் மிஷனெரிகளும் கர்த்தருக்குள் திடமாய் நின்று ஊழியம் செய்ய; குண்டாம் கிராம மக்களால் தொல்லைகளுக்குட்படும் 2 விசுவாசிகளுடைய குடும்பங்களின் பாதுகாப்புக்காகவும், தொல்லைத் தருவோர் மனம் மாறவும்; இரு சக்கர வாகனத்திலிருந்து கீழே விழுந்ததினால், முதுகுத்தண்டுவட எலும்பில் முறிவு காணப்பட்டு, சிகிட்சை எடுத்துக் கொண்டிருக்கும் டூலு லெக்கமி பூரண சுகம் பெற; சோனி கோவாச்சி கெட்ட ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

ஒடிசா

டேங்கானல்:

சந்து மராண்டி, சுரேஷ் மால்தோ

துதிக்க: புதிதாக 7 கிராமங்களில் சுவிசேஷ வசனங்கள் பகரப்பட்டுள்ளதின் விளைவாக ஏறத்தாழ 240 நபர்கள் சுவிசேஷத்தை முதல்முறையாகக் கேட்டுள்ளனர். நமது ஞாயிறு ஆலய ஆராதனையில் 4 புதிய குடும்பங்கள் வந்து கலந்து கொள்கின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: கிராமத்தினரால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் கொரகடியா கிராம ஆலயக்கட்டுமானப்பணி மீண்டும் ஆரம்பிக்கப்பட; சுவிசேஷத்தின்மீது ஆர்வம் காட்டும் குப்பி மராண்டி, மதன் ஹெம்ரோம், பஸ்பா டுடு, போரேஷ் ஹன்ஸ்தா, தரிணிபோசி கிராம துசார் டுடுவின் குடும்பம் மற்றும் இந்திரா மணி டுடு கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை தைரியமாக அறிக்கைப் பண்ண; கோட்டா சாஹி கிராம அனமு மனநோயிலிருந்து சுகம் பெற்று இரவில் நன்றாகத் தூங்கவும், 8 வயது நிரம்பிய சாந்தன் கொன்ஹா சிறுநீரகப்பிரச்சனை மற்றும் உடல் வீக்கத்திலிருந்து முற்றிலுமாய்ச் சுகம் பெறவும் ஜெபிப்போம்.

படுக்கையில் நல்ல பாம்பு!

குஜராத், நமது ஜாவ்டா சிறுவர்கள் விடுதியில் தங்கிப் பயின்றுவரும் ரோனக் என்கிற 6-ம் வகுப்பு மாணவனின் அடுக்குப்படுக்கையில் ஒரு நல்ல பாம்பு ஏறி, அவனோடு படுத்திருந்ததை அவன் அறியாதிருந்தான். காலையில் அவன் அதைக் கண்டபோது, தேவன் அவனை இரவு முழுவதும் அவ்விஷப்பாம்பினிடமிருந்து பாதுகாத்ததை உணர்ந்து தேவனைத் துதித்தான். நமது தேவன் கண்ணுறங்காமல் காப்பவரல்லோ! அல்லேலூயா!

மே 20 வெள்ளி

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. மாதவராய் M., திரு. தினேஷ் A.
திரு. பொன்னுராஜ் ஜேக்கப் S.
திரு. ஸ்டான்லி ஜார்ஜ், திருமதி. எஸ்தர் எசக்கியா
திருமதி. ஞானலின் செல்வ விஜிலா சுந்தர்சிங்
திரு. மிர்ஜ்யோ கிஸ்கு, திரு. இளங்கோவன் S.
திரு. எட்வர்ட் ராஜதுரை R.

ஜஷிப்பூர்:

சுகின்லால் & ஜெயராணி

துதிக்க: புதிதாக 5 குடும்பங்கள் கிறிஸ்துவின் மந்தைக்குள் அடைக்கலம் புகுந்துள்ளனர். கடந்த 5 வருடங்களாக பக்கவாதத்தினால் சிரமப்பட்டு வந்த லக்ஷ்மிதார் ககராய் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவுடன் அவ்வியாதியிலிருந்து சுகம் பெற்றுள்ளார். குடகுட்டு கிராம ஆலயக்கட்டுமானப்பணி முடிவடையவும், பொகுவா கிராம ஆலயக்கட்டுமானப்பணி துவங்கப்படவும், மகா சபா நிகழ்ச்சி எவ்வித தடையுமின்றி நடைபெறவும், அதில் 800 நபர்கள் பங்குப்பெறவும் கர்த்தர் உதவி செய்துள்ளதற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: நெருப்பிற்குள் விழுந்து முதுகு மற்றும் கால் பகுதிகளில் காயமடைந்துள்ள 4 வயது சிறுமி ஸ்ரீமதி ககராய் விரைவில் முழு சுகமடைய; கலியா திகியை சிறுநீரகப் பாதிப்பு மற்றும் மனநோயிலிருந்தும், சாந்தா ஹெம்ரோமை பக்கவாதத்திலிருந்தும், சுராய் மராண்டி மற்றும் துகி பூர்தியை வலிப்பு நோயிலிருந்தும் சுகம்பெறச் செய்ய; எந்த காலத்தாமதமுமின்றி பொகுவா கிராம ஆலயக்கட்டுமானப்பணி விரைவில் கட்டி முடிக்கப்பட; குமரிபில், கடகுருவா, புருதி ஆகிய இடங்களில் ஆலயங்கள் கட்டப்பட; 10-ம் வகுப்பு அரசாங்கத் தேர்விற்கு ஆயத்தப்பட்டுக் கொண்டிருக்கும் 15 பிள்ளைகளுக்கு தேவன் நல்ல ஞானம் தர ஜெபிப்போம்.

கியோன்ஜர்கட்: பிரத்யூஷ் நாயக் & மரிதாய் லியோனா

துதிக்க: புதிதாக 42 நபர்கள் கிறிஸ்துவின் மந்தைக்குள் சேர்க்கப்பட்டுள்ளனர். புதிதாக 29 நபர்களுக்குச் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. பமிபாரி ஆலயக் கட்டுமானப்பணி சிறப்பாக நிறைவுப் பெற்றுள்ளது. விசுவாசிகளுக்கான ஆவிக் குரிய இரவுக்கூட்டம் இரண்டு வருடங் களுக்குப்பின் நல்ல முறையில் நடைபெற்று, அதில் சுமார் 1000 விசுவாசிகள் பங்குப் பெற்று பயனடைந்துள்ள கிருபைக்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: கெட்ட ஆவியின் பிடியிலிருந்து ஜீதன் விடுவிக்கப்பட; விசுவாசிகள் பின் மாற்றமடைவதிலிருந்து பங்கர்சுனி திருச் சபை காப்பாற்றப்பட; வாயு தொல்லையினால் நிற்கவும் நடக்கவும் முடியாமல் துன்பப்படும் சோம்பாரி சுகம் பெற; தலையில் ஏற்பட்ட காயத்தினால் அல்லல்படும் பரங்கியா பூரண குணமடைய; இந்நிதியாண்டு மிகுந்த பலனுள்ளதாக அமைய ஜெபிப்போம்.

மறைவிடமான கர்த்தர்!

மகாராஷ்டிரா, பாக்லி பணித்தளம். தெம்பர ணியா கிராமத்தைச் சேர்ந்த ராஜு என்பவர் ஒரு கள்ளச்சாராய வியாபாரியானதால் ஒருமுறை காவல்துறையினரால் துரத்தப் பட்டபோது, மறைந்து கொள்ள இடமின்றி நமது ஆராதனையொன்றில் தெரியாமல் நுழைந்து விட்டார். அப்போது பிரசங்கிக்கப் பட்டுக் கொண்டிருந்த சுவிசேஷ வார்த்தைகள் ராஜுவின் உள்ளத்தைத் தொட்டன. ஜீவ தண்ணீராகிய இயேசுவைத் தன் வாழ்வில் அறிந்து கொண்ட இவர், தனது கள்ளச்சாராய வியாபாரத்தை அன்றிலிருந்து விட்டுவிட்டார். தற்போது இவரது வீட்டில் 30பேர் கூடி தேவனை ஆராதித்து வருகின்றனர். கர்த்தருக்கே மகிமை!

மே
21
சனி

பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திருமதி. விஜயராணி ஆல்பின்

ரிமுலி:
சங்கர் P. & ஜெலின்

துதிக்க: புதிதாக 3 நபர்கள் கிறிஸ்துவின் மந்தைக்குள் விசுவாசத்துடன் சேர்ந்துள்ளனர். ஜுடிபாடா கிராமத்தில் புதிய ஆராதனைக்குழுவொன்று துவங்கப்பட்டுள்ளது. பிறந்ததிலிருந்தே நடக்க முடியாமலிருந்த ஜுடிபாடா கிராம 3 வயது சிறுமி பவித்ரா தற்போது நன்கு நடக்க ஆரம்பித்துள்ளாள். கமல்புட், விசின்தாபூர் மற்றும் போதம்பூர் கிராமங்களில் சுவிசேஷத் திற்கு திறந்தவாசல் உருவாகியுள்ளது. 4 கிராமங்களில் முதல்முறையாக சுவிசேஷம் உரைக்கப்பட்டுள்ளது. கொங்கனா கிராமத்தில் நமது ஊழியத்திற்கு எதிராக எழும்பிவந்த காரியங்கள் யாவும் ஒன்றுமில்லாமல் போயிருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: கொங்கனா கிராமத்தில் ஆராதனை ஆரம்பிக்கப்பட; நமது புதிய விசுவாசிகளான மொங்கலுவின் குடும்பம் மற்றும் மான்சிங்கை எதிர்த்து போராடுவோர் மனந்திரும்பவும், அவர்கள் கிறிஸ்துவண்டை வரவும்; ஜமிதி பகுதி வாலிபர்களுக்குத் தகுந்த வாழ்க்கைத்துணைகள் அமைய; ராதிகா வின் மாமியார் சாராயம் காய்ச்சும் தொழிலை விட்டுவிடவும், அவர் கிறிஸ் துவை அறிகிற அறிவை அடையவும்; பினுத்பூர் கிராமத்தில் நடைபெற்ற ஜெபக்கூட்டங்களில் பங்குப்பெற்ற குடும்பத்தினர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காகவும், இக்கிராமத்தில் புதியதொரு ஆராதனைக்குழு விரைவில் ஆரம்பிக்கப்படவும் ஜெபிப்போம்.

குஜராத்

அஹ்வா & டாங்ஸ் வெளிப்புற சந்திப்பு ஊழியம்:
பிதுஷ் குமார் நாயக் & பிரீத்திபாலா

துதிக்க: புதிதாக சாய்மால் கிராமத்தி லிருந்து 3 குடும்பங்களும், கடாத் கிராமத்தி லிருந்து 2 குடும்பங்களும் கிறிஸ்துவின் அன்பை ருசிக்க ஆரம்பித்துள்ளனர். 3 புதிய தொடர்பாளர்கள் கிடைத்துள்ளனர். ஜெபத்தின் வாயிலாக ரேகாபேன் மீண்டும் சுயநினைவு பெற்றுள்ளார். பவாரியா கிராம வானுபேன் வலிப்பு நோயிலிருந்து சுகமடைந்துள்ளார். மலைகளில் வைத்து விசுவாசிகளுக்கென நடத்தப்பட்ட ஜெபக்கூடுகையும், தமாஷா நிகழ்ச்சியும் சிறப்பான முறையில் நடைபெற்றுள்ளன. துல்சந்த் கிராம சுரேஷ்பாய் தனது வீடு திரும்பும்போது, புலியிடமிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: துஹர்தா ஆலயக்கட்டுமானப் பணி துரிதமாய் முடிவடைய; கல்குந்த் கிராம கனுபாய் மனநோயிலிருந்து சுகம் பெற; துல்சந்த் கிராம மக்கள் புலிகளிடமிருந்து பாதுகாக்கப்பட; சுசார்தா மற்றும் போர்பாடா கிராம மக்களிடமிருந்து புதிய தொடர்பாளர்கள் கிடைக்க; வரும்நாட்களில் நடக்கவிருக்கும் குடும்பக்கூடுகை, உபவாச ஜெபக்கூடுகை, பெண்கள் கூடுகை, இயேசு திரைப்பட நிகழ்ச்சிகள் யாவும் சிறந்த முறையில் நடத்தப்பட ஜெபிப்போம்.

மே 22 ஞாயிறு

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஜெயசேகர் P.T., திரு. சுனில் தத்தா காரா,
திரு. பிபின் பிஹாரி பிரதான்

கவாண்ட்: ஹென்றி சாலமோன் & ஏஞ்சல் ஜெபா

துதிக்க: புதிதாக 52 நபர்கள் விசுவாசிகளாக கிறிஸ்துவின் மந்தைக்குள் இணைந்துள்ளனர். நான்கு கிராமங்களில் இரவுநேர ஜெபக்கூட்டங்கள் நடத்தப்பட்டு, அதில் 250 பேர் பங்குப்பெற்று ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர். இருசக்கர வாகன விபத்தினின்று ஜங்லாபாய் மற்றும் நிம்ஜிபாய் காப்பாற்றப்பட்டுள்ளனர். கனுவிபேன் தனது பாவத்தை அறிக்கை செய்தபோது, இழந்துபோன தனது கண்பார்வையை மீண்டும் கிடைக்கப்பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: டுங்கராபீல் மக்களிடையே நடைபெறப்போகும் ஊழியங்களுக்காக; ஞாயிறு பள்ளி, முதியோர் கல்வித்திட்டம், வேதாகம வகுப்புக்குழுக்கள், நாடகம் மற்றும் பஜன் கூடுகைகள் டுங்கராபீல் மக்களிடையே தொடங்கப்பட; சுவிசேஷத்தை எதிர்க்கும் மத்வாட் கிராம திவான் மற்றும் தல்சிங்பாய் மனமாற்றம் பெற ஜெபிப்போம்.

சஹயாத்ரி பிராந்தியம்: மாதவராய் & ஜெபதங்கம்

துதிக்க: முதல்முறையாக 750 நபர்கள் சுவிசேஷ வார்த்தையைக் கேட்டுள்ளனர். கொடிய விஷப்பாம்பிடமிருந்து நமது மிஷனெரிக் குடும்பம் அற்புதமாகக் காக்கப்பட்டுள்ளனர். ஜெபங்களின் விளைவாக நமது 3 வாலிபர்களுக்கு நல்ல வாழ்க்கைத் துணைகள் அமையவும், அவர்களது திருமணங்கள் நல்லமுறையில் நிச்சயிக்கப்படவும் தேவன் காண்பித்துள்ள தயவிற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: நமது கௌதம் நகர் சிறிய ஆலயத்தில் புதிய விசுவாசிகள் திரளாகப் பங்கேற்பதால், இடம் பற்றாக்குறையின் நிமித்தமாக ஆலயத்தின் அருகில் பந்தலொன்று அமைத்து ஞாயிறு பள்ளி நடத்திவந்த நிலையில் அப்பந்தலைக் காவல் துறையினர் தற்போது அகற்றிவிட்டதால், அச்சபை மக்களுக்கு சற்றுப்பெரிய நிலமொன்று கிடைக்கப்பெற்று, அதில் நல்லதொரு பெரிய ஆலயம் கட்டப்பட; குஷால்பாய் குடும்பம் மற்றும் திருமணமாகி விவாகரத்திற்கு காத்திருக்கும் ஆல்பர்ட்பாய் & பிரியங்காவின் குடும்பத்தினர்கள் மத்தியில் நிலவும் கருத்துவேறுபாடுகள் அகன்று தேவ சமாதானம் பிறக்க; அதிகப்பட்ச நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் அலெக்ஸ் மெக்குவான் மற்றும் மனவளர்ச்சி குன்றிய நிலையிலிருக்கும் ஜாய் & நிக்குன்ஜ் சுகம் பெற ஜெபிப்போம்.

பாலகர் வாயிலாக துதியை உண்டுபண்ணுதல்!

ஜார்க்கண்ட், லால்மட்டியா பணித்தளத்தைச் சார்ந்த குலாப் கிஸ்கு சமீபத்தில் கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர். அவருடைய 6 மற்றும் 7 வயது பெண் பிள்ளைகள் தங்களது உறவினருடைய வீட்டிற்குச் சென்றிருந்தனர். அங்கு அவர்களுடைய உறவினர்கள் தலை மற்றும் உடல்வலியால் அவதிப்படுவதைக் கண்டதும் அவர்களை, 'இயேசு கிறிஸ்துவிடம் ஜெபித்தால் அவர் சுகம் தருவார்' எனக் கூறவே, அவர்களும் விசுவாசத்துடன் ஜெபித்ததின் விளைவாக, அவர்கள் உடனே சுகம் பெற்றனர். அதன்பின், அவர்களும் சுவிசேஷத்தின்மீது வாஞ்சை காட்டுகின்றனர் அல்லேலூயா!

மே 23 திங்கள்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. கண்ணுசாமி தாமஸ்
திரு. விஜய் பாபு S., திரு. கோபிகிருஷ்ணன் M.

போடேலி: டேவிட்சன் ராஜாசிங் & கண்மணி பரிமளம்

துதிக்க: இருசக்கர விபத்தினின்று துளசி பாயும், பாம்புக்கடியினின்று கஜ்லி பேனும் அற்புதமாக மீட்கப்பட்டுள்ளனர். நமது விசுவாசியொருவரின் மனைவி பஞ்சாயத்துத் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டதின் நிமித்தம், பொறாமையினால் முந்தைய பஞ்சாயத்துத் தலைவர் புதிய பஞ்சாயத்துத் தலைவரின் வீட்டைச் சூறையாட திட்டமிட்டும், ஜெபத்தினால் அத்திட்டங்கள் யாவும் நிர்மூலமாகிப்போய் உள்ளன. இம்முறை மக்கா சோளப்பயிரில் நல்ல அறுவடையை நமது விசுவாசிகளுக்கு தேவன் தந்துள்ளதற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: பானியா கிராமத்தில் இரவு ஜெபக் கூட்டம் நடத்துவதிலிருக்கும் பிரச்சனைகள் மற்றும் தடைகள் யாவும் விலக; ராகுல்பாயின் மனைவி கோகிலாபேனும், முகேஷ்பாயும் கிறிஸ்துவை இரட்சகராக விசுவாசிக்கத் துவங்க; வாய்ப்பேச இயலாமல் இருக்கும் 3 வயது சிறுவன் ஹிர்திக் நன்றாகப் பேச; லக்கன்பாய் & ஜீவ்லின்பேன் தம்பதியருக்கு குழந்தை செல்வம் கிடைக்க; மனநோயிலிருந்து சைலேஷ்பாய் சுகமடைய; போன்தியாபாய் விசுவாசத்தில் பெலப்பட; குடிப்பழக்கத்திலிருந்து துளசியாபாய் விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

சொரம்பா: ரமேஷ் கிறிஸ்டியன் & ரேச்சல் ரமேஷ்

துதிக்க: புதிதாக 3 பேர் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் இணைந்துள்ளனர். நீரிழிவு நோயினால் இரண்டு வருடங்கள் நடக்க இயலாமல் படுத்தப்படுக்கையாகி, அதனிமித்தம் கால்களில் புண்களுடன் காணப்பட்ட குமார்பாய், தற்போது ஜெபத்தின் மூலம் நன்றாக நடக்க ஆரம்பித்துள்ளார். சலார்பூர் கிராமத்தில் சுவிசேஷம் பறைசாற்றப்பட்டுள்ளது. வண்டர்தேவி கிராம அரவிந்த், மனிஷாபேன், ஜெகதீஷ் மற்றும் நிராவ் சுவிசேஷத்தின்மீது நாட்டம் காண்பித்து வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: குடிப்பழக்கத்திற்கு அடிமையாகிக் கிடக்கும் நமது சுதேச ஊழியரின் மகன் பிரஃபுல் மனம் மாறி, அப்பழக்கத்தைக் கைவிட; காவல்துறைப்பணியில் இணைய விண்ணப்பித்திருக்கும் நமது விசுவாசிகளின் பிள்ளைகள் யாவரும் அதற்குரிய தேர்வை எழுதி வெற்றி பெறவும், அத்துறையில் நல்லவித பணிகளில் அவர்கள் அமரவும்; கிரண் நெஞ்சு வலியிலிருந்தும், ராகுல்பாய் இரத்தக்குறைவினால் உண்டாகும் சரீரச் சோர்பிலிருந்தும் முற்றிலுமாய்க் குணமடைய ஜெபிப்போம்.

உமர்காம்:

ஆசீர் மோசஸ் & அமிர்தா கோல்டா

துதிக்க: குந்தர், கண்ணடு, தல்வாடா, போர்தா ஆகிய 4 கிராமங்களிலும் முதல் முறையாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. சுக்லிபாடா கிராமத்தில் வைத்து நடைபெற்ற அறுவடை பண்டிகை ஆராதனை ஏராளமானவர்களுக்கு ஆசீர்வாதமாக இருந்துள்ளது. அங்லாஸ் கிராம விசுவாசிகளான கல்பாஷ் & தன்வந்தரியின் திருமணம் தேவநாமம் மகிமைப்படும்படி நடந்து முடிந்துள்ளது. 1000 மணிநேர ஜெபத்தைச் சிறப்பாகச் செய்து முடித்திட கிருபை ஈந்துள்ள தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: சின்னம்மை நோயினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கும் அட்டு கிராம மக்கள் அந்நோயிலிருந்து பரிபூரண சுகம் பெற; நிக்கோலி திருச்சபை விசுவாசிகள் யாவரும் தங்களது ஆராதனைகளில் தவறாமல் வந்து கலந்துக்கொள்ள; கந்த்வாய், பொர்மல், போர்தா ஆகிய கிராமங்களில் ஊழியப் பின்தொடர்பணிகள் நடைபெற; தாமன் பகுதி வார்லி இனமக்களிடையே ஊழியம் தொடங்கப்பட ஜெபிப்போம்.

மே
24
செவ்வாய்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஆனந்தராஜ் S.
திரு. வேதமாணிக்கம் அப்பாதுரை N.

தாத்ரா & நகர் ஹவேலி

சில்வாசா:

அகிலேஷ் குமார் & கிரண்தேவி

துதிக்க: புதிதாக 30 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கத் துவங்கியுள்ளனர். சிஹாலி மற்றும் கேரடி பகுதிகளில் இரு ஆலயக்கட்டு மானப்பணிகள் தொடங்க இருக்கின்றன. புதிதாக 6 குடும்பங்கள் கிறிஸ்துவின் அன்பை ருசிக்க ஆரம்பித்துள்ளனர். B.Ed., படிப்பு முடித்து வேலைக்கு ஜெபத்துடன் காத்திருந்த தாராபேனிற்கு அரசாங்கப் பள்ளியாசிரியருக் கான வேலை கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ஃபத்தேபூர் ஆலயம் பிரதிஷ்டை செய்யப்படுவதற்கான ஆயத்தங்கள் சிறப்பாக நடைபெறவும், அவ்வாலயப் பிரதிஷ்டை தேவநாம மகிமைக்கென நேர்த்தியாக நடைபெறவும்; லக்சிபேன் மற்றும் லசுபாய் பக்கவாதத்தி லிருந்தும், லக்ஷ்ன்பாய் புற்றுநோயிலிருந்தும் சுகம் பெற ஜெபிப்போம்.

மகாராஷ்டிரா

துலே: அஜய்குமார் லிமா & பிரத்யாசினி

துதிக்க: பரிசுத்த வேதாகமத்தின் நீதிமொழிகள் புத்தகம் சிறந்த முறையில் மொழிப்பெயர்க் கப்பட்டு வருகின்றது. காந்தேஷ் பீலி மொழி புதிய ஏற்பாட்டுப் புத்தகமும் நல்ல முறையில் ஜெபத்துடன் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. புதிதாக 24 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. ஜய் பீம் இனமக்கள் சுவிசேஷத்தின்மீது நாட்டம் காட்டுகின்றனர். மோனா மல்கிக்கு தொண்டைக்கட்டியிலிருந்து கிடைத்துள்ள அற்புத சுகத்திற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: பழைய ஏற்பாட்டுப் புத்தக மொழிப் பெயர்ப்பு மற்றும் ஆடியோ வேதாகமப்பணி இரண்டும் விரைவில் நன்கு முடிவடைய; எல்லா ஆராதனைக்குழு விசுவாசிகளாலும் காந்தேஷ் பீலி மொழி புதிய ஏற்பாடு நன்கு பயன்படுத்தப்பட; ஜய் பீம் சமூகத்தினர் மத்தி யில் நடக்கவிருக்கும் ஊழியங்களில் எவ்விதத் தடையும் வராமலிருக்க; பின்மாற்றமடைந்தி ருப்போர் மீண்டும் கிறிஸ்துவுக்குள் வர; அந்தகார சத்துருவின் கிரியையினால் தனது இரண்டு பிள்ளைகளை அடுத்தடுத்து இழக்கக் கொடுத்தி ருக்கும் ராஜ்பாயின் குடும்பத்தினர் மனஆறுதல் பெறவும், எஞ்சியிருக்கும் மற்றுமொரு குழந்தை தேவ கிருபையால் நல்வாழ்வு பெறவும்; தீபக்கிற்கு வங்கியில் வேலை கிடைக்க; இப்பணித்தளத்தில் ஆலயமொன்று கட்டப்படவும், அதற்கான தேவைகள் சந்திக்கப்படவும்; வாய்ப்பேச இயலாம லிருக்கும் மால்பூர் கிராம 3 வயது சிறுமி அஞ்சலி பேசும்திறனைப் பெறவும், பண்டிட் பலேராவ் மனநோயிலிருந்து சுகம் பெறவும் ஜெபிப்போம்.

கட்சாந்தூர்:

பால் ஆல்பர்ட் & ராணி ஜெஸிலெட்; எலிஷா தய்மி

துதிக்க: ஆலயத்தில் அமர்ந்து கண்ணீர் விட்டு ஜெபித்த ஜெபத்தின் மேன்மையாக காசநோயிலிருந்து அனிதா அற்புத சுகம் பெற்றுள்ளார். பிப்பள்கொட்டி கிராமத்தில் நடந்த வெளிப்புற சந்திப்பு ஊழியத்தில் ஏற்பட்ட எதிர்ப்பு ஆபத்திலிருந்து நமது ஊழியர்கள் பாதுகாக்கப்பட்டுள்ளனர். சசிக் மெஸ்ராம், சுரேஷ் பட்டேல், பகவான் மற்றும் விட்டா சுவிசேஷத்தின் மீது ஆர்வம் காட்டி வருகின்றனர். 8 இடங்களில் 12 மணி நேர உபவாச ஜெபக்கூடுகைகள், 2 பெண்கள் முகாம்கள், 2 மூப்பர்கள் முகாம்கள் மற்றும் 2 விசுவாசிகள் முகாம்கள் யாவும் சிறப்பாக நடைபெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: நமது விசுவாசிகளை விக்கிரக ஆராதனைக்குக் கட்டாயப்படுத்தி உட்படுத்தும் புனகுடா கிராம மக்கள் மனம் மாற; மனநோயி லிருந்து அனில் சுகம் பெற; நமது விசுவாசி களின் பிள்ளைகளுக்குத் தகுந்த வாழ்க்கைத் துணைகள் அமைய; நமது ஊழியத்தை எதிர்க்கும் பிப்பள்கொட்டி, ராகிபள்ளி, புனகுடா கிராமத்தினர் மற்றும் மத்தாடா கிராம தெலுராவ், கிராமத்தலைவர் தேவ்சோ கொட்னார்கி, மங்கர் பட்டேல் ஆகியோர் கிறிஸ்துவின் அன்பைக் கிருபையாய் உணர ஜெபிப்போம்.

மே 25 புதன்

உபவாச ஜெபநாள்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஃப்ரீடா பேபி எட்வர்ட் சாம்
திருமதி. ராஜரத்னம் ஆபிரகாம்
திருமதி. கிறிஸ்டா ரவிக்குமார்
திரு. கின்ஸ்லி A. R., திருமதி. ஷைலா குப்புசுவாமி

தடுகோன்:

ரமேஷ் பாபு & ஹீமாபிந்து

துதிக்க: கும்பிரியா மற்றும் கொரடி ஆலயக்கட்டுமானப்பணிகள் சிறப்பாக முடிவடைந்துள்ளன. 7 ஆராதனைக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 4 ஆராதனைக்குழு மக்கள் வாரந்தோறும் கூடி தேவனை ஆராதித்து வருகின்றனர். 5 வருடங்களாக தீய ஆவியின் பிடியில் சிக்கித்தவித்த பெர்விபாய் அற்புத விடுதலை பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: புதிதாக சுவிசேஷத்தைக் கேட்டுள்ள 908 நபர்கள் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள; நமது ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் தனா பட்டேல் கிறிஸ்துவின் அன்பினால் தொடப்பட; குமுதா மூலப்பிரச்சனையிலிருந்தும், சஞ்ஜய் இரத்த அணுக்கோளாறிலிருந்தும், ஆஷா & மோகன் மனநோயிலிருந்தும், ஜானியா தாதா வயிற்று வீக்கத்திலிருந்தும், ராமதாதா பக்கவாதத்திலிருந்தும், செல்பாரா காசநோயிலிருந்தும் முழு சுகமடைய ஜெபிப்போம்.

தஹானு: M. சங்கர் & ஆனந்தி

துதிக்க: புதிதாக 4 நபர்கள் கிறிஸ்து வண்டை நெருங்கியுள்ளனர். புதிதாக 6 கிராமங்களில் சுவிசேஷம் பறைசாற்றப் பட்டுள்ளது. பரஷ்பாடா கிராமத்திலிருந்து 5 புதிய குடும்பங்கள் நமது ஊழியத்தில் இணைந்துள்ளனர். அம்பிசாரி கிராமத்தில் வைத்து நடைபெற்ற ஆத்தும ஆதாய முகாமில் ஏறத்தாழ 300 பேர் பங்குப்பெறவும், அநேகர் சுவிசேஷத் திற்குச் செவிசாய்த்தும் உள்ளனர். 10 கிராமங்களில் வேதாகம வகுப்புக்குழுக்கள் நடத்தப்பட்டுள்ளன. ரஷிகாவின் கணவர் சாகருக்கு 2 கால்களிலும் ஏற்பட்ட எலும்பு முறிவிலிருந்து கிடைத்துள்ள சுகத்திற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ஜார்லி, ரித்தாலே, முசல்பாடா ஆகிய கிராமங்களில் ஆலயங்கள் கட்ட தடையின்மை சான்றிதழ் கிடைக்க; ஞாயிறு ஆலய ஆராதனையில் பங்குப்பெறும் புதிய குடும்ப மக்களும் புதிய தொடர்பாளர்களும் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள; புலம்பெயர்ந்து சென்றுள்ள பான்ட்பாடா, ரித்தாலே, முசல்பாடா கிராம நமது விசுவாசி களின் பாதுகாப்பு மற்றும் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; ஜார்லிபாடா, கய்நாட், முசல்பாடா கிராமங்களில் காய்ச்சப்படும் சாராயத்தினால் அதிக சோதனைக்குட்படும் நமது புதிய தொடர்பாளர்களுக்காக; பரசு பாய் சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்து பூரண சுகம் பெற ஜெபிப்போம்.

அண்டை வீட்டாரின் ஆலோசனை!

பஞ்சாபிலுள்ள மோகா பணித்தளத்தில் ஜகதீப் சிங் என்பவர் இரண்டாம் மாடியி லிருந்து கீழே விழுந்ததால், அவரது பின் பகுதியிலுள்ள முதுகெழும்பு பழுதடைந்தது. சுகம்பெறும் எதிர்பார்ப்பு இன்றி அறுவை சிகிட்சை செய்ய அறிவுரை வழங்கப்பட்டது. ஜகதீப்பின் மனைவியிடம் அருகாமையில் வசிக்கும் விசுவாசியொருவர் நமது ஊழியரைச் சந்திக்க ஊக்குவித்தார். நமது ஊழியரின் ஜெபத்தின் விளைவாக, அவர் பூரண சுகம்பெற்று தான் வேலை செய்யும் இடத்தில் நற்சாட்சி பகர்கின்றார். தேவனுக்கே மகிமையுண்டாவதாக!

மே
26
வியாழன்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. லீலாபாய் ஜாண் பெர்லின்
திருமதி. சிசிலி ஞானம் ராஜ்குமாரி அருமைநாயகம்
திரு. பாபுராஜ் K., திரு. டேனியல் ராஜாமணி S.
திருமதி. மைக்கேல் ஜாண் சாமுவேல்
திருமதி. ஜெபலா விஜயகுமார்
திருமதி. ஹெப்சி செல்வம் தவமணி
திருமதி. தும்படா ரசிலாபேன் ராமுபாய்

சாலீஸ்காவ்:
திம்மண்ணா தீமோத்தேயு & மமதா நான்சி

துதிக்க: புதிதாக 2 நபர்கள் கிறிஸ்துவின் மந்தைக்குள் தஞ்சம் புகுந்துள்ளனர். போராஸ் என்னுமிடத்தில் சபை மூப்பர்கள் பயிற்சிக்கூடுகை மற்றும் பெண்கள் மேளா வெகு சிறப்புடன் நடைபெற்றுள்ளன. மஞ்சள் காமாலை நோயிலிருந்தும், வயிற்று வலியிலிருந்தும் சுனில் காரத் பெற்றுள்ள சுகத்திற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

ஜெபிக்க: விபத்தில் சிக்கி சுயநினைவிழந்து சிகிட்சையில் இருக்கும் கால்வாடி கிராம ஜீவன் காவ்லி விரைவில் சுகம்பெற்று, கிறிஸ்துவுக்குள் புதுவாழ்வு பெற; சுனிதா அனில் தொழுநோயிலிருந்தும், ருஷிகேஷ் தோல் ஒவ்வாமை நோயிலிருந்தும், தேவ்ராம் பாபா பக்கவாதத்திலிருந்தும், வால்மிக் இருதயத்துளை பிரச்சனையிலிருந்தும், லதா மூளை நோயிலிருந்தும் குணமடைய; கேஷ்வாவிற்கும் அவரது மனைவிக்கும் இடையில் தேவ சமாதானம் பிறக்க ஜெபிப்போம்.

போரடி: ஓம்பிரகாஷ் & சப்னா

துதிக்க: முதல்முறையாக 5 கிராமங்களில் சுவிசேஷம் உரைக்கப்பட்டுள்ளதின் மூலம் சுமார் 70 பேர் சத்தியத்தைக் கேட்டுள்ளனர். கேரியா மற்றும் சமாரியா கிராமங்களில் தனித்தாள் ஊழியம் சிறப்பாக நடைபெற்றுள்ளது. பவன்சூலி மற்றும் வாடி கிராமங்களில் சுமார் 58 நபர்கள் கண்டு பயன்படும்படியாக இயேசு திரைப்பட ஊழியம் சிறப்பாக நடைபெற்றுள்ளது. அநேகர் கலந்துகொண்டு ஆசீர்வதிக்கப்படும்படியாக விசுவாசிகள் இரவு ஜெபக்கூட்டம், சபை மூப்பர்கள் பயிற்சிக்கூட்டம் மற்றும் உபவாச ஜெபக்கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. புடக்கி விகிரில் 31 பிள்ளைகள் ஞாயிறுபள்ளியிலும், 85 பிள்ளைகள் சிறுவர்கள் முகாமிலும் பங்குப்பெற்று தேவாசீர்வாதம் பெற்றுள்ளனர். ஏறத்தாழ 64 பெண்கள் பங்குப்பெறும்படியாக பெண்கள் முகாமும், நடேதா, விகரன், பாவர்பாடா, வகபாடா, குவா ஆகிய கிராமங்களில் வேதாகம வகுப்புகளும், சுமார் 100 பெண்கள் பங்குப்பெறும்படியாக சாங்வி கிராமத்தில் 2 நாட்கள் பெண்கள் மேளாவும் சிறப்புடன் நடைபெற்றுள்ளதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

ஜெபிக்க: இப்பணித்தள ஊழியங்கள் பெருமளவில் வளர்ச்சிப்பெற நமது சபை மூப்பர்களும், சுதேச ஊழியர்களும், விசுவாசிகளும் மிகுந்த பொறுப்புடன் சத்தியத்தை அவர்களது சொந்த மக்களுக்குத் தாமதமின்றி எடுத்துரைக்க; ராய்சிங்பாய், கிஷான்பாய் குடிப்பழக்கத்திலிருந்து வெளிவர; புடக்கி விகிர் கிராம சுர்சிங்பாய் காதுகேளாமையிலிருந்து சுகம் பெற; தற்கொலையினிமித்தம் தனது 22 வயது மகனை இழந்து அங்கலாய்க்கும் உமர்தா கிராம காலுசிங் தேவ ஆறுதல் பெற; போரடி கிராம கர்மாபாய் பக்கவாதத்திலிருந்தும், நியூ போராடி கிராம சஞ்ஜய்பாய் காசநோயிலிருந்தும் சுகம் பெற; கொடிதா கிராம நனாபாய் குடும்பத்தில் மழலை செல்வம் தவழ; பாரதி மற்றும் மீராவின் கணவன்மார்கள் இரட்சிப்படைய ஜெபிப்போம்.

மே
27
வெள்ளி

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. சைரஸ் சாமுவேல், திரு. ஜோசப் துரைராஜ் P.
திருமதி. ரெபெக்காள் ஞானம் சார்லஸ் செல்லகுமார்
திருமதி. அருள்மேரி அன்பையா
திரு. சாமுவேல் ஜெபகுமார் A.
திருமதி. மாயா சூசன் சுனில் K. மேத்யூ
திரு. எலிஷா தம்மி, திரு. டேவிட் R.

ஆலப்பள்ளி:

குல்தீப் சிங் & குர்பிரீத் கௌர்

துதிக்க: புதிதாக 5 ஆத்துமாக்கள் கிறிஸ்துவின் சிலுவை அன்பிற்குள் தஞ்சமடைந்துள்ளனர். மடியா கிராமத்தைச் சார்ந்த 3 புதிய குடும்பங்கள் சுவிசேஷத்தின்மீது விருப்பம் தெரிவிக்கின்றனர். நடக்கமுடியாமலிருந்த ருஷி ஹிச்சாமி தற்போது நன்கு நடக்கும்படியான அற்புத சுகத்தைப் பெற்றுள்ளார். இரத்தப்போக்கிலிருந்து தெஜஷ்விபாய் பெற்றுள்ள நல்ல சுகத்திற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: வாய்ப்பேச மற்றும் காது கேட்க முடியாமலிருக்கும் 6 வயது சிறுவன் அர்ப்பண் மட்டாமி அற்புத சுகம் பெற; திவாகர் சௌதிரியை மனநோயிலிருந்தும், அங்குஷ் ஹிச்சாமி, டிம்பள் ஹிச்சாமி மற்றும் சானியா மிஸ்ராம் இரத்த அணுக்கோளாறிலிருந்தும், தய்பாய் இரத்தப்போக்கு பிரச்சனையிலிருந்தும், சுகந்தாபாய் தீய ஆவியின் பிடியிலிருந்தும் விடுதலை பெற ஜெபிப்போம்.

கர்நாடகா

கோலார்: சாமுவேல் பெபர்தா

துதிக்க: வெளிப்புற சந்திப்பு ஊழியத்தின் போது உண்டான எதிர்ப்பிலிருந்து நமது ஊழியர்கள் பாதுகாக்கப்பட்டுள்ளனர். தேவநாமம் மகிமைப்படும்படியாக ஜெபத்தின் மூலம் கடினமான பிரசவத்திலும் சீப்பூர் கிராம சுமம்மா சுகமான அழகிய பெண்குழந்தையைப் பெற்றெடுத்துள்ளார். கிறிஸ்துவை அறியாத பெல்லம்பாரி கிராம பத்மாவதி தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். இளம் விசுவாசிகளுக்கென நடத்தப்பட்ட வேதாகம வினா – விடை போட்டியில் 8 வாலிபப்பிள்ளைகள் வாஞ்சையுடன் பங்குப்பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: சத்ர கொடஹள்ளியிலிருந்து வெந்தரப்பா & கௌரம்மா, சீப்பூரிலிருந்து சிவா & ரோஜா, பெல்லம்பாரியிலிருந்து பத்மாவதி, சாம்சந்தராவிலிருந்து முனிவெங்கடா, முனியம்மா, வெங்கடரப்பா, ஜனபனஹள்ளியிலிருந்து சுவர்ணா ஆகியோர் கிறிஸ்துவின் மந்தைக்குள் இணைய; நீதிமன்ற வழக்குப்பிரச்சனைகளில் உழன்றுக் கொண்டிருக்கும் நமது விசுவாசிகளான சத்ர கொடஹள்ளி கிராம ரத்னம்மா, சவிதாம்மா, புஷ்பா, கௌரம்மா, சீப்பூர் கிராம ரங்கப்பா, லக்ஷ்மிதேவியம்மா, நுக்கண்ஹள்ளி கிராம ஆபிரகாம், சம்சந்தரா கிராம முனியப்பா ஆகியோருக்கு நல்ல தீர்வுகள் கிடைக்க; சௌதம்மா வாய்ப்புற்றுநோயிலிருந்தும், ஸ்ரீனிவாசா பக்கவாதத்திலிருந்தும், சௌதம்மா, பத்மாவதி மற்றும் கௌரம்மா தீய ஆவிகளின் பிடிகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டுப் பூரண சுகம் பெற ஜெபிப்போம்.

மே 28 சனி

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. சாந்தம் டேவிட் போண்டிங்
திருமதி. ஜெயசெல்வி மணிமாறன்
திரு. பப்லு பரசேத், செல்வி. சோனாலி பெபர்தா

ஷிக்காவ் : சுனில் குமார் & சங்கீதா

துதிக்க: நமது புதிய தொடர்பாளரான பரசுராம் கிறிஸ்துவின் மந்தைக்குள் இணைந்துள்ளார். அநேக நாட்களாக கிறிஸ்துவை விசுவாச அறிக்கை செய்வதற்குக் காலதாமதம் செய்து கொண்டிருந்த மஞ்சுளா & ராஜு ஜெபஉதவியினால் தற்போது கிறிஸ்துவை அறிக்கை செய்துள்ளனர். லக்ஷ்மியின் மூத்த சகோதரருக்கு ரூ.25,000/- மட்டுமே கைகளிலிருந்த சூழ்நிலையில் ஜெபித்தபோது, ரூ.40,000/-த்திற்குரிய எருது அவருக்கு ரூ.25,000/-க்குக் கிடைத்துள்ளது. வாயு கசிவினால் உண்டாகும் ஆபத்திலிருந்து ரத்னாக்கா காப்பாற்றப்பட்டுள்ளார். கிரேஸ் இரட்டைக்குழந்தை பாக்கியத்தினால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளார். ஜெபத்தினால் பிரவதியின் தாயாருக்கு இருந்த இரத்த அழுத்தம் குறைந்து, அவர் நன்கு சுகம் பெற்றுள்ளார். ‘சொத்துக்களிலிருந்து எதையுமே தரமாட்டோம்’ எனக் கூறியிருந்த எல்லப்பாவின் சகோதரர்கள், தற்போது எல்லப்பாவிற்கு ஒரு வீட்டைக் கொடுத்திருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: 55 வயது நிரம்பிய ரத்வாவின் கணவருக்கு இரு மனைவிகள் இருப்பதினால், ரத்வாவிற்கு எந்த வீடும் தர முடியாது எனக் கூறும் அவரது கணவர் மனந்திரும்ப; குடிப்பழக்கத்திலிருந்து சந்தோஷ் மீள; B.Ed., படிப்புப் படித்து முடித்திருக்கும் ஸ்ரீகாந்திற்கு நல்ல வேலையொன்று கிடைக்க; 6 வருடங்களாக கணவரை விட்டுப்பிரிந்திருக்கும் கவிதா மீண்டும் தன் கணவருடன் சேர்ந்து வாழ; அடிக்கடி மூக்கிலிருந்து உண்டாகும் இரத்தக்கசிவிலிருந்து ஹேமந்த் முழுவதுமாக சுகம் பெற; குடிப்பழக்கத்தினால் கல்லீரலின் பாதிப்பிற்கு ஆளாகியிருக்கும் விஷ்ணு அப்பழக்கத்தை முற்றிலுமாய் விட்டுவிட; அவரவர் பகுதிகளில் நமது ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் பிரவின், வினயா, சுதி, சஞ்சு, தர்ஷன் ஆகியோர் கிறிஸ்துவின் கிருபையைப் பெற்றுக்கொண்டு மனந்திரும்ப; கிறிஸ்தவ எதிர்ப்பாளர்களைக் கண்டு பயப்படும் பிரகாஷ் மற்றும் அவரது குடும்பத்தினரின் பயம் யாவும் நீங்கிப்போக ஜெபிப்போம்.

ஆந்திரப் பிரதேசம்

ரோதம்:

தேபதத்தா லிமா & சோனியா ராணி

துதிக்க: ஸ்ரீனிவாஸ் தனது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கை செய்துள்ளார். கர்ப்பப்பை கோளாறிலிருந்து நாகமணியும், நெஞ்சு வலியிலிருந்து மேரியம்மாவும் கிருபையாய் சுகம் பெற்றுள்ளனர். மின்சார தாக்குதலின் அதிர்ச்சியிலிருந்து சிவம்மா அற்புதமாகக் காக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: கர்த்தருடைய கிருபையின் அடைக்கலத்திற்குள் நாகபூசன், ஸ்ரீனிவாஸ் மற்றும் ராமன்ஜி வர; லாவண்யா மற்றும் கலாவதி மழலை பாக்கியங்களைப் பெற்றுக் கொள்ள; இரத்தம் போதுமான அளவு இல்லாதபடி சிறுநீரகக் கோளாறினிமித்தம் சிறுநீர் கலவை பிரிப்பு சிகிட்சை எடுத்துக் கொண்டிருக்கும் பத்மாவிற்கு அற்புத சுகம் கிடைக்க; நமது விசுவாசியின் மகன்களான ராஜு மற்றும் ராஜேஷ் கர்த்தரைத் தெய்வமாக ஏற்றுக்கொள்ள; நரிநாகபள்ளி கிராமத்தில் ஆராதனை மையமொன்று ஆரம்பிக்கப்பட; சிவலிங்கம் நெஞ்சு வலியிலிருந்து பூரண குணமடைய; ஷீனாவிற்கு அவருக்குரிய ஓய்வூதியம் விரைவில் கிடைக்கப் பெற; ஆலயம் கட்ட நல்ல நிலமொன்று கிடைக்க ஜெபிப்போம்.

மே 29 ஞாயிறு

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. கருணாகர் கர்டா
திருமதி. ஷக்கீனா க்ருபா ரக்ஷனா பரே
திரு. இம்மானுவேல் S.

தாமலச்செருவு:

ஜாண் டேவிட்ராஜ் & ஞானசேகரி

துதிக்க: சுவிசேஷம் புதிதாக 26 கிராமங்களில் உரைக்கப்பட்டுள்ளது. 13 கிராமங்களில் நடைபெற்ற இயேசு திரைப்பட ஊழியத்தின் மூலம் 750 நபர்கள் சுவிசேஷ நற்செய்தியைக் கண்டும், கேட்டும் உள்ளனர்; அதோடு சில புதிய தொடர்பாளர்களும் கிடைத்துள்ளனர். இந்த இயேசு திரைப்படத்தைப் பார்த்தப் பின் புதிதாக 2 வாலிபர்கள் நமது ஆலயத்திற்கு வரத் தொடங்கியுள்ளனர். ஜெபத்தின் மூலம் நெலிமந்தபள்ளி ஜெமிமாவிற்கு அரசாங்க உத்யோகம் கிடைத்துள்ளது. மிட்டூர் கிராம ரூத்தம்மாவிற்கு உணவுக்குழாயிலிருந்த பிரச்சனை ஜெபத்தின் மூலம் மறைந்ததினால், அவர் தற்போது நமது பாட்டூர் சபை ஆராதனைக்குத் தவறாமல் வருகின்றார். 5 முறை நேர்முகத் தேர்வில் தோல்வியடைந்த போதிலும், 6-வது முறை தனது பாட்டியாரான கிருபா பார்வதியம்மாவின் உபவாச ஜெபஉதவியுடன் வெற்றி பெற்றுள்ள அவ்வாலிபப் பிள்ளை இயேசுவை நம்ப ஆரம்பித்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: வெளிப்புற சந்திப்பு ஊழியக் குழுவினரைத் தடுத்து நிறுத்தி, அவர்களது இரு சக்கர வாகன சாவியைக் கைப்பற்றி, தங்கள் கிராமங்களுக்கு வரக்கூடாது என மிரட்டிச் சென்றிருக்கும் நரேஷ், தேவேந்திரன், ராமு, மல்லிகா, அர்ஜுனன், சின்கல் ராயலு ஆகியோரது வாழ்வில் கிறிஸ்து இடைபட; பரதேசி & அன்னபூர்ணாவின் மகள் அலமேலுவிற்கு சுகப்பிரசவம் நேரிடவும், அவரைக் கைவிட்டு விட்டுச் சென்றிருக்கும் அவரது கணவர் மனம் மாறி வீடு திரும்பவும், அவர்களது ஒட்டு மொத்த குடும்பமும் நமது ஆலய ஆராதனையில் பங்கேற்கவும்; பொட்டுகானம் கிராம தீமோத்தேயுவின் மனைவி ஜெயாம்மா மற்றும் அவர்களது 3 பிள்ளைகள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவும், குடும்பமாக அவர்கள் ஆலயத்திற்கு வரவும்; திடீரென பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டு, நடக்க இயலாமலிருக்கும் ரெட்டிவாரி பள்ளி லக்ஷ்மியம்மா பூரண சுகமடைய; லாவண்யாவிற்கு நல்ல மனவளர்ச்சி உண்டாக; மேரி ரமணம்மாவின் கணவர் ராமமூர்த்தி மற்றும் அவர்களது மகன் ஏகாம்பரமும் குடிப்பழக்கத்திலிருந்து வெளிவர; சந்திரியாகாரியபள்ளியைச் சார்ந்த ஜெயராமய்யா & சுலோச்சனம்மா தங்களின் பக்கத்து வீட்டினருடன் இருக்கும் பகை நீங்கி, கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; நெலிமந்தபள்ளி கிராம எஸ்தரம்மாவின் நிலப்பிரச்சனை நற்தீர்வுக்கு வரவும், அவரது கணவர் மனமாற்றம் பெறவும்; கிறிஸ்தவ விசுவாசத்திலிருந்து பின்வாங்கி, பூசாரிகள் ஆகியுள்ள டேவிட் முரளி மற்றும் நாகேந்திரன் மீண்டும் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வர; ஸ்வேதாவின் பெற்றோர் விசுவாசியல்லாத ஒருவருடன் அவருக்குத் திருமணம் செய்து வைக்க நினைக்கும் நினைவுகள் அதமாகிப்போக; சந்தோஷம்மா & மோகன், ஜாஷ்வா & ரெபேக்கா ஆகிய இரு குடும்பத்தினர் மத்தியில் குழந்தை பாக்கியங்கள் அருளப்பட ஜெபிப்போம்.

மே 30 திங்கள்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ரூபன் ரவி M.
திருமதி. மெர்லின் ஜெனட் ஃப்ராங்க்ளின்
திருமதி. கிளாடி பியூலா சாமுவேல் ஜெபகுமார்
திரு. இஸ்ரேல் நத்தானியேல் எட்வர்ட் S.
திரு. வாவச்சன் M.P., திருமதி. உஷா ஏசுபாபு
திருமதி. அஞ்சலிதேவி பாண்ட்டுமிலி அகிபாடா

தமிழ்நாடு

சென்னை - இடம்பெயர்வோர் மத்தியில் ஊழியம்:

S. தேவதாஸ் & ஆஸ்நாத்

துதிக்க: கொரட்டூர், தண்டாலம், மணலி மற்றும் செங்குன்றம் பகுதிகளில் ஞாயிறு ஆராதனையும், வெளிப்புற சந்திப்பு ஊழியமும் தொடர்ச்சியாக நடந்து வருகின்றது; அதன் மூலம் ஒவ்வொரு மாதமும் சில புதிய விசுவாசிகள் நமது சபையில் இணைந்து கொண்டே வருகின்றனர். சென்னைக்குப் புலம் பெயர்ந்து வந்திருப்போர் மத்தியில் 5000-த்திற்கும் மேலான சுவிசேஷ கைப்பிரதிகளும், 250 புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. பீஹாரிலிருந்து புலம்பெயர்ந்து கிண்டியில் தனது மனைவியுடன் வசித்து வரும் அனில் தங்களுக்கு குழந்தை வேண்டி ஜெபித்த ஜெபத்தின் நற்பலனாக தற்போது அவரது மனைவி ராதா கர்ப்பமடைந்துள்ளார். பெருங்குளத்தூர் பகுதியில் ஊழியம் செய்ய திறந்தவாசல் கிடைத்துள்ளது. இம்மக்களுக்கென நடத்தப்பட்ட ஆத்தும ஆதாயக்கூட்டத்தில் 110 பேர் கலந்து கொண்டு, தேவாசீர்வாதம் பெற்றுச் சென்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: தொழிலாளர்கள் தினமாகிய மே 1-ம் தேதியன்று அநேகருக்கு சுவிசேஷம் அறிவிப்பதற்கென நடத்த விருக்கும் ஊழிய நிகழ்ச்சிகள் அனைத்திலும் தேவ ஆசீர்வாதம் பரிபூரணமாய் நிரம்பியிருக்க; சரீர பெலவீனங்களிலிருக்கும் சரிதா பிரபாகர் சுகமடைய; ஹிந்தி, பெங்காலி, ஒரியா மற்றும் சுசாமி மொழிகளில் சுவிசேஷத்தை எளிதாகப் புரிந்து கொள்ளும் விதங்களில் கைப்பிரதிகள் மொழிப்பெயர்க்கப்பட ஜெபிப்போம்.

மேச்சேரி:

தர்மராஜ் R.R. & மரிய செல்வி

துதிக்க: சாதபாடி கிராம நமது விசுவாசி டேவிடின் வீட்டில் ஒரு புதிய ஜெபக்குழு தொடங்கப்பட்டுள்ளது. அநேக நாட்களாக ஜெபித்த தனது ஜெபத்திற்கு கிடைத்த பதிலாக, பொன்னம்மாள் தனது நிலத்திற்குச் செல்வதற்கு சரியான சாலை வசதியைப் பெற்றுக் கொண்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: சின்ன பொண்ணுவின் கணவர் மனந்திரும்ப; நமது இளவயது விசுவாசிகளான சிவகுமார் மற்றும் இளையராஜிற்கு நல்ல வேலை வாய்ப்புகள் கிடைக்க; பண்புராம் பகுதியைச் சேர்ந்த சங்கீதா, துரைசாமி, கோவிந்தராஜ், ரவிகுமார் மற்றும் ரமேஷின் குடும்பம் தேவ இரட்சிப்பைக் கண்டடைய; குடிப்பழக்கத்திற்கு அடிமையாகிக் கிடக்கும் செல்வராஜ், பசுபதி, கண்ணதாசன் ஆகியோர் அதிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

மே
31
செவ்வாய்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. சந்திரன் K.V.
திரு. விஜயன் T., திரு. அருள் ஆசீர் D.
திருமதி. சந்தானி பர்தன் மனோஜ்குமார் பானி
திருமதி. சுவாதி ஷர்மா

அஞ்செட்டி:

டேவிட் நிக்கல்சன் & ஐவி

துதிக்க: புதிதாக 2 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. மஞ்சுகொண்டபள்ளி கிராம ஆலயத்திற்கு மின்சார இணைப்பு கிடைத்துள்ளது. பல்வேறு இடங்களுக்குச் சிதறிப்போயிருந்த நமது விசுவாசிகளைக் கண்டுபிடித்து, மீண்டும் அவர்களுடைய ஆவிக்குரிய வாழ்வு புதுப்பிக்கப்பட்டுள்ளது. தாண்டியம், ஜிக்கந்தஹள்ளி, அஞ்செட்டி ஆகிய இடங்களில் இரவு நேர ஜெபக்கூட்டங்கள் பலருக்கும் ஆசீர்வாதமாக நடைபெற்று வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: நமது விசுவாசிகளின் பிள்ளைகளான அஸ்வினி, ஏஞ்சல், ரவி சேகர், கிரண் ஆகியோருக்கு சிறந்த வாழ்க்கைத்துணைகள் அமைய; நமது விசுவாசிகளான சதீஷ், தனம், விவிலியா, கிறிஸில், தங்கம், கலாம்மா, ஜெயராஜ், பாலாஜி, கோவிந்த ராஜ் ஆகியோருக்கு தகுந்த வேலைவாய்ப்புகள் கிடைக்க; நமது புதிய தொடர்பாளர்களான தங்கம், விஜயலட்சுமி, வசந்தா, கிருஷ்ணன், ஜானகி, அருள்ஜோதி, மலர், ராஜா, வனிதா ஆகியோரது குடும்ப மக்களின் ஆவிக்குரிய நல்வாழ்விற்காக; சித்தாந்தபுரம், சின்கோட்டை, புதூர், காவிரிபுரா, மரியாலம், பெல்பட்டி, கஸ்தூர் ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்திற்குத் திறந்தவாசல் கிடைக்க ஜெபிப்போம்.

இரட்டிப்பான ஆசீர்வாதங்கள்!

மகாராஷ்டிரா, தடுகோன் பணித்தளத்தில் சிவாஜி தாட்கி என்பவர் தனது சிறு வயதிலிருந்தே குடிப்பழக்கத்திற்கும், பிசாசின் பிடிக்கும் மிகவும் அடிமைப்பட்டிருந்தார். அவருடைய மகளும் கடந்த 5 வருடங்களாக பிசாசினால் மிகவும் அலைக்கழிக்கப்பட்டு வந்தாள். அதன் விளைவாக, அவள் அடிக்கடி வீட்டை விட்டு வெளியே ஓடி, மலைகளுக்கும் பள்ளத்தாக்குகளுக்கும் சென்று அலறி கூச்சலிட்டு வந்தாள். அவளைச் சுகப்படுத்துவதற்காக பல மருத்துவர்கள் மற்றும் மந்திரவாதிகளை நாடியும், பணங்கள் செலவழிந்ததே தவிர அவள் சிறிதும் குணமடையவில்லை. நமது ஆராதனையில் அவர்கள் குடும்பமாக கலந்துக்கொண்டபோது, தேவன் அவளுக்கு அற்புதமான சுகத்தை நல்கினார். இதனால் அவர்கள் கிறிஸ்துவின் அடியவர்களாயினர். இதைக் கண்ட அவர்களுடைய கிராமத்தார் அவர்களைப் பொதுக்கிணற்றில் தண்ணீர் எடுக்க மறுப்பு தெரிவித்தனர். அவர்கள் குடிக்க தண்ணீரின்றி உஷ்ணத்தினால் தவித்த போது, அவர்கள் வீட்டினருகில் உள்ள ஒரு பாறையிலிருந்து தண்ணீர் கசிவு காணப்படுவதைக் கண்டு, அதைச் சுத்தம் செய்யவே, தேவன் அவர்களுக்கு அற்புதமாக அங்கிருந்து நல்ல தண்ணீரைச் சுரக்கச்செய்துள்ளார். அவர்கள் தேவனை சொந்தமாக ஏற்றுக்கொண்டதால், தண்ணீர் தடாகத்தையும் பெற்று தேவனை மகிமைப்படுத்தி வருகின்றனர். என்ன ஆச்சரியம்!

375 மிஷனெரி ஆல்பம்

தமிழ்நாடு, ஊட்டியைச் சார்ந்த கிறிஸ்தவரல்லாத பெற்றோருக்கு 3-வது மகனாக சகோ. M. சங்கர் 01.02.1982-ல் பிறந்தார். பின்பு இவரது பெற்றோர் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதினால், அவர்களோடு இணைந்து சகோ. சங்கரும் வாரந்தோறும் ஆலயத்திற்கு செல்வது வழக்கம். இதற்கிடையே இவர் தீய நண்பர்களோடு நட்பு கொண்டு வாழ்ந்து வந்தார். ஒருசமயம் இவரது ஆலயத்தில் வைத்து நடைபெற்ற வாலிபர் கூடுகையில் இவர் பங்குப்பெற்றபோது, அக்கூடுகையில் இவர் இரட்சிக்கப்பட்டு, தன் வாழ்வை கர்த்தருக்கென அர்ப்பணித்தார். அதன்பின் 2006-ம் ஆண்டு பெத்தேல் டேனிஷ்பேட்டையில் வைத்து நடைபெற்ற நமது மாநில முகாமில் திரு. நவநீதர் அண்ணன் அவர்களின் தேவச்செய்தியின் மூலம் வடஇந்திய காட்டுவாசி மக்கள் மத்தியிலே ஊழியம் செய்வதற்கு விருப்பம் கொண்டார். எனவே, அம்முகாமின் கடைசி நாளில் இவர் தன் வாழ்வை முழுநேர ஊழியத்திற்கென ஒப்புக்கொடுத்தார். பின்பு 09.07.2006-ல் இவர் நமது இயக்கத்தில் இணைந்து, சென்னையிலுள்ள தலைமைச்செயலகத்தில் ஊழியராகப் பணிபுரிந்து வந்தார். பின்னர் ஆந்திராவிலுள்ள பலமநேர் பணித்தளத்தில் சிறிது காலம் பணித்தள அனுபவம் பெற்று, 2007-ம் ஆண்டில் உத்தரப் பிரதேசத்திலுள்ள நமது NIM-ல் ஓராண்டு மிஷனெரிப்பயிற்சிக்கென புறப்பட்டுச்சென்றார். அதன்பின் மகாராஷ்டிரா மாநில கோதாவரி பிராந்தியத்திலுள்ள ஜம்போலி பணித்தளத்தில் வசிக்கும் காத்கிரி இனமக்களிடையே பணிசெய்து வந்தார்.

சகோதரி. ஆனந்தி, சென்னை தாம்பரத்தில் குடியேறின நாகர்கோவிலிலுள்ள வடசேரி பகுதியைச் சார்ந்த பெற்றோருக்கு 2-வது மகளாக 03.05.1984-ல் பிறந்தார். இவர் தனது தாயாரின் மூலம் இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, ஒரு ஸ்கேன் கூடுகையில் கலந்து கொண்டபோது நமது மூத்த மிஷனெரியான அருட்திரு. பிரான்சிஸ் ஜெயபால் சிங் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தன் வாழ்வை கிறிஸ்துவின் பணிக்கென அர்ப்பணித்தார். பின்பு நமது இயக்கத்தில் இணைந்து ஓராண்டு மிஷனெரிப்பயிற்சியை 2007-ம் ஆண்டில் நிறைவு செய்து, ஜார்க்கண்டிலுள்ள சாந்தனா சிறுவர் விடுதியில் 2 வருடங்கள் பணிபுரிந்து வந்தார். அதன்பின் 27.01.2009-ல் சகோ. M. சங்கரும், சகோதரி. ஆனந்தியும் தேவ தூய நியமனப்படி திருமணபந்தத்தில் இணைந்தனர். அதற்குப் பிறகு இருவருமாக இணைந்து வார்லி இனமக்கள் வசிக்கும் மகாராஷ்டிரா-சைவான் பணித்தளத்திற்கு ஊழியர்களாக அனுப்பிவைக்கப்பட்டனர். பின்பு 2012-ம் ஆண்டில் தலசாரி பணித்தளத்திற்கு அனுப்பப்பட்டு, தற்போது தஹானு பணித்தளத்தில் பணிபுரிந்து வருகின்றனர்.

தேவன் இவர்களுக்கு இருமகள்களைத் தந்து ஆசீர்வதித்துள்ளார். மூத்த மகள் லிடியா ஷாலினி (D.O.B. 09.02.2010) 7-ம் வகுப்பிலும், இளைய மகள் லெட்டிசியா ஷைனி (D.O.B. 27.04.2012) 5-ம் வகுப்பிலும் நமது டோனாவூர், சந்தோஷ வித்யாலயாவில் படித்து வருகின்றனர். இம்மிஷனெரிக் குடும்பத்தை நமது அனுதின ஜெபங்களில் நினைத்துக்கொள்வோம்.

திரு. M. சங்கர் & திருமதி. ஆனந்தி குடும்பம்

Regd. Newspaper for India No.17759/69

Published by: S. Sutharsan Thomas Jeyaraj on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. Sutharsan Thomas Jeyaraj***